2014, November 01 - 15

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/146/News/2014



ஜனாதிபதி தேர்தலும் தமிழர் அரசியலும்

மூன்றாவது பதவிக்காலத்தின் ஆபத்துக்கள்

மகிந்தவின் மின்னல் வேகமும் ரணிலின் நத்தை வேகமும்

தொடரும் மோடி அலை

## கொஸ்லாந்தை மனிதப் பேரவலம்

# சம்பவத்திற்கு பின்னர் சகலரும் புத்திசாலிகள்

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE BEST SOURCE FOR ALL YOUR NEWS




**Subscribe Today**


THE HINDU

INDIA'S NATIONAL NEWSPAPERS SINCE 1878

Call : 0712 269 442, 0117 322 783, 0117 322 781

ENCL 185, Grandpass Road, Colombo - 14, Sri Lanka.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெற்றியைப் பற்றிய விபரங்களை நீங்கள் முழுதாகக் கேட்டறியும்போது தோல்வியிலிருந்து அதை வேறு படுத்துவது பெரும் கஷ்டமான காரியமாக இருக்கும்.

- ஜீன் போல் சாத்தர்

பெற்றுக்கொள்ளப்பட்டது
10 NOV 2014


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சமகாலம்
2014, நவம்பர் 01 - 15
பக்கங்கள் - 68



12 சம்பவத்திற்குப் பின்னர் சகலரும் புத்திசாலிகள்
17 மூன்றாவது பதவிக்காலத்தின் ஆபத்துக்கள்
தென்கொரியா அனுபவம் உணர்த்தும் பாடங்கள்
22 புலிப்பிராந்தி காட்டி மக்களை
இனிமேலும் ஏமாற்ற முடியாது
26 ஜனாதிபதி தேர்தலும் தமிழர் அரசியலும்
31 மகிந்தவின் மின்னல் வேகமும்
ரணிலின் நத்தை வேகமும்
34 நேச நாடுகளைத்தேடும் மேற்குலகம்
38 வரலாற்றால் வஞ்சிக்கப்பட்ட காஸா
42 தேர்தல் கூட்டணிக்கு வழிவிட்ட
வாழ்க்கைக் கூட்டணி?
47 தொடரும் மோடி அலை
54 தாயாரின் மரபை மீட்டெடுக்கும்
முயற்சியில் பூட்டோ சர்தாரி
56 நவீன மத உருவாக்கங்களின் அரசியல்











*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து...

# பொதுவேட்பாளர்...?

அடுத்துவரக்கூடிய ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக எதிரணிக்கட்சிகளின் சார்பில் களமிறக்குவதற்கு பொதுவேட்பாளர் ஒருவரைக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் சில மாதங்களுக்கு முன்னர் இருந்ததை விடவும் உத்வேகம் குன்றியவையாகவே தற்போது காணப்படுகின்றன. பொதுவேட்பாளர் தொடர்பில் எதிரணிக் கட்சிகளை ஒரு இணக்கப்பாட்டுக்கு கொண்டுவருவதற்கான முயற்சிகளை பலமாதங்களாக முன்னெடுத்தவர் சமூக நீதிக்கான அமைப்பின் அமைப்பாளரான மாதுளுவாவே சோபித தேரர். அவரையே பொதுவேட்பாளராக நிறுத்தலாம் என்று கூட பேசப்பட்டதும் உண்டு.

மூன்று மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் சோபித தேரர் ஏற்பாடு செய்திருந்த கூட்டமொன்றிற்கு அனேகமாக சகல எதிரணிக்கட்சிகளின் தலைவர்கள் மாத்திரமல்ல, முன்னாள் ஜனாதிபதி திருமதி குமாரதுங்க, முன்னாள் பிரதம நீதியரசர்கள் என்று பெருவாரியான 'முன்னாள்'களும் வருகை தந்திருந்தனர். பொதுவேட்பாளர் விவகாரம் தொடர்பில் இறுதியாக உத்வேகத்துடன் இடம்பெற்றிருக்கக்கூடிய கூட்டம் அதுவாகத் தான் இருக்க முடியும்.

அதற்குப் பிறகு அந்த உத்வேகத்தில் படிப்படியாகத் தணிவு ஏற்படத் தொடங்கியதைக் காணக்கூடியதாக இருந்தது. இதற்கு பிரதான காரணம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனதாவிமுக்தி பெரமுனை (ஜே.வி.பி.)யின் தலைவர்களும் இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் எதிரணியின் பொதுவேட்பாளர் என்ற பெயருடன் போட்டியிட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் தங்களுக்கு இருக்கக்கூடிய அக்கறைகள் குறித்து வெளியிட்ட கருத்துகளே யாகும் என்பதில் சந்தேகமில்லை. பொதுவேட்பாளரை நிறுத்துவதற்கான முயற்சிகளுக்கு தனது ஒத்துழைப்பு இருக்குமென கூறிக் கொண்டே விக்கிரமசிங்க ஐக்கியதேசியக்கட்சியின் சார்பில் தானே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவிருப்பதாகவும் அறிவித்ததைக் காணக்கூடியதாக இருந்தது.


தனது ஜனநாயகக் கட்சியின் சார்பில் வேட்பாளரைக் களமிறக்குவது உட்பட தங்களிடம் மூன்று மாற்றுத் திட்டங்கள் இருப்பதாக பொன்சேகா கூறினார். ஐ.தே.க.வுடன் ஒருங்கிணைந்து செயற்படுவதில் தங்களுக்கு இருக்கக்கூடிய முரண்பாடுகள் குறித்து ஜே.வி.பி.யின் தலைவர்கள் கூறினார்கள். அத்துடன் மூன்றாவது பதவிக்காலத்துக்கு தேர்தலில் போட்டியிடுவதற்கு ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு தகுதியில்லை என்று கிளப்பப்பட்டிருக்கும் சர்ச்சையை தங்களது பிரதான பிரசாரப் பொருளாக்கியிருக்கும் ஜே.வி.பி.தலைவர்கள் ராஜபக்ஷ போட்டியிடுவாரேயானால், அத்தகைய 'சட்டவிரோதமான' தேர்தலை தாங்கள் பகிஷ்கரிக்கப்போவதாக அறிவித்தார்கள்.


இத்தகைய பின்புலத்திலே, ஊவாமாகாண சபைத்தேர்தல் நடந்து முடிந்ததும் நிகழ்வுப் போக்குகள் வேறு திசையெடுக்க ஆரம்பித்தன. குறிப்பாக, ஐ.தே.க.வின் செல்வாக்கு கணிசமான அளவுக்கு அதிகரித்ததைக் கண்ட விக்கிரமசிங்க பொதுவேட்பாளரைக் கண்டுபிடிக்கும் முயற்சிகளில் சம்பந்தப்படுவதில் அர்த்தமில்லை என்று உணரத்தலைப்பட்டார். அவ்வாறு பொதுவேட்பாளர் ஒருவரை எதிரணிக் கட்சிகளின் சார்பில் நிறுத்துவதென்றாலும், அந்த வேட்பாளர் ஐ.தே.க.வைச் சேர்ந்தவராகவே இருக்கவேண்டுமென்ற நிலைப்பாட்டை அவர் எடுக்கத் தொடங்கினார் என்பதற்கான தெளிவான சமிக்ஞைகள் தெரிந்தன. அண்மையில் கொழும்பில் மேயர் ஏ.ஜே.எம்.முசம்மிலின் பாரியார் பெரோசா முசம்மில் ஏற்பாடு செய்த மகளிர் சந்திப்பு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சகல எதிரணிக் கட்சிகளின் சார்பிலான பொதுவேட்பாளரே களத்தில் இறக்கப்படவேண்டும் என்பதே தனது கட்சியின் நிலைப்பாடு என்று அறிவித்தார்.


தானே ஐ.தே.க.வின் சார்பில் தேர்தலில் நிற்கப்போவதாக ஏற்கனவே அறிவித்த விக்கிரமசிங்கவின் இந்தப் புதிய அறிவிப்பை எவ்வாறு அர்த்தப்படுத்திக்கொள்வது? எதிரணிக் கட்சிகள் தங்கள் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதானால் தன்னையே பொதுவேட்பாளராக அறிவிக்க வேண்டுமென்பதை வேறு வார்த்தைகளில் அவ்வாறு சொல்லியிருக்கிறாரா? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்







## ரணிலும் தமிழ்வாக்குகளும்

கடந்த சமகாலம் இதழில் குசல்பெரேரா அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி வெற்றிபெறவேண்டுமானால், சிங்கள-பௌத்த வாக்குகளை மாத்திரம் இலக்கு வைக்காமல் சிறுபான்மையினத்தவர்களின் வாக்குகளைப் பெறுவதற்கான தந்திரோபாயத்தை வகுக்க வேண்டும் என்று ஆலோசனை கூறியிருக்கிறார்.

ஆனால், ஐ.தே.க.வின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக வரக்கூடிய எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க சிறுபான்மையினத்தவர்களை அரவணைக்கக் கூடியதான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தால், அரசாங்கத் தரப்பினர் அவர் சிங்களவர்களுக்கு துரோகமிழைப்பதாக பிரசாரங்களைத் தீவிரப்படுத்துவார்கள். அதனால், விக்கிரமசிங்க அரசாங்கத்திலிருந்து இப்போது தூரவிலகிக்கொண்டிருக்கும் சிங்கள-பௌத்த வாக்குகளை தன்பக்கம் இழுப்பதில் தான் குறியாக இருப்பார் என்பதிற் சந்தேகமில்லை.

சிங்களவர்கள் மத்தியில் பெருமளவுக்கு தனிமைப்பட்டுப் போயிருக்கும் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் குதிக்கும் பட்சத்தில் தமிழர்களுக்கோ 'முஸ்லிம்களுக்கோ எந்தவிதமான பிரத்தியேகமான உறுதிமொழிகளை அளிப்பதை நிச்சம் தவிர்ப்பார் என்றே எதிர்பார்க்கலாம்.

சிறுபான்மையினத்தவர்கள் என்னதான் இருந்தாலும் பெருமளவில் தனக்கே வாக்களிப்பார்கள் என்ற மெத்தனத்தில் விக்கிரமசிங்க இருக்கவும் கூடும். சிறுபான்மையினத்தவர்கள் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளவேண்டும்.

குமாரசாமி நந்தகோபன்,
தொண்டமானாறு

## பேராசிரியர்களின் தகராறு

ஆளும் கட்சி எம்.பி.யான பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க அண்மைக்காலமாக ராஜபக்ஷ அரசாங்கத்தை கடுமையாக விமர்சிக்க ஆரம்பித்திருக்கிறார். சமகாலம் பிரசுரித்த அவரது கட்டுரைகள் பலவற்றில் அவர் அரசாங்கம் வெளியுறவு விவகாரங்களில் செய்கின்ற தவறுகளுக்கெல்லாம் வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸையே முழுப்பொறுப்பாளியாக்கும் தொனியில் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார். நாட்டு நிருவாகத்தை ஒரு குடும்பமே நடத்துகின்ற நிலையில், வெளியுறவு விவகாரங்களில் மட்டும் பேராசிரியர் பீரிஸை அக்குடும்பம் சுயாதீனமாகச் செயற்பட அனுமதிக்கிறது என்று நம்புவது கஷ்டமாக இருக்கிறது. எனவே சர்வதேச விவகாரங்களை வெளியுறவு அமைச்சு பிழையான முறையில் கையாளுகிறதென்றால் அதற்கும் ஆளும் குடும்பத்தினரினதும் அவர்க

## மொழி பெயர்ப்பு கலாசாரம்

சமகாலத்தில் பிரசுரிக்கப்படுகின்ற கட்டுரைகளில் பெரும்பாலானவை ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப்படுபவையாகவே இருக்கின்றன. மொழிபெயர்ப்பு என்று உணரமுடியாத அளவுக்கு சரளமான தமிழ் நடையில் அக்கட்டுரைகள் அமைவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. வேற்று மொழியில் வருகின்ற அரசியல் கட்டுரைகளை வளமான தமிழில் தருகின்ற ஒரு நேர்த்தியான மொழிபெயர்ப்பு கலாசாரத்தை சமகாலம் ஊக்குவிப்பது பெரிதும் மெச்சுதற்குரியது.

சிதம்பரநாதன் செல்லையா,
கரவெட்டி

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளின் கையாட்களினதும் தலையீடுகள் தான் காரணமாக இருக்கவேண்டும் என் பதை பேராசிரியர் விஜேசிங்க உணர்ந்துகொள்ள ஏன் மறுக்கிறார்? ஆளும் கட்சியின் தேசியப்பட்டியல் மூலமாக பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்த பேரா சிரியர் விஜேசிங்க ஆரம்பத்தில் வெளியுறவு அமைச்சர் பதவியில் (அல்லது பிரதி வெளியுறவு அமைச்சர் பதவியில்) கண்வைத்து அது கைகூடாமல் போன தால் தான் பேராசிரியர் மீது குறைகண்டு பிடித்து எழுதிக் கொண்டிருக்கிறாரோ?

மாசிலாமணி கணபதிராஜன், வெள்ளவத்தை.

## செய்தி ஆய்வுகள்

சமகாலம் சஞ்சிகையில் வெளியாகின்ற செய்தி ஆய்வுகள் தமிழ் இதழியலுக்கு ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்க்கின்றன என்று நிச்சயமாகச் சொல்லமுடியும். முக்கியமான இரு சர்வதேச செய்திகளைத் தெரிந்தெடுத்து அவற்றின் பின்புலங் களை விளக்குவதுடன் எதிர்காலத்தில் நேரக்கூடிய விளைவுகளையும் பற்றி எடுத்துக் கூறும் இந்த செய்தி எடுத்துரைப்புப் பாணி மேலும் வளர்த்தெடுக்கப் பட வேண்டியதாகும்.

குழந்தைவேல் சுரேந்திரன், சங்கரத்தை, வட்டுக்கோட்டை

## திரைவிமர்சனம்

சமகாலத்தின் கடந்த சில இதழ்களில் திரைவிமர்சனங்களைக் காண முடிய வில்லை. ஏனைய இதழ்களில் வருவதைப் போலன்றி, ஆரோக்கியமான திரை விமர்சனப் பாணியைக் கையாண்டு எழுதுகிற மயூரா, இராகவன் ஆகியோரின் ஆக்கங்கள் தொடர்ந்து பிரசுரிக்கப்படவேண்டும். ஆரம்ப காலம் முதலிருந்தே இச்சஞ்சிகையின் வாசகர் என்ற முறையில் நான் முன்வைக்கும் இவ்வேண்டு கோளை ஆசிரியர் குழு கவனத்தில் எடுக்கும் என்று நம்புகிறேன்.

செல்வி அபர்ணா கலைச்செல்வன், அன்புவழிபுரம்.

## சில இதழ்களில்....

சமகாலத்தின் சில இதழ்களில் கார்ட்டூனை காண முடியவில்லை. அதேபோன்றே திரை விமர்சனங்களையும் காண முடியவில்லை. சகல துறைகளையும் சார்ந்த ஆக்கங்கள் ஒவ்வொரு இதழிலும் பிரசுரமாகும் போதே அது முழுமை பெறுகிறது. தொடக்கத்திலிருந்தே இச்சஞ்சிகையின் கிரமமான வாசகி என்ற முறையில் இதை கூறுகிறேன். இதை ஆசிரியர் குழு அதன் கவனத்திலேடுத்து அந்த குறைப்பாடுகள் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதை உறுதி செய்யும் என்று நம்புகிறேன். ஆரம்பத்தில் விளையாட்டுத்துறை சம்பந்தப்பட்ட கனதியான ஆக்கங்கள் பிரசுரமாகின. அவை இடைநடுவில் நிறுத்தப்பட்டதையும் ஆசிரியர் குழுவின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

செல்வி வாசுகி ஜெகதீசன், கொடிகாமம்.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 03 இதழ் 09
2014, நவம்பர் 01- 15

A Fortnigtly Tamil News Magazine

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
தொலைபேசி : +94 11 7322700
ஈ-மெயில்: samakalam@ex-pressnewspapers.lk

ஆசிரியர்
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)


உதவி ஆசிரியர்
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

பக்க வடிவமைப்பு
எம்.ஸ்ரீதரகுமார்

ஒப்பு நோக்கல்
என்.லெப்ரின் ராஜ்

வாழ்வின் நம்பிக்கை மிக்க பக்கத்தையே எப்போதும் நான் பார்த்துக்கொண்டிருக்கி றேன். ஆனால், வாழ்க்கை சிக்கல் மிகுந்த ஒரு விவகாரம் என்பதைத் தெரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு நான் யதார்த்த பூர்வமானவனாக இருக்கிறேன்.

வால்ட் டிஸ்னி



வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
சமகாலம்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

பெக்ஸ்; 011 7778752, 011-7767704, 011-2327827,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குமூலம்....




'எமது கட்டணங்களையே நாம் செலுத்துவோம், மற்றையவர்களின் கட்டணங்களையல்ல' என்பதே எந்தவொரு தேர்தலிலும் மக்களின் சுலோகமாக இருக்கவேண்டும். மின்சாரப் பாவனையாளர்கள் மற்றையவர்களின் கட்டணங்களையும் மற்றையவர்கள் செய்யும் பாவங்களின் சுமைகளையும் தாங்கிக் கொள்ளத் தயாராயில்லை.

**தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சர்**
**சம்பிக்க ரணவக்க**




அரசாங்க ஊழியர்களின் குறைந்தபட்ச மாதாந்தச் சம்பளம் 15 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி தனது பட்ஜெட் உரையில் செய்த அறிவிப்புக்கு பெரும் விளம்பரம் கொடுக்கப்படுகிறது. தற்போதைய குறைந்தபட்ச சம்பளம் 11,730 ரூபாவாகும். வாழ்க்கைச் செலவுப்படியையும் (ரூபா 2510) சேர்த்துப் பார்த்தால் அது 14, 240 ரூபாவாகிறது. எனவே உண்மையில் செய்யப்பட்ட சம்பள அதிகரிப்பு வெறுமனே 760 ரூபா தான்.

**ஐக்கியதேசியக் கட்சி எம்.பி. எரான் விக்கிரமரத்ன**



விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை அவசியம் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார். ஆனால், உண்மையில் பயங்கரவாதம் உருவெடுத்ததற்கு முழு முதற் காரணமே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவிதான்.

**ஜாதிக ஹெலஉறுமய எம்.பி**
**அத்துரலியே ரத்தினதேரர்**



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைப் போன்று முன்னாள் பிரதமர்கள் டி.எஸ்.சேனநாயக்க, டட்லி சேனநாயக்க, எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்க ஆகியோருக்கு இணையான தலைவர் இன்று இலங்கையில் யாருமே இல்லை.

**பிரதமர் டி.எம்.ஜெயரத்ன**



பாராளுமன்றம் கூடுகின்ற நாட்களில் பாராளுமன்ற உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவு 10சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், எம்.பி.க்களுக்கான கொடுப்பனவு அதிகரிக்கப்படவில்லை. ஜனாதிபதி சமர்ப்பித்த பட்ஜெட்டின் மூலம் எந்தப் பலனையும் பெறாதவர்கள் எம்.பி.க்கள் தான் என்று எனது சகாக்கள் கூறுகிறார்கள்.

**அமைச்சர் சுசில் பிரேமஜயந்த**



ஒவ்வொரு தேர்தலிலும் அரசாங்கம் என்னை துரோகியென்று வர்ணிக்கிறது. முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகாவின் வாக்குரிமை இல்லாமல் செய்ததுடன் புலிகள் இயக்கத்தின் முன்னாள் தலைவர் கே.பி.க்கு வாக்குரிமையைக் கொடுத்தவர்கள் துரோகிகளா நாங்கள் துரோகிகளா? விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை ஜனாதிபதி அமெரிக்காவில் சந்தித்தாரா இல்லையா?

**எதிர்க்கட்சித் தலைவர்**
**ரணில் விக்கிரமசிங்க**




என்னைச்சுற்றி காலியாக இருக்கும் ஆசனங்களையே காண்கிறேன். எம்.பி.க்கள் அடிக்கடி சபைக்கு வராமல் இருக்கிறார்கள் என்றால், மில்லியன் கணக்கில் பணத்தைச் செலவு செய்து பாராளுமன்றக் கூட்டங்களை நடத்துவதில் அர்த்தமில்லை. பணம் வீணாக விரயம் செய்யப்படாதிருப்பதை உறுதிசெய்வதற்கு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பாராளுமன்றக் கூட்டத் தொடர்களை நடத்தினால் போதுமானது என்பது எனது யோசனை .

**பாராளுமன்றத்தில் பிரதமர் டி.எம்.ஜெயரத்ன**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு

# ஆசியாவுக்கான ஒரு புதிய வங்கி



சீனத்தலைநகர் பெய்ஜிங்கில் உள்ள மக்கள் மகா மண்டபத்தில் அக்டோபர் 24, 2014 நடைபெற்ற ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் அங்குரார்ப்பண நிகழ்வில் ஏனைய உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுடன் சீன ஜனாதிபதி சி ஜின் பிங்

அமெரிக்காவின் ஆதிக்கத்திலான உலகவங்கிக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் மாற்றாக அமையக்கூடியதாக கடந்த ஜூலை மாதம் பிரேசிலில் நடைபெற்ற உச்சி மகாநாட்டில் பிரிக்ஸ் (BRICS அமைப்பு நாடுகள் புதிய அபிவிருத்தி வங்கியொன்றை (New Development Bank) ஆரம்பித்திருந்தன. பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் துரிதமாக வளர்ந்து வரும் தங்களது சந்தைகள் மத்தியில் ஆற்றல்மிக்க நிதித் துறை மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்குடனேயே முதலில் "BRICS Development Bank" என்று அழைக்கப்பட்ட இவ்வங்கியை சீனாவின் ஷங்காய் நகரைத் தலைமையகமாகக் கொண்டு அமைத்தன.

அது அமையப்பெற்று மூன்று மாதங்களுக்கிடையில் சீனா, இந்தியா உட்பட 21 நாடுகளினால் அக்டோபர் பிற்பகுதியில் பெய்ஜிங்கில் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (Asian Infra-structure Investment Bank-AIIB) என்ற பெயரில் இன்னொரு பல்தரப்பு வங்கி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பிரிக்ஸ் நாடுகள் புதிய அபிவிருத்தி வங்கியை அமைப்பதற்கு மேற்கொண்ட ஜூலை தீர்மானத்தின் இயல்பான ஒரு தொடர் விளைவே ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி என்று பொருளியல் நிபுணர்கள் வர்ணிக்கிறார்கள்.

பிரிக்ஸ் அமைப்பு உலகில் துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் வலிமையான பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளை பிரதிபலித்து நிற்கின்ற அதேவேளை, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியை அமைக்கும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட நாடுகள்- வறிய மட்டம் தொடக்கம் மத்தியதர மட்டம் வரை - பொருளாதார அபிவிருத்தியின் வேறுபட்ட கட்டங்களில் இருப்பவையாகக் காணப்படுகின்றன. பிரிக்ஸ் வெறுமனே ஐந்து நாடுகளை மாத்திரம் கொண்டது. மற்றையது 21 நாடுகளை அங்கமாகக் கொண்டது. ஆனால், இத்தகைய பொருளாதார வளர்ச்சி மட்டங்களின் வேறுபாடுகள் மற்றும் எண்ணிக்கை வித்தியாசங்கள் இருக்கின்ற போதிலும், தங்களது சொந்தத்தில் வங்கிகளை அமைப்பதற்கு தீர்மானத்தை எடுப்பதற்கு அவற்றைத் தூண்டிய கோட்பாடும் தேவையும் ஒரேமாதிரியானவை என்பது கவனிக்கத்தக்கது.

உண்மையில் சீனாவும் இந்தியாவுமே இவ்விரு புதிய பல்தரப்பு வங்கிகளை அமைப்பதற்கான முன்முயற்சிகளின் இருபிரதான தூண்களாக விளங்குகின்றன. ஆசியாவில் புதியதொரு வங்கியை ஆரம்பிக்க வேண்டுமென்ற யோசனையை முதன் முதலில் ஒருவருடத்துக்கும் சற்று அதிகமான காலத்துக்கு முன்னர் சீனாவே முன்வைத்தது. அந்த யோசனை நடைமுறைச் சாத்தியமாகாதிருப்பதை உறுதி செய்துகொள்வதற்கு அமெரிக்கா கடுமையான முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் கூட, வங்கியின் தோற்றத்தைத் தடுக்க முடியாமற் போய்விட்டது. சீனாவின் இந்த முன்முயற்சியில் பின்னர் இந்தியாவும் இணைந்துகொண்டமை வங்கிக்கு ஒரு பரந்தளவிலான அங்கீகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத்தைப் பெற்றுக்கொடுத்திருக்கிறது.

ஜப்பான், அவுஸ்திரேலியா, தென் கொரியா மற்றும் இந்தோனேசியா போன்ற சில நாடுகள் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியில் உறுப்புரிமை பெறுவதற்கு முன்வரவில்லை. வங்கி தொடர்பில் அமெரிக்காவுக்கு இருக்கும் ஆடசேபனைகளே இந்த நாடுகளின் தயக்கத்துக்கான காரணமாகக் கருதப்படுகிறது. ஆனால், அவுஸ்திரேலியா, இந்தோனேசியா, தென்கொரியா ஆகிய நாடுகள் சீனாவுடன் பரந்தளவிலான வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டவை. அமெரிக்காவின் அதிருப்தியைச் சம்பாதிக்காதிருப்பதற்கும் உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார வல்லமை கொண்ட நாடாக விளங்கும் சீனாவுடனான உறவுகளைப் பேண வேண்டிய அவசியத்துக்கும் இடையே இந்த நாடுகள் ஒரு தெளிவான தெரிவைச் செய்யவேண்டியவையாக இருக்கின்றன. ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் வளர்ச்சிப் போக்கை ஒரு ஓரமாக நின்று அவதானித்துவிட்டு பிறகு அந்த நாடுகள் அவ்வங்கியில் தாங்களாகவே வந்து இணைந்து கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை என்று சர்வதேச பொருளாதாரத்துறை நிபுணர்களும் அரசியல் அவதானிகளும் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள்.


*(16ஆம் பக்கம் பார்க்க...)*

# குடியேற்றவாசிகள் தொடர்பான கனடாவின் தாராள மனப்பான்மைக்கு ஊறுவருமா?

குடியேற்றவாசிகளை வரவேற்பதில் நீண்டதொரு பாரம்பரியத்தை வெற்றிகரமாக நிலைநிறுத்தி வந்திருக்கும் நாடு கனடா. அதன் சுமார் 3கோடி 50 இலட்சம் சனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் வெளிநாடுகளில் பிறந்தவர்கள். 10 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் 2006 ஆம் ஆண்டுக்கும் பிறகு குறிப்பாக, ஆசியா மற்றும் மத்திய கிழக்கில் இருந்து வந்தவர்கள். இஸ்லாமியர்களே கனடாவின் இரண்டாவது பெரிய மதப்பிரிவினராக இருக்கிறார்கள்.

இத்தகையதொரு நாட்டில் அக்டோபர் 22ஆம் திகதி பாராளுமன்றத்திற்குள் புகுந்து இஸ்லாமியத் தீவிரவாதி மேற்கொண்ட துப்பாக்கித் தாக்குதலையடுத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் கடுமையாகத் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன. பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டங்களை மேலும் கடுமையாக்கும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றையடுத்து குடியேற்றவாசிகள் மற்றும் சிறுபான்மையினத்தவர்க்ள் தொடர்பில் அங்கு கடைப்பிடிக்கப்பட்டுவரும் தாராள மனப்பான்மையுடனான கொள்கைகளுக்கும் நடைமுறைகளுக்கும் பாதிப்பு ஏற்படுமோ என்ற ஐயம் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் மத்தியில் தோன்றியிருக்கிறது.





பாராளுமன்றத்தில் தாக்குதல் நடத்திய தீவிரவாதி மைக்கேல் சிஹாப்-பிபியூ. இவனின் தாயார் கனேடியர். தந்தை லிபியாவை சேர்ந்தவர்.


தலைநகர் ஒட்டாவாவில் பாராளுமன்றத்தில் நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து 'கனடாவின் கரவின்மைக்கு (InnoCence) முடிவு வந்துவிட்டது' என்று வர்ணிக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

கனடாவைப் பொறுத்தவரை பயங்கரவாதம் புதியதொன்றல்ல. ஏனைய மேற்கு நாடுகளைவிடவும் வெகு முன்னதாகவே கனடா பயங்கரவாதத் தாக்குதல்களின் அனுபவத்தைக் கொண்டிருக்கிறது.

1970ஆம் ஆண்டு கியூபெக் விடுதலை முன்னணி பிரிட்டிஷ் இராஜதந்திரியொருவரையும் கியூபெக் மாகாண தொழில் அமைச்சரையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்தி ஆய்வு



தீவிரவாதியை சுட்டுக்கொன்ற பாராளுமன்ற படைக்கலச் சேவிதர் கெவின் விக்கேர்ஸை பாராட்டும் கனேடிய பிரதமர் ஸ்ரீபன் ஹார்பர்

கடத்திச் சென்றதையடுத்து இரு மாதங்கள் நீடித்த அந்த 'கடத்தல் நாடகத்தின்போது' பிரதமர் பியரிரூடோ அந்த மாகாணத்துக்கு இராணுவத்தை அனுப்பியதுடன் குடியியல் சுதந்திரங்களையும் இடைநிறுத்தினார். அதற்கு முதல் வருடம் கியூபெக் விடுதலை முன்னணி தீவிரவாதிகள் மொன்ட்ரீல் பங்குச்சந்தை கட்டிடத்தில் சக்திமிக்க குண்டொன்றை வெடிக்க வைத்தன.

1985ஆம் ஆண்டு மொன்ட்ரீலில் இருந்து கிளம்பிச் சென்ற எயார் இந்தியா விமானம் நடுவானில் வெடித்துச் சிதறியதில் அதில் பயணம் செய்த 329பேரும் கொல்லப்பட்டனர். அவர்களில் பெரும்பான்மையானவர்கள் இந்திய வம்சாவளியினரான கனடியப் பிரஜைகள். கனடா நடத்திய விசாரணைகளையடுத்து விமானத்தைக் குண்டு வைத்து தகர்த்ததற்கு கனடாவை மையமாகக் கொண்டியங்கும் காலிஸ்தான் குழுவான பாபர்கால் சாவே பொறுப்பு' என்று கண்டறியப்பட்டது.

அருகாமையில் உள்ள போர் நினைவாலயத்தில் காவல் கடமையில் இருந்த படைவீரரைச் சுட்டுக்கொன்றுவிட்டு (கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாத) பாராளுமன்றக் கட்டிடத்திற்குள் புகுந்து தீவிரவாதி நடத்திய துப்பாக்கித் தாக்குதல், 1984 ஆம் ஆண்டு கியூபெக் தேசிய சட்டசபை கட்டிடத்திற்குள் புகுந்த மூளை குழம்பிய படைவீரர் ஒருவர் மூன்று பேரைச் சுட்டுக் கொலை செய்த சம்பவத்தை நினைவுக்குக் கொண்டுவருகிறது. பாராளுமன்றத்தின் படைக்கலச் சேவிதரால் (Sergent –at- arms) சுட்டுக் கொலை செய்யப்பட்ட அந்த தீவிரவாதியின் நோக்கங்கள் பற்றி பல் வேறுவிதமான அபிப்பிராயங்கள் வெளியாகிய போதிலும், கனடா அமைதியிழந்து போயிருக்கிறது என்பதிற் சந்தேகமில்லை. பாராளுமன்றத்தில் தாக்குதல் இடம்பெறுவதற்கு இரு நாட்கள் முன்னதாக மொன்ட்ரீலுக்கு அண்மையாக ஒரு நபர் வாகனத்தால் இரு படைவீரர்களை மோதிய சம்பவம் இடம்பெற்றது. அதில் ஒரு படைவீரர் பலியானார். அந்த நபர் இஸ்லாமிய அரசு தீவிரவாதிகளின் செயற்பாடுகளினால் உந்தப்பட்ட ஒருவராக இருக்க வேண்டுமென்று விசாரணையாளர்கள் சந்தேகிக்கிறார்கள்.

ஈராக்கிலும் சிரியாவிலும் இஸ்லாமிய அரசுக்கு எதிராக அமெரிக்கா தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இராணுவ நடவடிக்கைகளில் கனடாவும் பங்கேற்பதற்கு கடந்த மாதம் பாராளுமன்றம் அளித்த அங்கீகாரத்தையும் பாராளுமன்றக் கட்டிடத்தில் இடம்பெற்ற தாக்குதலையும் தொடர்புபடுத்தியும் பேசப்படுகிறது. ஆனால், இரண்டு சம்பவங்களுக்கும் பின்னணியில் பெரியதொரு சதித்திட்டம் இருந்திருக்கிறது என்பதற்கான சான்றுகள் இன்னமும் வெளிப்படவில்லை.

இனிமேல் பாதுகாப்பு விவகாரங்களில் கனடா கூடுதலான அளவுக்கு கூருணர்வுடையதாக இருக்கப் போகிறது என்பது தவிர்க்க முடியாததே. கனடாவை அச்சுறுத்தி அடிபணிய வைக்க முடியாது என்று பிரதமர் ஸ்ரீபன் ஹார்பர் கூறினார். தாக்குதல் இடம்பெற்றதற்கு மறுநாள் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் கூடுதலான அளவுக்கு கடுமையான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் அவசியம் என்று வலியுறுத்தினார்.

பயங்கரவாத சந்தேக நபர்களை தடுப்புக்காவலில் வைத்திருப்பது உட்பட கூடுதலான அதிகாரங்களை கனடிய பாதுகாப்பு புலனாய்வு சேவைக்கு வழங்குவதற்கான புதிய சட்டமூலம் கொண்டுவரப்படும் தறுவாயில் ஏற்கனவே இருந்தது. தீவிரவாதி பாராளுமன்றத்தில் தாக்குதல் நடத்திய அதே தினம் அச்சட்டமூலம் அங்கு சமர்ப்பிக்கப்படவிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அதை விரைவாகவே நிறைவேற்றும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபடும் என்பதிற் சந்தேகமில்லை.


கணிசமான எண்ணிக்கையில் முஸ்லிம்கள் உட்பட பெரிய குடியேற்றவாசிகள் சனத்தொகையைக் கொண்ட கனடாவின் பயங்கரவாத எதிர்ப்பு சட்டங்களும் எதிர்காலப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் நிதானமானமுறையில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்வது அவசியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**கொஸ்லாந்தையில் யார் செய்த தவறுக்கு யார் விலை செலுத்தியிருக்கிறார்கள்? மண்ணுக்குள் உயிருடன் புதைந்து போனவர்களின் உண்மையான எண்ணிக்கை என்றென்றைக்குமே தெரியவராமல் போகலாம்....!**


2004 டிசம்பர் சுனாமிக்குப் பிறகு இலங்கையை பெரும் சோகத்தில் ஆழ்த்திய மிகவும் பாரதூரமான இயற்கை அனர்த்தம் என்றால் அது பதுளை மாவட்டத்தின் கொஸ்லாந்தையில் உள்ள மீரியபெத்தை தேயிலைத் தோட்டப்பகுதியில் இடம் பெற்ற கோரமிகு மண்சரிவுதான். இலங்கையில் வரலாற்றிலேயே இடம்பெற்றிருக்கக்கூடிய படுமோசமான மண்சரிவு அனர்த்தமும் இதுவே என்று வர்ணிக்கப்படுகிறது.

75 தோட்டத்தொழிலாளர் குடும்பங்கள் வாழ்ந்த லயன்வீடுகள் மண்ணுக்குள் புதையுண்டுபோயிருக்கின்றன. பாடசாலைக்குச் சென்ற பிள்ளைகளையும் வேலைக்குச் சென்றவர்களையும் தவிர சுமார் 300 பேர் வரை



இயற்கையின் சீற்றம்






# சம்பவத்துக்குப் பின்னர் சகலரும் புத்திசாலிகள்

எம்.சண்முகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பெரும்பாலானவர்கள் பெண்கள்) மாண்டிருக்கலாம் என்று ஆரம்பத்தில் அஞ்சப்பட்டது. இதை எழுதிக் கொண்டிருக்கும்வரை அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்ட தகவல்களின்படி சுமார் 100 பேர்வரை காணாமல் போயிருப்பதாகவும் அவர்கள் சுமார் 30-40 அடி ஆழத்தில் சகதிக்குள் புதைந்து இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், மீரியபெத்தை தோட்டப்பகுதி வாசிகள் மாண்டுபோனவர்களின் தொகை 200 வரை இருக்குமென்று கூறுவதாகவும் செய்திகள் வெளியாகின்றன.

இயற்கையின் இந்தக் கோரத்தாண்டவத்தில் மாண்டு போனவர்களின் உண்மையான எண்ணிக்கை என்றென்றைக்குமே தெரியவராமல் போகவும் கூடும். இதற்குக் கூறப்படுகின்ற காரணங்களில் முக்கியமானது அக்டோபர் 29 புதன்கிழமை காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற நான்கு நிமிட அனர்த்தத்தில் மண்ணுக்குள் புதையுண்டுபோன வீடுகள் மற்றும் அலுவலகங்களில் கிராம உத்தியோகத்தர் அலுவலகமும் அடங்குகின்றது என்பதாகும். அந்த அலுவலகத்தில்தான் குடித்தொகைப்பதிவு ஆவணங்கள் பேணப்பட்டுவந்தன.





இதனிடையே பொலிஸ் திணைக்களம் வித்தியாசமான புள்ளிவிபரங்களை வெளியிட்டுக் கொண்டிருக்கும் விசித்திரத்தையும் காணக்கூடியதாக இருக்கிறது. மண்சரிவு இடம்பெற்ற நான்காவது நாள் பொலிஸ் பேச்சாளர் வெளியிட்ட அறிவிப்பொன்றில் தங்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய விபரங்களின்படி நான்கு பேரே இறந்ததாகவும் 33 பேரைக் காணவில்லை என்றும் கூறியிருந்தார்.

மண்சரிவுக்குப்பிறகு தொடர்ந்தும் மழை கடுமையாகப் பெய்து கொண்டிருந்த காரணத்தால் மீட்புப் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. உயிருடன் தப்பியிருக்கக்கூடியவர்களில் எவரையாவது மீட்பதற்கு இருந்திருக்கக்கூடிய வாய்ப்பை இது இல்லாமற்செய்துவிட்ட கொடுமை.

அரசாங்கமும் சிவில் சமூக அமைப்புகளும் அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த இயற்கை அனர்த்தம் நிகழ்ந்த மறுநாள் ஹல்துமுல்ல, கொஸ்லாந்தை பகுதிகளுக்கு மேலாக ஹெலிகொப்டரில் சென்று இயற்கையின் தாண்டவத்தின் பாரதூரத்தன்மையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பார்வையிட்டார். பிறகு அவர் மீரியபெத்தை பகுதியிலும் அதன் அயல் பகுதிகளிலும் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் பாடசாலைகள் மற்றும் இடங்களுக்குச் சென்று நிவாரண உதவிகளையும் வழங்கினார். அமெரிக்கா, இந்தியா போன்ற வெளிநாடுகளும் சர்வதேச அமைப்புகளும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முன்வந்திருக்கின்றன. ஆனால், அந்தமக்களுக்கு தாராளமாக நிவாரணங்களை வழங்குவதற்குப் போதுமான வளங்கள் தங்களிடம் இருப்பதாக அரசாங்கத்தரப்பில் அறிவிப்பு வெளியானதையும் காணக்கூடியதாக இருந்தது.

பெற்றோரை இழந்து தவிக்கும் சிறுவர்கள் மீது விசேட கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி ராஜபக்ஷ பிரத்தியேகமான உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார். சுனாமி அனர்த்தத்தில் பெற்றோரை இழந்த சிறுவர்களை தங்களது பிள்ளைகள் என்று பழிபாவத்துக்கு அஞ்சாத சக்திகள் தீய நோக்கத்துடன் உரிமைகோரிய சம்பவங்களின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த உத்தரவை ஜனாதிபதி பிறப்பித்திருக்கிறார் என்பது தெளிவானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்சரிவு இடம்பெறுவதற்கு முன்னதாக மீரியபெத்தை பகுதியில் இருந்து சுமார் 75 சிறுவர்கள் பாடசாலைக்குச் சென்றதாக முதலில் கணிப்பிடப்பட்டிருந்தது. அனேகமாக அவர்கள் சகலருமே தங்கள் பொற்றோரை, குடும்பத்தவர்களை, உறவினர்களை இழந்துவிட்டார்கள் என்றுதான் கூறவேண்டும்.

இலகுவாக கண்காணிக்கப்படக்கூடிய பொது இடங்களில் சிறுவர்களை பாதுகாப்பாக வைத்திருக்குமாறு அல்லது அவர்கள் எதிர்காலத்தில் பராமரிக்கக்கூடிய உறவினர்களிடம் கையளிக்கப்படும் வரை சிறுவர் நலன்கள் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களில் புகலிடம் வழங்குமாறு







ஜனாதிபதி கேட்டிருக்கிறார். இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய சிறுவர்களைப் பற்றிய தகவல்கள் இருந்தால் தந்துதவுமாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அப்பகுதி மக்களைக் கேட்டிருக்கிறது.


இது இவ்வாறிருந்த மலையகத்தில் மண்சரிவு அபாயம் இருப்பதாகக் கூறப்பட்ட பகுதிகள் தொடர்பில் பல வருடங்களுக்கு முன்னரே எச்சரிக்கை செய்யப்பட்டதாக மண்ணுக்குள் 200 குடும்பங்கள் புதையுண்டு போனதன் பின்னர் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் இப்போது கூறிக்கொண்டிருக்கும் விசித்திரத்தைக் காண்கிறோம்.

மண்ணுக்குள் புதைந்துபோன மீரியபெத்தை தோட்டக் குடியிருப்புப்பகுதிக்கு அண்மையாக இருக்கும் வேறு இரு மலைப்பகுதிகளிலும் மண்சரிவு அபாயம் இருப்பதாகக் கூறப்படுகிறது. 2005ஆம் ஆண்டு இவ்வாறான மண்சரிவு அபாய எச்சரிக்கையை அதிகாரிகள் விடுத்திருந்த போதிலும், ஏன் அந்த மக்களை அங்கிருந்து அப்புறப்படுத்தி வேறு பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை? இந்த மகா தவறுக்கு யார் பொறுப்பு? அந்தப் பகுதியில் மண்சரிவு ஆபத்து இருப்பதாக விடுக்கப்பட்ட எச்சரிக்கை குறித்து தாங்கள் அறிந்திருக்கவில்லை என்று வேறுயாருமல்ல இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான தொண்டமானே பத்திரிகைப் பேட்டியொன்றில் கூறியதைக் காணக்கூடியதாக இருந்தது.

தாங்கள் குடியிருப்பதற்கு மாற்று வீடுகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததாலேயே அங்கிருந்து வெளியேறவில்லை என்று அப்பகுதி மக்கள் கூறுகிறார்கள். யார் விட்ட தவறுக்கு யார் விலைசெலுத்தியிருக்கிறார்கள்?

வியர்வையையும் கண்ணீரையும் சிந்தி உழைத்து இலங்கையின் பொருளாதாரத்துக்கு பெரும் பங்களிப்பைச் செய்துகொண்டிருக்கின்ற ஏழைத் தோட்டத்தொழிலாளர்கள் நாட்டின் ஏனைய தொழிலாளர் வர்க்கப் பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









களையும் விட படுமோசமான இயற்கைப்பாதிப்புச்சூழலில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். மண்சரிவு மாத்திரமல்ல வேறுபல இயற்கை அனர்த்தங்களினாலும் அவர்கள் காலங்காலமாக பாதிக்கப்பட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். இயற்கை அனர்த்தங்கள் மாத்திரமல்ல மோசமான பொருளாதார நெருக்கடியினாலும் பாதிக்கப்படுகின்ற மக்கள் பிரிவினராகவும் அவர்களே விளங்குகிறார்கள்.

இலங்கையின் 2 கோடி 10 இலட்சம் சனத்தொகையில் சுமார் 5 சதவீதத்தினராக (சுமார் 15 இலட்சம்) இருக்கும் மலையக தோட்டத்தொழிலாளர் சமூகத்தின் 11.4 சதவீதமான குடும்பங்கள்

*(16ஆம் பக்கம் பார்க்க...)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(10ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

உலகவங்கி மற்றும் சர்வதேச நாணயநிதியம் போன்ற பல்தரப்பு நிதிநிறுவனங்களின் உதவிகளைப் போதியளவுக்கு பெறமுடியாமல் இருக்கின்ற வளர்முக நாடுகளின் நிதித்தேவை களைப் பூர்த்தி செய்வதே ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியினதும் பிரிக்ஸ் அபிவிருத்தி வங்கியினதும் நோக்கமாகும். உலகவங்கியும் சர்வதேச நாணய நிதியமும் இரண்டாவது உலகமகாயுத்தத்தின் முடிவுக்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்டவை. அவற்றின் பிரதான நோக்கம் போருக்குப் பிறகு பெரும் நிதி நெருக்கடியில் சிக்கியிருந்த தனவந்த உலகின் உறுப்பு நாடுகளுக்கு உதவுவதாகவே இருந்தது. வளர்முக நாடுகளின் தேவைகளையும் நிலைவரங்களையும் அவ்விரு சர்வதேச நிதி நிறுவனங்களும் விளங்கிக் கொண்டு செயற்படவில்லை. இவ்விரு நிறுவனங்களும் அவற்றின் ஆளுகைக் கூட்டமைப்பு களையும் மனப்போக்குகளையும் கொள்கைகளையும் மாற்றிக்கொள்வதாக அளித்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை.

2008ஆம் ஆண்டு உலகளாவிய நிதிநெருக்கடி ஏற்பட்டபோது வளர்முக நாடுகளின் தேவைகளை கூடுதலான அளவுக்கு கவனிக்கக்கூடிய வையாக உலகவங்கியையும் சர்வதேச நாணய நிதியத்தையும் மாற்றுவதாகவும் அவற்றின் முகாமைத்துவத்தில் சீனா, இந்தியா போன்ற நாடுகளுக்கு முன்னரைக் காட்டிலும், கூடுதல் பாத்திரத்தைக் கொடுப்பதாகவும் தனவந்த நாடுகள் இணங்கிக் கொண்டன. ஆனால், அந்த நிதிநெருக்கடி தணிந்துபோனதுதான் தாமதம் உறுதிமொழிகள் எல்லாம் காற்றில் பறக்கவிடப்பட்டன.

பிரிக்ஸ் வங்கியும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியும் 'பிரெட்டன் வூட்ஸ் இரட்டையர்கள்' என்று வர்ணிக்கப்படுகின்ற உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் சுமார் 70 ஆண்டுகால மேலாதிக்கத்துக்கும் அமெரிக்கா தலைமையிலான உலக பொருளாதார ஒழுங்கிற்கும் முதலாவது பாரிய சவாலாக அமைகின்றன. இத்தகைய சூழ்நிலை உருவானதற்கு பெருமளவுக்கு உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமுமே பொறுப்பாகும். ஏனென்றால், புதிய வங்கிகளின் உருவாக்கத்திற்கான விதைகள் அவ்விரு பழைய நிறுவனங்களும் ஆசியாவின் அதிகரிக்கும் தேவைகளை நிறைவேற்றுவதில் வெளிக்காட்டிய விருப்பமின்மையில் அல்லது இயலாமையிலேயே புதைந்து கிடந்தன.

ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி 5000 கோடி டொலர்கள் ஆரம்ப மூலதனத்துடன் ஆரம்பிக்கப்படுகிறது. சீனாவே மிகப்பெரிய பங்குதார நாடாக இருக்கும். இரண்டாவது பெரிய பங்குதாரர் இந்தியா. ■

---

*(15ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

தேசிய வறுமைக்கோட்டு எல்லையின் கீழ் (அதாவது மாதாந்தம் 3028 ரூபா வருமானம்) வாழ்கிறார்கள் என்று அண்மையில் வெளியிடப்பட்ட தேசிய வறுமைநிலை ஆய்வு அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த மண்சரிவு அனர்த்தத்தில் தங்கள் உறவுகளை இழந்து பரிதவித்து செய்வதறியாது நிற்கும் தோட்டத்தொழிலாளருக்கு இன்று நிவாரண உதவிகளைப் பகிர்ந்தளிக்க ஓடோடி வருபவர்கள் அந்தக் காரியத்தை எத்தனை நாட்களுக்குத் தொடரப் போகிறார்கள்?

இத்தகைய மக்கள் வாழ்கின்ற பிராந்தியத்தில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகள் பல வருடங்களுக்கு முன்னரே அடையாளம் காணப்பட்டும் கூட, அவர்கள் அந்த அனர்த்தங்களினால் பாதிக்கப்படாதிருப்பதை உறுதிசெய்யக்கூடிய நடவடிக்கைகள் வகுக்கப்படவில்லை..

அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர பாராளுமன்றத்தில் அக்டோபர் 31 ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

'மீரியபெத்தை பகுதி தோட்டத் தொழிலாளர்களை வேறு இடங்களில் குடியமர்த்தும் நடவடிக்கைகளை நேரகாலத்தோடு மேற்கொள்வதற்கு தோட்ட முகாமைத்துவம் தவறிவிட்டது. பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் இருந்து தோட்டத்தொழிலாளர் குடும்பங்களை வேறு பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்காத அந்தக் கம்பனிக்கும் வேறு கம்பனிகளுக்கும் எதிராக விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார். மீள்குடியேற்றத்துக்கென அடையாளம் காணப்படும் நிலப்பகுதிகளை விடுவிப்பதற்கு கம்பனிகள் மறுத்தால் நாம் அவற்றை சுவீகரிப்போம். இதற்கு அவசியமானால் புதிய சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவரவும் அமைச்சரவை தீர்மானித்திருக்கிறது'.

மண்சரிவினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்து பார்வையிட்ட பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பின்வருமாறு கூறினார்.

'மலையகப் பெருந்தோட்டப்பகுதிகளின் லயன் குடியிருப்புகள் முற்றாக அப்புறப்படுத்தப்பட்டு கிராமிய மட்டத்தைப் போன்று தனித்தனியான வீடுகளைக் கொண்ட வீடமைப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். அத்துடன் இவ்வீடமைப்புத் திட்டங்கள் பாதுகாப்பான பகுதிகளில் மண்ணியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே நிர்மாணிக்கப்படவேண்டும். லயன் குடியிருப்புகளுக்குப் பதிலாக தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடமைப்புத் திட்டங்களை அமைக்க பொதுவான தேசிய வேலைத் திட்டமொன்று முன்னெடுக்கப்படவேண்டிய அவசியத்தை மீரியபெத்தை அனர்த்தம் உணர்த்தியிருக்கிறது'.

ஆக மொத்தத்தில் சம்பவத்துக்குப் பின் சகலரும் புத்திசாலிகள்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# மூன்றாவது பதவிக்காலத்தின் ஆபத்துக்கள்



## தென்கொரியா அனுபவம் உணர்த்தும் பாடங்கள்



கலாநிதி லக்சிறி பெர்னாண்டோ

ஐக்கியதேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி வாய்ப்புகள் பற்றித் திஸ்ஸ அத்தநாயக்க கருத்து வெளியிட்டார். அக்கட்சியின் பொதுச் செயலாளரான திஸ்ஸ அத்தநாயக்கவின் பேச்சு அவரது அறியாமையையே வெளிப்படுத்தியது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையும் போட்டியிடுவதில் உள்ள 'சட்ட விரோதத் தன்மை, அதன் அறஒழுக்க நியமங்களின் மீறல் இயல்பு என்பன பற்றி அத்தநாயக்க எதனையும் குறிப்பிடத்தவறி விட்டார். அதன் மூலம் மூன்றாவது தடவை ராஜபக்ஷ போட்டியிடுவது நியாயமானதே என்பதை மறைமுகமாக உறுதி செய்யும் வகையில் அவரின் கூற்றுக்கள் அமைந்துவிட்டன. இதனைப் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். இப்போது பொதுச்செயலாளர் செய்த தவறுக்கு கட்சி பரிகாரம் தேடவேண்டி ஏற்பட்டுவிட்டது. 2015 ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்ற அறிவிப்பு வெளிவந்துள்ளது. முன்பே திட்டமிட்ட இந்நடவடிக்கை அரசியல் யாப்புக்கு விரோதமானது. அரசியல் யாப்பின் உறுப்புரைகளையும், குறைகளைக்கொண்ட 18ஆவது திருத்தத்தையும் படிக்கும் எவரும் இந்த உண்மையைப் புரிந்துகொள்வர்.


இன்றைய நிலையில் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கியதேசியக்கட்சி தேர்தலுக்குத் தயாராகுவதில் எந்தத் தவறும் இல்லை. ஏனெனில் அரசியல் யாப்புக்கு முரணான இந்தத் திடீர் தேர்தல் தவிர்க்க முடியாததாகப் போகிறது. சர்வாதிகாரப் போக்குடைய நிர்வாகத்துறைக்குத் தாளம் போடுவதாய் அது நினைத்தபடி ஆடக் கூடிய நீதித்துறை இருப்பதால் இத்தேர்தலைத் தடுத்து நிறுத்தும் சாத்தியம் இல்லை. ஆதலால் தேர்தலுக்கு எதிர்க்கட்சி தயாராவது அவசியமானதொன்றுமாகும். பிரதம நீதியரசர் மொகான் பீரிஸின் உயர்நீதிமன்றுக்கு சங்கடமான நிலை. தேர்தல் நடத்தக் கூடாது என்று அதன் முன் வைக்கப்படப் போகும் வாதங்களை இலகுவில் அதனால் ஒதுக்கிவிட முடியாதபோதிலும் ஜனாதிபதித் தேர்தலை அது தடுத்து நிறுத்துமா என்பது ஐயமே. ஐக்கியதேசியக்கட்சி இத்தேர்தலில் 'சட்டவிரோதத்தன்மை அதன் அறஒழுக்க மீறல்' என்பன பற்றி எதுவும் குறிப்பிடாமல் 7 அம்சங்கள் கொண்ட திட்டத்தையும் முன்வைத்துள்ளது. இதனால் இத்திட்டம் அடிப்படையில் பலவீனமானது.

ஐ.தே.கட்சியின் 7 அம்சங்களில் ஒன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றாக ஜனாதிபதி முறையை ஒழித்தல் என்ற விடயம் குறிப்பிடப்பட்டிருத்தல் பாராட்டுக்குரியது. ஜனாதிபதி முறையை ஒழித்தல் இந்நாட்டில் சுதந்திரத்தை உயிர்ப்பிழைக்க வைப்பதற்கு மிகவும் அவசியமானது. இருந்த போதிலும் எனது அபிப்பிராயப்படி இத்தேர்தல் சட்ட விரோதமானது, ஆபத்தானது, நேர்மையற்றது என்பதை இப்போது உரத்துச் சொல்ல வேண்டும். மூன்றாவது தடவை போட்டியிடுவதை எதிர்ப்பதையும், ஜனாதிபதி முறையை ஒழிப்பதோடு இணைத்துப் பேசவேண்டிய தேவை உள்ளது.

தேர்தலில் வெற்றிபெற்று அதிகாரத்தைக் கைப்பற்ற எண்ணும் எதிர்க்கட்சி வேறுபல உறுதிமொழிகளையும் வழங்க வேண்டும். இலவசக் கல்வி முறையைப் பேணிப்பாதுகாத்தல், பொதுச்சுகாதார முறைகளைப் பாதுகாத்தல், வாழ்க்கைச் செலவு உயர்வால் அழுந்தும் மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் என்பனபற்றி மக்களுக்கு உறுதி வழங்கவேண்டும். பல்கலைக்கழக மாணவர்கள் ஆசிரியர்கள், தொழிற்சங்கங்கள், ஏழைமக்கள் ஆகிய பரந்துபட்ட மக்கள் பிரிவினரின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு இதுவே ஒரே ஒரு வழியாகும். ஆகவே முற்போக்கான சமூக பொருளாதாரத்திட்டம் அவசியம். இதனைவிட சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாத்தல், கலந்துரையாடல், ஒத்துழைப்பு என்பன மூலம் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல் என்பனவும் அவசியமானவை.



அத்துரலியே ரத்ன தேரரும் மாதுளுவாவே சோபித தேரரும்

**மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையும் ஜனாதிபதி பதவியில் நீடிப்பதில் உள்ள ஆபத்து பற்றி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உள்ளவர்களிடையேயும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரிடையேயும் உணர்வு எழுந்துள்ளது. அத்துரலியே ரத்ன தேரர் அரசியல் யாப்பு சீர்திருத்த யோசனைகளை முன்வைத்திருப்பது இதன் அடையாளமே**

### மன்னன் லூயியின் கூற்று

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உள்ளவர்களிடையேயும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரிடையேயும் இப்போது மூன்றாவது தடவையும் ஜனாதிபதி பதவியில் நீடிப்பதில் உள்ள ஆபத்துப் பற்றி உணர்வு எழுந்துள்ளது. ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வண அத்துரலியே ரத்ன தேரர் அரசியல் யாப்புச் சீர்திருத்த யோசனைகளை முன்வைத்துள்ளார். அவரது 'தூய்மையான நாளை' (பிவிதுறு ஹெட்டக்) பாராட்டத்தக்க இப்போக்கின் அடையாளம் ஆகும். இவற்றைக் கண்ணுற்றதனால் போலும் மகிந்த ராஜபக்ஷவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் புலம்பெயர்ந்தோரும் பிரிவினைவாதத்தைக் கைவிட்டால் தாம் ஜனாதிபதி முறையை ஒழிக்கத் தயார் என்று கூறினார்.

பிரிவினைவாதத்தைத் தடுப்பதற்கு ஜனாதிபதி முறை தேவை என்று அவர் கூறுவதை ஏற்றுக்கொண்டாலும் அவர் ஜனாதிபதி முறையையும், தனது பதவியையும் வேறுபடுத்த முடியாதவராக இருப்பது ஏன்? தனது கட்சியிலோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலோ ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடும் தகுதியுள்ள எவரும் இல்லையென்று அவர் கூறப்போகிறாரா? அப்பதவியை வகிக்கும் தகைமையுடையவர்கள் எவரும் இல்லை எனக்கூறுவாரா? 17ஆம் நூற்றாண்டில் பிரான்ஸின் முடிமன்னனாக இருந்த லூயி 'நானே மன்னன்; நானே அரசும்' என்று கூறினான். 'I am the state' என்ற லூயி மன்னன் கூற்றுக்கு ஒப்பானதே ராஜபக்ஷவின் இந்த வாதமும்.

ஜனாதிபதி முறைமையின் தோற்ற மூலத்தைப் பற்றிய குறிப்பொன்றை இவ்விடத்தில் கூறுதல் பொருத்தமானது. மன்னராட்சியை அரசியல் யாப்பு ரீதியானதாக (CONSTITUTIONAL MONARCHY) ஆக்கி அதன் தொடர்ச்சியாக மன்னனின் இடத்தில் ஜனாதிபதி என்ற பதவி உருவானதே வரலாறு ஆகும். ஜனாதிபதி முறை பாராளுமன்ற முறையில் இருந்து வேறுபட்டது. வரலாற்றில் முதன்முதலாக அமெரிக்காவில் 1789 இல் ஜனாதிபதி முறை தோற்றம் பெற்றது. இவ்விதம் ஜனாதிபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையின் தோற்ற வரலாற்றை சிட்னி மில்கிஸ் மற்றும் மைக்கல் நெல்சன் என்ற நூலாசிரியர்கள் அமெரிக்க ஜனாதிபதி முறைபற்றிய நூல் ஒன்றில் ஆராய்ந்து எழுதியுள்ளார்கள் (AMERICAN PRESIDENCY: Origins And Development என்ற நூல்) மொன்டெஸ்குயு என்ற அரசியல் அறிஞர் அதிகார வலுவேறாக்கம் (SEPERATION OF POWERS) என்ற கருத்தை எடுத்துக்கூறிய போது இங்கிலாந்தின் அரசியல் யாப்பு வரம்புக்குட்பட்ட முடியாட்சியை உதாரணமாகக் கொண்டார்.

பாராளுமன்ற ஜனநாயகமுறை வரம்புக்குட்பட்ட முடியாட்சி முறையில் இருந்து பரிணாமம் பெற்ற ஒன்றே என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் அம்முறையின்படி நிர்வாகத்துறை மக்களால் தெரிவு செய்யப்படும் சட்டத்துறைக்குக் கீழ்ப்பட்டதாக அமைய வேண்டும் என்றும் சட்ட சபையில் நிர்வாகத்துறை தங்கியிருத்தலும், அதற்கு நிர்வாகத்துறை பொறுப்புக் கூறலும் அவசியம் என்பதும் உறுதி செய்யப்பட்டது. இதன் அர்த்தம் பாராளுமன்றம் சர்வ அதிகாரமும் கொண்டது என்பதன்று. 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பு பாராளுமன்றத்தை மேலான அதிகாரம் கொண்டதாக மாற்றி நீதித்துறையின் சுதந்திரத்திலும் தலையிடும் நிலையை ஏற்படுத்தியிருந்தது.

அரசியல் யாப்பு மேன்மையானது எனக் கூறும் அரசியல் யாப்புவாதம் (CONSTITUTIONALISM) பாராளுமன்ற ஜனநாயகத்தை ஆளும் தத்துவமாகும். இதற்கமைய நீதித்துறையின் சுதந்திரமும், அரசின் ஏனைய அங்கங்களான பொதுச் சேவை என்பனவற்றின் சுதந்திரமும் பாதுகாக்கப்படல் வேண்டும். திறமை மிக்க அபிவிருத்தி நிர்வாகம் செயற்படுவதற்கு அரசியல் தலையீடு இருத்தல் ஆகாது. 17ஆவது யாப்புத்திருத்தத்தின்படியான சுதந்திர ஆணைக்குழுக்கள் மூலம் இத்தகைய அரசியல் தலையீடு இல்லாத நிலையே எதிர்பார்க்கப்பட்டது.

உலகின் பல நாடுகளின் ஜனாதிபதி முறைமைகளில் முடியாட்சி முறையில் இருந்து பெற்றுக்கொண்ட பிறவிக் கோளாறு வெளிப்படையாகவே புலப்படுகின்றது. 1958ஆம் ஆண்டில் டி கால் பிரான்ஸ் நாட்டிற்கு ஒரு அரசியல் யாப்பை வரைந்தபோது சர்வாதிகாரத் தன்மையுடைய ஜனாதிபதி முறையைக் கொண்டுவந்தார். டி கால் ஐரோப்பாவை ஆண்ட சார்லமேன் மன்னனையும் பிரான்ஸின் நெப்போலியனையும் தனக்கு முன்மாதிரிகளாகக் கொண்டார். இலங்கையில் ஜே.ஆர்.ஜெயவர்தன அரச வம்சத்து ராஜாக்களின் கூட்டத்தில் தன்னையும் ஒருவராக உயர்த்திக் கொள்வதற்கு வேண்டிய அனைத்தையும் செய்தார். அவர் கண்டி தலதாமாளிகைக்குச் சென்று அங்குள்ள பட்டிருப்புவவில் அமர்ந்து அடிக்கடி நாட்டு மக்களுக்கு (முற்கால மன்னர்கள் போன்று) உரையாற்றினார். 'வப்மகுல்' என்ற ஏர்பூட்டு விழாக்களையும் நடத்தினார். இவையாவும் ஜனாதிபதிப் பதவியை முடி மன்னரின் நிலையுடன் தொடர்புபடுத்தும் தந்திரங்களாக அமைந்தன. இப்பின்னணியில் பார்க்கும்போது தற்போது பதவியில் இருக்கும் ஜனாதிபதியின் நடவடிக்கைகள் பற்றி மேலதிக விளக்கம் அவசியமற்றது. ஜனாதிபதி பதவியை மேன்மைப்படுத்திப் புகழ்வது தான் பரவாயில்லை என ஒதுக்கிவிடலாம். ஆனால் அதனைக் 'குடும்ப ஆட்சியுடன்' இணைப்பதும் எப்பாடுபட்டாவது அதிகாரத்தில் தான் ஒட்டிக்கொண்டிருக்கவேண்டும் என்று நினைப்பதும் பேசுவதும் ஏற்றுக்கொள்ள முடியாதவை.

## சர்வாதிகாரப் போக்கு

முடியாட்சிமுறை இறுதியில் வல்லாட்சியாகச் சீரழிந்து போகும் என்று அரிஸ்டோட்டல் கூறினார். ஜனாதிபதி பதவி அதனைவிட மோசமான சீரழிவில் முடியும். அது சர்வதிகாரமாகவும் இராணுவ ஆட்சியாகவும் மாற்றமடையும். குறிப்பாக இலங்கை போன்று யுத்தம், முரண்பாடு என்பனவற்றில் இருந்து மாற்றம்பெறும் இடைக்காலத்தில் உள்ள சமூகங்களில் இதற்கான சாத்தியம் அதிகம். தென்கொரியாவின் உதாரணத்தைப் பார்ப்பதற்கு முன்பாக வேறுசில உதாரணங்களையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் 1946ஆம் ஆண்டின் புதிய அரசியல் யாப்பு அமெரிக்க மாதிரியில் வரையப்பட்டது. அந்நாட்டில் ஜனாதிபதிமுறை புகுத்தப்பட்டது. 1965 ஆம் ஆண்டு பெர்டினன்ட் மார்க்கோஸ் பதவிக்கு வந்தார். அப்போது ஜனாதிபதித் தேர்தலில் அவர் 52 சதவீத வாக்குகளைப் பெற்றார். ஜனாதிபதி நான்கு வருடங்கள் பதவி வகிக்கலாம். அவர் 1969 இல் இரண்டாம் தடவையாகப் போட்டியிட்டு 62சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார். இரண்டாவது தடவையும் தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஜனாதிபதி இவரே. 1969 தேர்தலில் இவர் பெற்ற 62 சதவீத வாக்குகள் 65 மில்லியன் திறைசேரி நிதியை முறைகேடாக பயன்படுத்திப் பெற்ற மோசடி

> **ஒரு நாட்டின் அரசியல் முறைமைக்குள் இருந்து சர்வாதிகாரப்போக்கு வெளிப்படுகிறது என்றால் அதன் தோற்றுவாய் அரசியலில் தான் உள்ளது, பொருளாதாரத்தில் அல்ல. இலங்கையில் பயங்கரவாத அச்சுறுத்தலும் பிரிவினைவாதமும் இருந்த காலத்தில் ஜனாதிபதி முறை அவசியமான தாக இருந்தது என்ற வாதம் உண்மையாயின் அதற்கான தேவை இன்று இல்லை என்பதும் வெளிப்படையானது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குகளாகும். இது நிரூபிக்கப்பட்ட உண்மை. 1972இல் அவர் பதவியில் இருந்து நீங்கியிருக்க வேண்டும். ஆனால் அவர் இராணுவ ஆட்சியைப் பிரகடனம் செய்து பதவியில் 1986 வரை தொடர்ந்தார். 1986 ஆம் ஆண்டு அவர் தூக்கி எறியப்பட்டார். இராணுவ ஆட்சியை 1972இல் அவர் பிரகடனப்படுத்தியபோது அவருக்கு இரண்டு சாட்டுக்கள் வசதியாகக் கிடைத்தன. நாட்டில் கம்யூனிஸ்ட்டுகளின் கிளர்ச்சி உள்ளது. முஸ்லிம் மக்கள் கிளர்ச்சி செய்கிறார்கள் என்ற இரண்டு சாட்டுக்களைக் காட்டி அதிகாரத்தில் தொடர்ந்தார்.

அல்பர்ட்டோ புஜிமோரி (1990 -2000)யின் ஆட்சி பெரூ நாட்டில் தொடர்ந்த கதை சிறிது வித்தியாசமானது. 1990 இல் புஜிமோரி தேர்தலில் நின்றபோது அவர் எப்படிப்பட்ட இயல்புள்ளவர் என்பது வெளிப்படவில்லை. அவர் ஒரு சர்வாதிகாரியாக மாறுவார் என்று யாருமே கற்பனை செய்திருக்க முடியாது. அவர் ஒரு தொழில்நுட்ப நிபுணர், அதிகாரியாக இருந்தவர். அவர் பதவிக்கு வந்த சூழ்நிலையும், அதிகாரமும் பெரூநாட்டின் காங்கிரஸ் சபையின் எதிர்ப்பை அவர் எதிர்கொள்ள வைத்தது. 1992இல் இராணுவத்தின் துணையுடன் அவர் சர்வாதிகாரியாக மாறினார். இராணுவ பலத்தின் பின்னணியில் தான் அவர் 1995இல் இரண்டாவது தடவையும் ஜனாதிபதியானார். பெரூவில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுபவர் 5 வருடம் பதவி வகிக்கலாம். ஆனால் இரண்டு தடவை என்ற மட்டுப்பாடும் இருந்தது. மூன்றாவது தடவையின் ஆபத்து பற்றி புஜிமோரியை வைத்து 'விக்கி பீடியாவில்' எழுதியிருப்பதை இங்கு நான் மேற்கோளாகத் தருகிறேன்.


'அரசியல் யாப்பு இரு தடவைக்கு மேல் ஒருவர் ஜனாதிபதியாக இருக்க முடியாது என்ற கட்டுப்பாட்டை விதிக்கிறது. 2000ஆம் ஆண்டில் அவர் மூன்றாவது தடவையும் போட்டியிடக்கூடிய வகையில், காங்கிரஸில் உறுப்பினர்களாக இருந்த அவரது ஆதரவாளர்கள் 'ஆதார பூர்வமான சட்ட விளக்கத்தை' வழங்கினார்கள். இத்திருத்தத்தை ரத்துச் செய்வதற்காக 1988 இல் நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பு தோல்வியில் முடிந்தது. 1999 இன் பிற்பகுதியில் தான் மூன்றாவது தடவையும் போட்டியிடப்போவதாக புஜிமோரி அறிவித்தார். புஜிமோரிக்கு சார்பாக இருந்த பெருவின் தேர்தல் அதிகாரிகள் அவரது வாதத்தை ஏற்றுக் கொண்டு அவருக்கு இரண்டாவது முறைக்குமேல் பதவிவகிக்க இயலாது என்ற மட்டுப்பாடு இல்லை என்றும் அவர் பதவியில் உள்ளபோதே அத்திருத்தம் கொண்டுவரப்பட்டது என்றும் கூறினர்'.

பெரூவின் 'ஆதாரபூர்வமான சட்ட விளக்கம்' ஏறக்குறைய இலங்கையின் 18ஆவது அரசியல் யாப்புத் திருத்தத்தை ஒத்தது. இலங்கையில் அரசாங்கம் மீண்டும் ஒரு 'அதிகார பூர்வ சட்ட விளக்கத்தை' ஜனவரி 2015க்கு முன்னர் பெறக்கூடும். ஏனெனில் யாவற்றிலும் 'ஆதார பூர்வமான சட்டவிளக்கம்' ஒன்று முன்னாள் பிரதம நீதியரசரால் தரப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ், பெரூ போன்ற நாடுகளில் நடந்த ஜனாதிபதி முறையின் திருகு தாளங்கள் இலங்கையின் நிலைமையோடு நன்றாகப் பொருந்துகின்றன. இவை ஏதோ புதிய விடயங்கள் என்ற உணர்வு எமக்கு ஏற்படுவதில்லை. 1999 ஆம் ஆண்டு பெரூ நாட்டின் அரசியல் பற்றி கிளிபோர்ட் கிராஸ் (Clifford krauss) புவனஸ் அயர்ஸ் நகரில் இருந்து நியூ யோர்க் டைம்ஸ் பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

'பெரூ ஜனாதிபதி அல்பர்ட்டோ கே.புஜிமோரி இன்று மூன்றாவது தடவையும் தாம் ஜனாதிபதியாகப் போட்டியிடப் போவதாக அறிவித்திருக்கிறார். இது முன்னுதாரணம் இல்லாத நடவடிக்கை. தனது நாடு தான் பதவியில் தொடர்வதை வேண்டி நிற்பதாகவும், பயங்கரவாதத்தை

பயங்கரவாதம், பொருளாதார வளர்ச்சி என்ற இரண்டும் சர்வதிகாரத்தை வேண்டி நிற்போர் எப்பொழுதுமே முன்வைக்கும் வாதங்கள் அல்லவா


பேர்டினண்ட் மார்கோஸ்


அல்பேர்ட்டோ புஜிமோரி


பாக்-சுங்-கீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழித்தல், பொருளாதாரத்தை மீட்டெடுத்தல் என்ற இரண்டு தேவைகளுக்காக தான் பதவியில் தொடரும் அவசியம் இருப்பதாகவும் அவர் வாதிடுகிறார்'.

'இந்த வாதம் பரிச்சயமான ஒன்றாகத் தெரிகின்றதல்லவா? பயங்கரவாதம், பொருளாதார வளர்ச்சி என்ற இரண்டும் சர்வாதிகாரத்தை வேண்டி நிற்போர் எப்பொழுதுமே முன்வைக்கும் வாதங்கள் அல்லவா?'

## தென்கொரியாவின் உதாரணம்

தென்கொரியாவின் ஜனாதிபதி முறை, பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி முறை போன்றே அமெரிக்க ஜனாதிபதிமுறையை ஒத்தது. ஆயினும் பாக்-சுங்-கீ 1961இல் இராணுவச் சதிப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றினார். அதன்பின்னர் 1963 இல் ஜனாதிபதித்தேர்தலை நடத்தி பெரும்பான்மை வாக்குகளால் (43 வீதம்) வெற்றிபெற்று ஜனாதிபதியானார். (43 வீதம் பெரும்பான்மை என்று கூற முடியாதது) அந்நாட்டில் ஜனாதிபதி 4 வருடம் பதவியில் இருக்கலாம். இரண்டு தடவைக்கு மேல் போட்டியிட முடியாது என்ற கட்டுப்பாடும் இருந்தது. இரண்டாவது தடவையும் பாக்-சுங்-கீ போட்டியிட்டு 52 வீத வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார்.

1971 இல் அவர் பதவியை விட்டு நீங்கியிருக்க வேண்டும். ஆனால் 1969 இல் அவரது ஆதரவாளர்கள் அவர் மூன்றாவது தடவையும் போட்டியிட வகைசெய்யும் யாப்புத் திருத்தத்தைக் கொண்டு வந்தனர். இலங்கையின் 18ஆவது திருத்தத்தை ஒத்த யாப்புத் திருத்தமாக இது அமைந்தது. மூன்றாவது தடவை போட்டியிட்டு சிறிய தொகை வாக்கு வித்தியாசத்தில் 51 வீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவர் நாட்டு நிலைமையில் திருப்தியுறாதவராய் 1972இல் இராணுவ ஆட்சியைப் பிரகடனம் செய்தார். 1972க்கு முன்னரும் நாட்டில் எதேச்சாதிகாரம் தான் நிலவியது. ஆனால் தேர்தல்கள் நடந்தன. இறுதியில் 1979 இல் அவரது பாதுகாப்புப் பிரிவினராலேயே அவர் படுகொலை செய்யப்பட்டார்.

பாக்-சுங்-கீ பற்றிய பலவகை மதிப்பீடுகள் உள்ளன. நான் தென்கிழக்காசியாவினதும் கிழக்கு ஆசியாவினதும் அரசியல் பொருளாதாரம் பற்றி மாணவர்களுக்குக் கற்பித்திருக்கிறேன். பாக்-சுங்-கீ காலத்தில் தென்கொரியாவின் பொருளாதாரம் வளர்ச்சி பெற்றது உண்மையே. தென்கொரியா உண்மையில் 'ஆசியாவின் அற்புதம்' தான். ஆரம்பத்தில் தென்கொரியா பற்றிய மதிப்பீட்டைக் கூறியவர்கள் பாக்-சுங்-கீயின் சர்வாதிகார முறையிலான நிர்வாகம் பொருளாதார எழுச்சிக்குக் காரணமாயிற்று என்று கூறினார். அதாவது பொருளியலை விட அரசியல் தான் முக்கிய காரணி என்றனர். இதற்குப் பின்னர் ஆழமான ஆய்வுகள் பல செய்யப்பட்டன. அந்த ஆய்வுகளின் படி பாக்-சுங்-கீயின் சர்வாதிகார ஆட்சிக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் தொடர்பு இல்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டது. சர்வாதிகார முறை இருந்திருக்காவிட்டால் வளர்ச்சி இன்னும் கூடுதலாக இருந்திருக்கும் என்றும் கூறப்பட்டது.

ஒரு நாட்டின் அரசியல் முறைமைக்குள்ளிருந்து சர்வாதிகாரப் போக்கு வெளிப்படுகிறது என்றால் அதன் தோற்றுவாய் அரசியலில் தான் உள்ளது பொருளாதாரத்தில் அல்ல என்பதை நாம் கவனிக்க வேண்டும். இலங்கையில் பயங்கரவாத அச்சுறுத்தலும் பிரிவினைவாதமும் இருந்த காலத்தில் ஜனாதிபதி முறை அவசியமானதாக இருந்ததென்ற வாதம் உண்மையாயின் அதற்கான தேவை இன்று இல்லை என்பதும் வெளிப்படை. கடந்த பத்து ஆண்டுகளில் பொருளாதாரம் முன்னேறியது என்பதற்கும் ஜனாதிபதி முறைக்கும் தொடர்பு கிடையாது. ஜி.எல்.பீரிஸ் ஒரு தடவை கூறியது போன்று 'அலை உயர எழும்பும் போது எல்லாப் படகுகளும் உயரத்திற்கு உயர்த்தப்படுகின்றன' என்பதே உண்மை. இலங்கையில் ஊழல், உறவினர்களுக்கும் சொந்தங்களுக்கும் பதவிகளையும் நன்மைகளையும் பங்கிடுதல், நிர்வாகத்திறன் இன்மை ஆகிய பிரச்சினைகள் இல்லாதிருந்தால் இலங்கையில் ஒரு அற்புதம் நிகழ்ந்திருக்கலாம். அதன் வளர்ச்சி 10வீதத்தைத் தாண்டிய எண்ணாக (இரண்டு டிஜிற் வளர்ச்சி) அமைந்திருக்கும். ஜனாதிபதி முறையின்படி மூன்றாம் தடவையும் பதவியில் இருப்பவர் தொடருதல் அவசியமான ஒன்றும் அல்ல. இது முரண்பாடுகள் நிறைந்த நாடுகளில் நடந்தேறிய ஒரு விவகாரம். ஒரு ஜனாதிபதி மூன்றாவது தடவையும் பதவிக்கு வருவது சர்வாதிகாரத்திற்கும் பேரழிவுக்கும் வழிவகுக்கும்.

கொரியாவின் உதாரணம் எடுத்துக் காட்டுவதுபோல் அதிகார வெறிப்பித்து நிலைக்கு உள்ளான ஒருவர் மூன்றாவது தடவையும் போட்டியிட்டுப் பதவிக்கு வந்தால் அந்த நபர் பதற்றத்தோடும் பதகளிப்போடும் தான் தன் பதவிக்காலத்தைத் தொடருவார். இலங்கையில் மூன்றாவது தடவையாக ஜனாதிபதிப் பதவியில் தற்போதைய ஜனாதிபதி தொடரும் போது அடுத்து வரும் பொதுத்தேர்தலில் அவரது பாராளுமன்றப் பெரும்பான்மை குறைவடையும்.

**தென்கொரியாவின் உதாரணம் எடுத்துக் காட்டுவது போன்று அதிகாரப்பித்து நிலைக்கான ஒருவர் மூன்றாவது தடவையும் போட்டியிட்டு பதவிக்கு வந்தால் அவர் பதற்றத்தோடும் பதகளிப்போடும் தான் தன் பதவிக்காலத்தைத் தொடர்வார்.**

*(30ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# புலிப்பிராந்தி காட்டி மக்களை இனிமேலும் ஏமாற்ற முடியாது

இன்றைய நவீன உலகில் நாட்டுப்பிரிவினை பற்றி பேசுவதை 'பயங்கரவாத நடவடிக்கை' என்று யாரும் கூறப்போவதில்லை. ஒன்றையாட்சி நாடாக இருந்தால் என்ன, சமஷ்டி நாடாக இருந்தால் என்ன ஒரு பிரிவு மக்கள் தாம் பிரிந்து போகப்போவதாகவும் தனிநாடு அமைக்கப் போவதாகவும் பிரசாரம் செய்வதற்கான சுதந்திரம் உள்ளது. சுயநிர்ணய உரிமை என்பது இன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயக உரிமை



குசல் பெரேரா

*"30 வருடங்களாக இலங்கையின் எல்லா இனக்குழும மக்களும் பட்டவேதனையும் துன்பமும் நீங்கிவிட்டது. இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் வாழும் மக்கள் விடுதலைப் புலிப் பயங்கரவாதத்தில் இருந்து விடுதலை பெற்று அச்சமின்றி வாழுகின்றனர்".*

ஐ.நா. பொதுச்சபையின் 66ஆவது அமர்வு செப்டெம்பர் 23 ஆம் திகதி, 2011 இல் நிகழ்ந்த போது மேன்மை தங்கிய ஜனாதிபதி ஆற்றிய உரையில் இருந்தது.

*"18 மே 2009 இன் பின்னர் குறிப்பிடத்தகுந்த பெருவெற்றிகள் சில அடையப்பெற்றன. நாம் குடிமக்களைப் பொறுப்பேற்றுப் பாதுகாக்க வேண்டியிருந்தது. கண்ணிவெடிகளை அகற்றி மக்களை அவர்களின் கிராமங்களில் குடியேற்ற வேண்டியிருந்தது. சரணடைந்த 12, 800 விடுதலைப்புலிகளுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டியிருந்தது. அவர்களில் 5000 பேர் வரை சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கின்றனர். ஈ.பி. டி.பி. புளொட், ரெலோ முதலிய துணைப்படைகளின் ஆயுதங்களைக் களைய வேண்டிய இன்னொரு அவசியதேவை. விடுதலைப் புலிகளை அழித்த பின்னர் இத் துணைப் படைகளைச் சேர்ந்தவர்கள் ஆயுதங்களுடன் உலவுவதை அனுமதிக்க முடியாது".*

19 நவம்பர் 2013 இல் பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ நேர்முகம் ஒன்றில் கூறியது.

2011 ஆம் ஆண்டு ஜனாதிபதி ராஜபக்ஷ இலங்கையில் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டிவிட்டதாக உலகுக்கு அறிவித்தார். இலங்கையில் எல்லாப்பகுதிகளிலும் வாழும் மக்கள் விடுதலைப் புலிகளைப் பற்றிய அச்சமின்றி வாழ்வதாகவும் கூறினார். இரண்டு வருடங்களின் பின் தன்னால் வட பகுதியில் தேர்தலை நடத்த முடியும் என்பதையும் அவர் கண்டார். அதன்படி செப்டெம்பர் 21, 2013 இல் தேர்தலையும் நடத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்தார். அவ்வாறு தேர்தலை நடத்தியபோது, 'மனிதாபிமான முறையிலான படை நடவடிக்கை' மூலம் தாம் விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் முற்றாக ஒழித்துக்கட்டிவிட்டதாக மகிந்த உத்தியோக பூர்வமான முறையில் பிரகடனம் செய்து 4 வருடங்களும் 4 மாதங்களும் கடந்திருந்தன. குமரன் பத்மநாதன் (கே.பி) தவிர்ந்த விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்கள் அனைவரும் போரில் கொல்லப்பட்டிருந்தனர். வடமாகாணசபை யின் தேர்தல்கள் நடந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைத்து இரு மாதங்கள் கடந்த பின் பாதுகாப்புச் செயலாளர் 'விடுதலைப் புலிகளின் கதை முடிந்தது' என்று கூறினார்.

இவற்றை இரு சகோதரர்களின் கூற்றுக்கள் மட்டுமென்று பார்த்துப் புறந்தள்ளிவிட முடியாது. நாட்டின் ஜனாதிபதியும் அரசுத்தலைவரும், முப்படைகளின் தலைவருமாகிய ஒருவரும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமே இப்படிக் கூறியவர்கள். இவ்விருவரும் உயர் அதிகார பீடத்தில் உள்ளவர்கள். விடுதலைப் புலிகளை அழித்தாயிற்று என்று அவர்கள் கூறியதை யாரும் மறுத்துரைக்க முடியாது. இன்றுவரை எவரும் இதனை மறுத்துரைக்கவும் இல்லை. இதில் சந்தேகம் தெரிவிக்கவும் இல்லை. இப்போது நாம் புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய ஒன்றியம் தடைசெய்த வரலாற்றையும் திரும்பிப்பார்ப்போம். ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகள் மீது 2006ஆம் ஆண்டு மே 29இல் தடைவிதித்தது. இதற்கு 08 மாதங்களிற்கு முன் னரே 2005 ஆம் ஆண்டு செப்டெம்பரில், விடுதலைப்புலிகளை பயங்கரவாத அமைப்பென்று கூறியதோடு ஐரோப்பிய ஒன்றியத்தினது உறுப்பு நாடுகளில் அவ்வியக்கத்தினருக்கு பிரயாணத் தடையையும் விதித்தது. ஐரோப்பிய ஒன்றியத்தின் 28 உறுப்பு நாடுகளில் பெரும்பாலானவை இப்பிரயாணத்தடை வருவதற்கு முன்பே விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை புலனாய்வு மூலம் கண்காணிக்கத் தொடங்கியிருந்தன. உதாரணமாக ஜேர்மனியின் புலனாய்வுப் பாதுகாப்புப் பிரிவான 'Bfv' 2005 ஆண்டு அறிக்கையில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் குறிப்பிட்டிருந்தது. விடுதலைப் புலிகள் 800பேர் வரை இருப்பதாகவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (TRO), தமிழர் ஒருங்கிணைப்புக் குழு (TCC) என்பன மூலம் நிதி திரட்டப்படுவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டது. ஜேர்மனியின் வடக்கு ரைன்லாந்து - வெஸ்ட்பாலியா மாநில அரசுப்பகுதியில் விடுதலைப் புலிகள் செறிந்து காணப்பட்டனர். அந்த மாநிலத்தின் புலனாய்வுப்பிரிவு, விடுதலைப்புலிகள் வெளியில் இருந்து நிதி ஆதரவை வழங்குவதால்தான் இலங்கைக்குள் அந்த அமைப்பு துடிப்போடு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருந்தது.

ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் மீது அன்று ஏன் தடைவிதித்தது என்ற காரணத்தை அலசிப்பார்க்க வேண்டும். விடுதலைப்புலிகள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் நிதியைத்திரட்டி இலங்கையில் புலிகள் இயக்க நடவடிக்கைகளுக்கு ஆதரவு கொடுக்கிறார்கள் என்ற ஆதாரத்தின் அடிப்படையிலேயே தடைவிதிக்கப்பட்டது. இன்றைய நவீன உலகில் எந்தவொரு நாடும் தனது மண்ணில் இருந்து பயங்கரவாத அமைப்பு ஒன்று செயற்படுவதையும் இன்னொரு நாட்டிற்குள் 'வன்முறையையும் பயங்கரவாதத்தையும்' தூண்டி வளர்ப்பதையும் அனுமதிப்பதில்லை. 2006 மே மாதம் விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் இறுதித் தீர்மானம் நிறைவேறியது. அதற்கு முன்னர் மே மாதம் 17 ஆம் திகதி இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் (SLMM) படகு ஒன்று மீது புலிகள் நடத்திய தாக்குதல் சம்பவத்தை ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றம் கண்டனம் செய்தது. இத்தாக்குதல் அதற்கு ஒருவாரம் முன்னர் இடம்பெற்றது. ஆகவே புலிகளின் 'பயங்கரவாத' நடவடிக்கையே அவர்களைத் தடை செய்வதற்குக் காரணமாயிற்று. விடுதலைப் புலிகளின் அரசியல் தடைக்கான ஒரு காரணம் அன்று. புலிகள் தனிநாடாக பிரிந்து போகும் பிரிவினையை கோட்கிறார்கள் என்ற அரசியல் கோரிக்கைக்காக அவர்கள் மீது தடை விதிக்கப்படவில்லை என்பது தெளிவு.

> **ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளை அவர்களின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்காகவே தடை செய்தது. புலிகளின் அரசியல் தடைக்கான ஒரு காரணமாக இருக்கவில்லை. புலிகள் தனிநாடாக பிரிந்துபோகும் பிரிவினையைக் கேட்கிறார்கள் என்ற அரசியல் கோரிக்கைக்காக அவர்கள் மீது ஐரோப்பாவில் தடை விதிக்கவில்லை என்பது தெளிவானது**

இப்போது ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கிவிட்டது. இலங்கை அரசின் உயர்மட்ட அதிகார பீடமே மே 2009 இன் பின் விடுதலைப்புலிகள் இயக்கம் என்று ஒன்று இல்லை. அது அழிக்கப்பட்டுவிட்டது என்று கூறியது. விடுதலைப் புலிகளின் தலைவர்களும் அழிக்கப்பட்டுவிட்டார்கள் என்றால் இப்போது தடைசெய்வதற்கு என்ன இருக்கிறது? இப்போது இல்லாத ஒரு அமைப்பைத் தடை செய்யவேண்டும் என்று கொக்கரிப்பதன் அர்த்தம் என்ன?

இவ்விதம் கொக்கரிப்பதன் நோக்கம் தென்பகுதியின் சிங்கள மக்கள் மத்தியில் புலிமாயையைத் தக்க வைப்பதும் அதன் மூலம் இந்த அரசு தன் காலத்தை நீடிக்க எண்ணுவதும் அல்லாமல் வேறு என்ன காரணம் உள்ளது? 2015 ஜனவரியில் இந்த அரசு அவசர அவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரமாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தத் திட்டம் போடுகிறது. அது நாட்டுப்பற்றாளர் என்ற முகத்தைச் சிங்கள மக்களுக்குக் காட்டவிரும்புகிறது. இலங்கையின் ஒற்றையாட்சி முறையை துளி அளவேனும் மாற்றுவதற்கு சம்மதிக்காத நாட்டுப் பற்றாளர்கள் என்ற முகம் அரசுக்குத் தேவைப்படுகிறது. அதுமட்டுமல்ல, இந்த அரசு சிங்கள பௌத்த அரசு என்றும் காட்ட விரும்புகிறது. தமிழ் பிரிவினைவாதம் என்பதற்கு எதிரான போரைத் தொடருவதற்கு விடுதலைப்புலிகளுக்கு உயிர் கொடுத்து நாடகம் ஆடும் தேவை எழுந்துள்ளது. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வானொலி மூலம் ஜனாதிபதி அலுவலகத்தின் குரல்தரவல்ல அதிகாரியான மோகன் சமரநாயக்க கூறியிருப்பது கவனத்திற்குரியது.

'இது (ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் மீதான தடையை நீக்கியது) விடுதலைப்புலிகளுக்கும், புலிச் சார்புடையவர்களுக்கும் மீள ஒன்றுசேர்ந்து தமது இயக்கத்தை வலுப்படுத்துவதற்கான அரியதோர் சந்தர்ப்பமாகும்' என்று மோகன் சமரநாயக்க கூறினார்.

2014 மார்ச் மாதத்திலேயே அரசு புலிகள் மீள இணைகிறார்கள் என்ற புரளியைக் கிளப்பியது. அப்போது புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கம் என்ற விடயம் இருக்கவில்லை. அரச புலனாய்வுப் பிரிவும் பாதுகாப்புப் பிரிவினரும் விடுதலைப் புலிகளின் மிஞ்சியிருந்த உதிரிகள் வன்னியில் ஒன்றிணைவதாகக் கூறி கோபி, அப்பன், தேவியன் என்போரைக் கைது செய்தனர். தம் தரப்பு 'எழுத்தாளர்கள்' மூலம் புலிகள் இயக்கம் புதிய வலைப் பின்னல் ஒன்றைத் தொடக்கியதையும், கொழும்பு நகரில் பாதுகாப்பான மறைவிடங்களை தாபித்திருப்பதுமான செய்திகளை ஊடகங்கள் மூலம் பரப்பினர். இவ்வாறு 'கதைவிடுவது' தமது முன்னைய பிரகடனத்திற்கு முரண்பாடானது என்பதை பாதுகாப்புத் தரப்பினர் உணர்ந்தனர். இலங்கையில் இருந்து புலிகள் முற்றாகத் துடைத்து அழிக்கப்பட்டனர் என்று முன்னர் வழங்கிய 'சான்றுப்பத்திர'த்தை இச்செய்திகள் மறுதலிப்பனவாக இருந்தன. ஆதலால் பாதுகாப்புத்தரப்பு இன்னொரு தகவலையும் அப்போது கூறியது. தலைதூக்க முயன்ற இந்தச் சிறுகுமுவை நெடுங்கேணிக் காடுகளில் தேடி அழித்து 2014 ஏப்பிரல் 10 ஆம் திகதியோடு அவர்களை வவுனியாவில் இருந்து அப்புறப்படுத்திவிட்டதாகச் செய்தி வெளியிட்டது. ஆகையினால் இவ்வாண்டு சிங்கள - தமிழ் புதுவருடத்தின் பின் புலிகளின் பிரசன்னத்திற்கான அடையாளம் எதுவும் இல்லாமல் போய்விட்டது.

இன்று ராஜபக்ஷ அரசாங்கம் புலிப்பயப்பிராந்தியை நீடிக்க வைப்பது அவசியம் என்று கருதுகிறது. சிங்கள பௌத்த பெரும்பான்மையினரை உளவியல் ரீதியில் அச்ச நிலையில் வைப்பது அதன் அரசியல் தேவைகளை நிறைவு செய்யும் என்பதை அரசு உணர்கிறது. ஜனாதிபதிதான் விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதத்தை முறியடிக்கக்கூடிய 'அரசியல் உறுதி'யைக் கொண்டவர். அவரது இராணுவத்திடம் தான் இதற்கான இராணுவ பலமும் திறமையும் உள்ளது என்று மக்களை நம்பவைத்து தென்பகுதி மக்களின் வாக்குகளைக் கவருவதே அரசின் திட்டமாகும். இந்தத் திட்டத்தோடு செயற்படும் அரசாங்கத்திற்கு 'புலம்பெயர்ந்த தமிழர்களில் (டயஸ்போறா) ஒரு பகுதியினர்' என்ற விடயம் அவசியமாகிவிட்டது. ராஜபக்ஷ அரசு 'பல்வேறு தமிழ்த்தீவிரவாத அமைப்புகள்' செயற்படுவதாகக்கூறிவருகிறது. இவ்வருடம் மார்ச்மாதம் இலங்கை அரசு 15 அமைப்புகளை 'வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புகள்' எனக்கூறித் தடைசெய்தது. விடுதலைப்புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றியம் இப்போது நீக்கியபடியால் தடைசெய்யப்பட்ட இந்தப் 'பயங்கரவாத' அமைப்புகள் 'ஈழம் அரசு' அமைப்பதற்கான பிரசார இயக்கத்தை கொண்டியக்கும் வெளியை இது உருவாக்கியுள்ளது எனக்கூறுகிறது.

> சிங்கள பௌத்த பெரும்பான்மையினரை உளவியல் ரீதியில் அச்ச நிலையில் வைத்திருப்பது தனது அரசியல் தேவைகளை நிறைவு செய்யும் என்பதை அரசு உணரும். மகிந்த ராஜபக்ஷதான் புலிகளின் பிரிவினவாதத்தை முறியடிக்கக் கூடிய அரசியல் உறுதியைக் கொண்டவர் என்று நம்ப வைத்து தென்பகுதி மக்களின் வாக்குகளைக் கவருவதே அரசின் திட்டமாகும்

புலம்பெயர் தமிழர் இயக்கங்களுக்குப் புலிப்பட்டம் சூட்டி அவற்றைத் தடைசெய்வதால் அத்தாபனங்கள் இலங்கையில் பயங்கரவாத நடவடிக்கையை அவை ஊக்குவிப்பதாகவோ நிதி வழங்குவதாகவோ இனிமேல் கூறமுடியாது. ஏனெனில் அரசாங்கம் விடுதலைப்புலிகள் இயக்கம் இலங்கையில் இல்லை என்று கூறிவிட்டது. ஆகவே வெளிநாடுகளின் இத்தமிழர் அமைப்புகள் மீது ஒரேயொரு குற்றச்சாட்டை மட்டுமே கூறலாம். தனித்தமிழ் ஈழத்தை அமைப்பதற்கு தீவிரவாத தமிழ் அமைப்புகள் இன்னும் செயற்படுகின்றன என்று கூறலாம். ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் பேசிய போதும் இந்தவகையான வாதமொன்றையே முன்வைத்தார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பார்த்து 'உங்கள் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடுங்கள் நான் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கிறேன்' என்று அவர் பேசினார்.

இன்றைய நவீன உலகில் நாட்டுப் பிரிவினை பற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிப் பேசுவதைப் 'பயங்கரவாத நடவடிக்கை' என்று யாரும் கூறப்போவதில்லை. ஒற்றையாட்சி முறையுள்ள நாடாக இருந்தால் என்ன, சமஷ்டி நாடாக இருந்தால் என்ன ஒரு நாட்டின் ஒரு பிரிவு மக்கள் குழு தாம் பிரிந்து போகப் போவதாகவும் தனிநாடு அமைக்கப் போவதாகவும் பிரசாரம் செய்வதற்கான சுதந்திரம் உள்ளது. 'சுயநிர்ணய உரிமை' என்பது இன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜனநாயக உரிமையாகும். குயுபெக் பகுதியில் வாழும் கனடா தேசத்து மக்கள் இவ்வுரிமைக்காக 1960களின் முற்பகுதியில் இருந்தே போராடி வருகின்றனர். 1980களில் கனடாவின் அரசியலில் இக்கோரிக்கை முன்னரங்கிற்கு வந்தது. "PARTI Quebecois" எனப் பிரஞ்சு மொழியில் அழைக்கப்படும் கட்சி அப்போது தனியாகப் பிரிந்து போவது பற்றி சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனக் கோரியது. இறைமையுடைய சுதந்திர குயுபெக் அரசு அமைப்பதைக்காரியது. சர்வஜன வாக்கெடுப்பு தோல்வியில் முடிந்த போதும் கனடாவின் அரசியலில் இந்த விவாதம் தொடர்ந்தது. அரசியல் யாப்பு ரீதியான சீர்திருத்தம் வேண்டும். கூடிய அதிகாரம் வேண்டும் என்ற சமரச முயற்சிகள் தொடர்ந்தன. தனிநாட்டிற்காக இயக்கம் நடத்திக்கொண்டிருந்த, அதைப் பற்றிப் பேசிவருகின்ற குயுபெக் அரசில் தலைவர்களை அந்நாட்டில் பதவிக்கு வந்த எந்த அரசாங்கமோ அல்லது அரசியல் கட்சியோ 'பயங்கரவாதிகள்' என்ற முத்திரையைக் குத்திப் பேசவில்லை. தொடர்ந்த விவாதங்கள், சமரசப் பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்ற பின்னர் 1995ஆம் ஆண்டில் குயுபெக்கில் இரண்டாவது தடவையாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. தனியான குயுபெக் அரசை நிறுவுவதை 'இல்லை' எனக்கூறும் தீர்மானம் சொற்பவாக்குகளின் வித்தியாசத்தில் முடிவு மூலம் தனிநாட்டுக் கோரிக்கை தோல்வியுற்றது. இதனால் குயுபெக் தொடர்ந்தும் கனடாவின் பகுதியாக இருந்து வருகிறது.

ஸ்கொட்லாந்தின் தேசியவாதிகள் தனியான ஸ்கொட்லாந்து அமைக்க வேண்டும் என்று இயக்கம் நடத்தி வந்தனர். 2014 செப்டெம்பர் 18 ஆம் திகதி ஐக்கிய இராச்சியத்தின் பிரஜைகளாகவுள்ள ஸ்கொட்லாந்து மக்கள் சர்வஜன வாக்கெடுப்பில் பங்குகொண்டு வாக்களித்தனர். 'சுதந்திரத்திற்கான சர்வஜன வாக்கெடுப்பு' என அழைக்கப்பட்ட இந்த வாக்கெடுப்பில் 'இறைமையுள்ள சுதந்திர ஸ்கொட்லாந்து' அமைப்பதற்கு 'ஆம்' அல்லது 'இல்லை' என்று வாக்களிக்கும் படி கேட்கப்பட்டது. 55.3% வீத வாக்காளர்கள் 'இல்லை' என்று கூறிவிட்டனர். ஆனால் தனியான ஸ்கொட்லாந்தை அமைக்கும் கோரிக்கைக்காக இயக்கம் நடத்துவதை தடைசெய்வதோ அல்லது அதனைப் பயங்கரவாதம் என்று முத் திரை குத்துவதோ இடம் பெறவில்லை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இலங்கை அரசியலின் பிரதான நீரோட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்டு


> தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு இலங்கை அரசியலின் பிரதான நீரோட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்டு ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையிலான தீர்வுக்கு இணங்கி வருவதோடு தாம் தனிநாடு கோரப்போவதில்லை என்ற உத்தரவாதத்தையும் அளிக்கக்கூடும். கூட்டமைப்பு அவ்வாறு உத்தரவாதம் அளித்தாலும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று புலம்பெயர் தமிழர் அமைப்புகள் பிரசாரம் செய்வதைத் தவிர்க்க வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது

ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையிலான தீர்வு ஒன்றிற்கு இணங்கிவருவதோடு, தாம் தனிநாடு கோரப்போவதில்லை என்ற உத்தரவாதத்தையும் அளிக்கக்கூடும். த.தே. கூட்டமைப்பு அவ்வாறு உத்தரவாதம் அளித்தாலும் டயஸ்போறா தமிழ் அமைப்புகள் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று பிரசாரம் செய்வதைத் தவிர்க்க வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. தமிழ் அரசு ஒன்றை உருவாக்குவதற்கான சர்வஜனவாக்கெடுப்பைக் கோரும் அவர்களின் சுதந்திர உரிமையை ஐரோப்பிய ஒன்றியம் உட்பட சர்வதேச சமூகம் 'பயங்கரவாத நடவடிக்கை' என்று கூறி தடைசெய்யப்போவதில்லை. தற்போது இல்லாதவொரு புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்கியது ராஜபக்ஷ அரசுக்குச் சிங்கள தீவிரவாத அமைப்புகளின் துணையுடன் இனவாதக் கூச்சலை எழுப்புவதற்கு நல்லதொரு வாய்ப்பைத் தந்துள்ளது. புலித்தடை நீக்கத்தினை ராஜபக்ஷ அரசுக்கு எதிரான பிரசாரத்திற்கு (அதாவது அரசின் செயலின்மையால் தான் தடை நீக்கம் நிகழ்ந்தது) பயன்படுத்தலாம் என்று ஐக்கியதேசியக்கட்சி நினைப்பதும் விவேகமற்ற செயல். ஏனெனில் ஊவா மாகாணசபைத் தேர்தலில் ராஜபக்ஷ அரசின் வாக்கு 20 வீதத்தால் வீழ்ச்சியுற்றதைக் காணமுடிகிறது. போர் முடிந்து 5 வருடங்கள் கடந்துவிட்டது. இக்கால எல்லையில் ஊழலும் ஆட்சி முறைகேடுக ளும் மலிந்தன. அதனால் நாட்டு மக்களின் முன்னுரிமைகள் இப்பொழுது மாறிவிட்டன. இந்நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கம் என்ற விடயம் செல்லாக்காசாய் விட்டது. இதை வைத்துக் கொண்டு மக்களை ஏமாற்றலாம் என்று நினைப்பது அறிவீனம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# ஜனாதிபதி தேர்தலும் தமிழர் அரசியலும்



என்.சத்தியமூர்த்தி

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பிழையோ சரியோ தமிழர்கள் ஜனாதிபதி ராஜபக்ஷவை ஆதரிக்க முடியாது. அதற்காக அச்சாரம் போட்ட பின்னர் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பால் அதிலிருந்து மாறவும் முடியாது. அவர்களை பொறுத்தவரை எதிரணி வேட்பாளரை ஆதரிப்பதா அல்லது தாங்களே ஒரு வேட்பாளரை களம் இறக்குவதா அல்லது வாளாவிருப்பதா என்பதே பிரச்சினையாக இருக்கும்



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அடுத்த வருட பாராளுமன்ற நிதிநிலை அறிக்கையை வைத்துப் பார்க்கும் போது, அவர் அடுத்த ஜனாதிபதித்தேர்தலுக்கு தாயாராகிவிட்டார் என்பது தெளிவாகத் தெரிகிறது. அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல போன்றோர், எதிர்வரும் ஜனவரி மாதத்தின் முன் பாதியில் தேர்தல் இருக்கலாம் என்று வெளிப்படையாகவே பேசி வருகின்றனர். இந்தப் பின்னணியில், தமிழ் மக்களும் வட மாகாணத்தில் மட்டுமாவது அவர்களை ஆட்சி செய்து வரும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் செய்யப் போவது என்ன?

முதலில், பட்ஜெட் சலுகைகள், கெஹலியவின் ஹேஷ்யங்கள் ஆகியவற்றால் மட்டுமே, ஜனாதிபதி மகிந்த, ஜனவரி மாதமே தேர்தலை நடத்திவிடுவார் என்று முடிவு செய்துவிட முடியாது. ஜனவரி 13-14 திகதிகளில் பாப்பரசர் பிரான்சிஸ், இலங்கை வரவுள்ளார் என்பதை கார்டினல் மல்கம் ரஞ்சித் உட்பட்ட நாட்டின் கத்தோலிக்க-கிறிஸ்தவ தலைமை மீண்டும், மீண்டும் உறுதி செய்துவந்துள்ளது. பாப்பரசர் இலங்கை வரும் வேளையில், இங்கு ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றால், அது பல்வேறு வகைகளில் பிரச்சினைக்குரிய விடயமாகிவிடும். பாப்பரசர் வருகைக்கு முன்னரே, ஜனாதிபதித்தேர்தல், ஜனவரி முதல் பகுதியில் நடைபெற்றாலும் இதுவே நிலை.

அந்த வகையில், கடந்த வருடம் கூட, ஜனாதிபதி மகிந்த அரசியல் சட்டத்தை மாற்றிமைத்து, தனது ஆறு வருட பதவிக் காலத்தில், மூன்று வருடங்களே முடிந்த நிலையில் கூட தேர்தல் நடத்தி விடுவார் என்ற பேச்சு எழுந்தது. கெஹலிய போன்ற அமைச்சர்களும், இப்போது போலவே அப்போதும், இந்த '2014-ஆம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தல் நடப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் இல்லை' என்ற வகையிலேயே கருத்துத் தெரிவித்தனர். ஆனால், நடந்தது என்ன?

'நிறைவேற்று அதிகார ஜனாதிபதி' பதவியை மாற்றியமைக்க வேண்டும் என்ற அடிப்படையில், கடந்த வருடம் அனைத்து எதிர்க்கட்சிகளும் பேசி வந்தன. அதன் அடிப்படையில், அவை தேர்தல் கூட்டணி அமைக்க வாய்ப்பு உள்ளதாக அரசியல் நோக்கர்கள் கருதினர். ஆனால், 'யார் வேட்பாளர்?' என்ற கேள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கு பதில் கண்டுபிடிக்க முடியாமல், எதிர்க்கட்சிகள் தங்களுக்குள் சண்டை போட்டுக்கொண்டது தான் மிச்சம். அரசு தரப்பு, ஜனாதிபதித் தேர்தல் குறித்து, பின்னர் பேசவே இல்லை.

தற்போது, ஊவா மாகாண சபைத் தேர்தலில், ஆளும் கூட்டணி தான் எதிர்பார்த்த வெற்றியைப் பெற முடியவில்லை. அதனைத் தொடர்ந்து, எதிர்க் கட்சிகள், தாங்கள் ஏனோ இப்போதே அடுத்த ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்றுவிட்டதாகவே கருதத் துவங்கியுள்ளனர். அதிலும் குறிப்பாக, பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி, இந்த தேர்தல்களை மனதில் வைத்து, தங்களது உள்கட்சி பிரச்சினைகளுக்கு முடிவு கட்ட மீண்டும் ஒரு முறை முயற்சி செய்துள்ளனர். அதன் காரணமாக, ரணில் விக்கிரமசிங்கவின் கட்சித் தலைமை, சஜித் பிரேமதாச போன்ற எதிரணியினருடன் சமாதானம் செய்து கொண்டுள்ளனர்.

இந்தப் பின்னணியில், அடுத்த ஜனவரியில் ஜனாதிபதி தேர்தல் என்றால், அதற்கு ஐக்கிய தேசியக் கட்சியுடன் பிற எதிர்க்கட்சிகளும் கூட்டணி அமைத்துச் செயற்பட வேண்டும். இதற்கு மாறாக, தற்போதைய பத்திரிகை எதிர்பார்ப்புகள், எதிர்க்கட்சிகளின் இடையேயான கொள்கை மற்றும் தனி நபர் பிரச்சினைகளை மீண்டும் முன்னிறுத்தும் என்று அரசு தரப்பு எதிர்பார்ப்பதாகவும் கருத இடமிருக்கிறது. அவ்வாறு, எதிர்க் கட்சிகளுக்கு இடையே மீண்டும் பிரச்சினைகள் தலை தூக்கும் என்றால், அரசு தரப்பு அதில் குளிர்காயவே நினைக்கும். அதுவே, எதார்த்த அரசியலும் கூட. அதில், ஜனாதிபதி மகிந்த தனது அரசியல் எதிரிகளை தனக்கு எதிராக ஓர் அணியில் சேரவிடாமல் தடுப்பதற்கும் இது போன்ற செய்திகள் அவசியமாகின்றன.

### ரணிலும் பொன்சேகாவும்

இப்போதோ, எப்போதோ, ஜனாதிபதித் தேர்தல் நடந்தாலும், அதில் தமிழர்களின் நிலைப்பாடு என்ன? இதனை, பிற எதிர்க்கட்சிகள் நோக்கி இருந்தாலும், இந்தக் கேள்வியை தமிழர் தரப்பும் தனக்குள்ளேயே கேட்டு விடை தெரிவதற்கான சூழ்நிலையும் தோன்றியுள்ளது. தமிழர்களின் ஆதரவு உள்ளவரே நாட்டின் ஜனாதிபதி ஆக முடியும் என்ற சூழ்நிலை உருவாவதையே கூட்டமைப்புத் தலைமை விரும்பும். இதுவும் ஏற்புடைய அரசியல் தான். ஆனால், கடந்த காலத்தை வைத்துப் பார்க்கும் போது, தேர்தல் முடிவு இந்த எண்ணத்தை பிரதிபலிக்கவில்லை என்பதே உண்மை.

இதற்கு எதிர்மறையாக, தமிழர் ஆதரவு என்பதே, அந்த வேட்பாளர் சிங்களப் பேரினவாத வாக்காளர்களால் தோற்கடிக்கப்படுவதற்கு முக்கிய காரணமாக அமைந்து வந்துள் ளது. கடந்த 2010-ஆம் ஆண்டு தேர்தல் இதற்கு எடுத்துக்காட்டு. இதற்கு மாறாக, இனப் பிரச்சினை முக்கிய அங்கம் வகிக்காத 1995-ஆம் ஆண்டு தேர்தலில், 'நிலையான அரசியல் தலைமை' முக்கியம் வகித்தது. அந்தத் தேர்தலில், தமிழர் ஆதரவும் சேர்ந்து கொண்ட நிலையில், சந்திரிகா குமாரதுங்கா இன்றளவும் அதிகப்படியான வாக்குகள் பெற்று ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டவராக விளங்குகிறார்.

அந்தத் தேர்தலில், தமிழர் வாக்குகள் இல்லாதிருந்தால், சந்திரிகா தோல்வி அடைந்திருப்பாரா? பெரும்பாலும் அவர் வெற்றி பெற்றிருப்பார் என்பதே உண்மை. என்ன, தற்போது பெற்றுள்ள சரித்திரம் படைத்த



தேர்தலை மனதில் வைத்து ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாசவுடன் சமாதானம் செய்திருக்கிறார். அடுத்த ஜனவரியில் ஜனாதிபதி தேர்தல் என்றால் ஐக்கிய தேசியக்கட்சியுடன் பிற எதிர்க்கட்சிகளும் கூட்டணி அமைத்து செயற்பட வேண்டும். ஆனால் எதிர்க்கட்சிகளுக்கிடையே மீண்டும் பிரச்சினைகள் தலைதூக்கக்கூடிய சூழ்நிலை தோன்றுவதையே அரசாங்கம் விரும்பும். தனது எதிரிகளை ஓரணியில் சேரவிடாமல் தடுப்பது ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு அவசியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கு வித்தியாசத்திலும், வாக்கு சதவீதத்திலும் அவர் வெற்றி பெற்றிருக்க மாட்டார் என்று வேண்டுமென்றால் கூறிக்கொள்ளலாம்.

அந்த வகையில், கடந்த 2005-ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில், விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழர்களை வாக்களிக்கச் செல்லவிடமால் தடுத்ததினால் மட்டுமே மகிந்த ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது சரியான கருத்தல்ல. பின்னர் நடந்த 2010-ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் ஆதரவு இருந்ததால் மட்டுமே, சரத் பொன்சேகாவை, சிங்கள வாக்காளர்கள் தோல்வி அடையச் செய்தனர் என்ற கருத்து உண்மையானால், அது 2005-ஆம் ஆண்டு நிகழ்வதற்கு அதிக காரணங்கள் இருந்தன.

ஒன்று, இனப்போருக்குப் பின்னர், ஜனாதிபதி மகிந்த அளவிற்கு இல்லை என்றாலும், இராணுவத் தளபதி பொன்சேகாவிற்கு சிங்கள மக்களிடையே அதிக மதிப்பு ஏற்பட்டிருந்தது. இரண்டு, 2010-ஆம் ஆண்டு பொன்சேகாவை ஆதரித்த சிங்கள பேரினவாத கட்சியான ஜே.வி.பி, 2005-ஆம் ஆண்டு தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுடன் கூட்டணி அமைத்திருந்தது. 'தமிழர் ஆதரவு' என்ற ஒரே காரணத்திற்காக பொன்சேகா தோல்வி அடைந்தார் என்ற கருத்தை ஏற்றுக்கொண்டால், அதே காரணத்திற்காக, 2005-ஆம் ஆண்டு தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக சிங்கள வாக்குகள் குவிந்திருக்கலாம் என்று கருதவும் இடமிருக்கிறது.

## தமிழர் நிலைப்பாடு

இந்தப் பின்னணியில், அடுத்த ஜனாதிபதித் தேர்தல் எப்போது நடைபெற்றாலும், தமிழர் வாக்கு தங்களுக்கு இல்லை என்ற எண்ணப்போக்கிலேயே, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணித் தலைமை செயல்படுகிறது எனலாம். இதே காரணத்திற்காகவும், சிங்களப் பேரினவாதிகளை அடக்காமல் இருக்கவும் அது முயல்கிறது என்ற கருத்திலும் உண்மை இருக்கிறது.

ஆனால், 2010-ஆம் ஆண்டு தேர்தலை முன்வைத்து நோக்கும் போது, 'தமிழர் ஆதரவு' இருந்தால் தானும் தனது கட்சியும் தேர்தலில் தோற்றுவிடுவோம் என்ற நிலை தோன்றினால், எந்தவொரு எதிர்க்கட்சி வேட்பாளரும் அத்தகைய நிலைப்பாட்டை எடுக்கமாட்டார் என்றே எண்ணத் தோன்றுகிறது. அவ்வாறானால், இனப்பிரச்சினை குறித்த அத்தகைய வேட்பாளர் மற்றும் அவர் சார்ந்திருக்கும் கட்சி மற்றும் கூட்டணியின் முடிவு தான் என்ன?

அண்மையில் புத்த பிக்கு ஒருவருடன் பேசிய போது, பதின்மூன்றாவது அரசியலமைப்புக்கு சட்ட ஆதரவாக ரணில் பேசினார் என்று செய்தி வெளியானது. ஆனால், பதின்மூன்றாவது திருத்தத்திற்கு அதிகமாக மாகாணங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்க முடியாது என்றும் அவர் கூறியதாகவும் கருத்துகள் வெளியாயின. தமிழர் தரப்பும் கூட்டமைப்பும் பதிமூன்றாவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தும் அதே வேளை, தங்களுக்கு அதிகப்படியான அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்று தொடர்ந்து நிலை எடுத்து வந்துள்ளன.

இந்தப் பின்னணியில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் மற்றும் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவாக இருக்க முடியும்? சரியோ, தவறோ, ஜனாதிபதி ராஜபக்ஷவை தமிழர்கள் ஆதரிக்க முடியாது. அதற்காக அச்சாரம் போட்ட பின்னர், கூட்டமைப்பாலும் அதில் இருந்து மாறிவிடமுடியாது. அவர்களைப் பொறுத்தவரையில், எதிரணி வேட்பாளரை ஆத

**தேர்தல் எப்போது நடந்தாலும் தமிழர் வாக்குகள் தங்களுக்கு இல்லை என்ற போக்கிலேயே ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்கள் செயற்படுகிறார்கள். அதன் காரணத்தினால் தான் சிங்கள பேரினவாதிகளை அரசாங்கம் அடக்காமலும் இருக்கிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிப்பதா, அல்லது தனித்துப் போட்டியிடுவதா, அல்லது வாளாவிருப்பதா என்பதே பிரச்சினையாக இருக்கும்.

### இரண்டு உத்திகள்

இன்றைய நிலைவரப்படி, எதிர்க்கட்சிகளின் தேர்தல் உத்தி இரண்டு வகைப்படுகிறது. 'இரண்டு சுற்று' தேர்தலில் முதல் சுற்றிலேயே, கூட்டணி அமைத்து, ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றுவது. பின்னர், பாராளுமன்றத் தேர்தலிலும் அந்தக் கூட்டணியை தொடர்வது. ஐக்கிய தேசியக் கட்சி இத்தகைய உத்தியை வரவேற்கிறது எனலாம். ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளர் வெற்றி பெறாவிட்டால், அந்த அணி பாராளுமன்ற தேர்தலில் தொடருமா? என்ற கேள்வி எழுகிறது. இரண்டுமே, கூட்டமைப்பையும், தமிழரையும் வெகுவாக ஆனால் வெவ்வேறு வகைகளில் பாதிக்கும் விடயம்.

இதற்கு அப்பால் சென்று, முதல் சுற்றுத் தேர்தலில் அனைத்துக் கட்சிகளும் தனித்தே போட்டியிட்டு, இரண்டாவது சுற்றில் ஓர் அணியாக நிற்பது என்ற உத்தியும் உள்ளது. இதனை, ஜே.வி.பி போன்ற சில கட்சிகள் வரவேற்கும் என்று எதிர்பார்க்கலாம். ஆனால், இவ்வாறு நிகழ, முதல் சுற்றில் ஜனாதிபதி மகிந்த, தேவைப்பட்ட ஐம்பது சதவீத வாக்குகளுக்கு குறைவாகவே பெற்றிருக்க வேண்டும். எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ஒருவரே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதில் அந்தக் கட்சி உறுதியாக இருப்பதாகவே தெரிகிறது. அது போன்றே, தேர்தல் வெற்றியை இரண்டாவது சுற்றிற்கு தள்ளுவதிலும் அந்தக்கட்சிக்கு உடன்பாடு இல்லை என்றே கூறலாம்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜனாதிபதித் தேர்தல் முதல் சுற்றிலேயே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மூலம் பெருவாரியான தமிழர் வாக்குகளை அள்ளிக் கொள்வதற்கே விரும்பும். அவ்வாறு செய்யும் போது, பாரம்பரிய கட்சி வாக்காளர்களைத்தவிர, நடுநிலை வகிக்கும் சிங்கள வாக்காளர்களைத் தனது பக்கம் இழுப்பதற்கும் அந்தக் கட்சித் தலைமை முயற்சி செய்யும். இதற்கு, சட்டம்-ஒழுங்கு, விலைவாசி உயர்வு, ஊழல் போன்ற வழமையான 'ஆட்சியாளர்களுக்கு எதிர்ப்பு' என்ற பிரச்சினைகள் கை கொடுக்கும் என்று அந்தக் கட்சித் தலைமை எதிர்பார்க்கிறது.

அரசு தரப்போ, எப்போது கூட்டமைப்பின் ஆதரவை எதிர்க்கட்சிகள் முயன்று பெறுகின்றனவோ, அப்போதே ஜனாதிபதி தேர்தலை, விடுதலைப் புலிகளுக்கும் அவர்களுக்கு ஆதரவு அளிக்கும் மேலை நாடுகளுக்கும் எதிரான 'ஜனநாயகப் போர்' என்று மீண்டும் திசை திருப்ப முயலும். 'கூட்டு எதிர்க்கட்சி' வேட்பாளர் யாராக இருந்தாலும், வழக்கம் போலவே, தென் இலங்கையில் ஒன்றும், தமிழர் பகுதிகளில் வேறொன்றுமாக அவர்கள் பிரசாரம் செய்ய வேண்டிய கட்டாயம் மீண்டும் ஒரு முறை ஏற்படும்.



**முதற் சுற்று தேர்தலில் அனைத்து கட்சிகளும் தனித்தே போட்டியிட்டு இரண்டாவது சுற்றில் ஓர் அணியாக நிற்பது என்ற உத்தியை ஜே.வி.பி. போன்ற கட்சிகள் வரவேற்கக்கூடும். ஆனால் தேர்தல் முதல் சுற்றிலேயே முடிந்து விட்டால் தமிழர்களும் கூட்டமைப்பும் தனித்துவிடப்படுவார்கள். இரண்டாவது சுற்றுக்கு தள்ளப்படுமேயானால் இனப்பிரச்சினை அப்போதும் ஒரு தேர்தல் பிரச்சினையாக உருவெடுக்காது. மகிந்தவை தோற்கடிப்பது எதிர்க்கட்சிகளின் ஒருமித்த கருத்தாக அமையும்**

### பாராளுமன்றத் தேர்தல்

ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சி கூட்டணி அமைந்து, அது வெற்றி பெற்றாலும், அடுத்து வரும் பாராளுமன்றத் தேர்தலில் அவர்களுடைய நிலைமை என்னவாக இருக்கும் என்பதை கூட்டமைப்பு மிகவும் கவனத்துடன் நோக்கி இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். அவ்வாறான பாராளு மன்ற தேர்தலில், தமிழர் பகுதிகளில் தங்களது வேட்பாளர்களை நிறுத்த வேண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி போன்றவை எதிர்பார்க்கலாம். கடந்த 2010 பாராளுமன்றத் தேர்தலில், வட மாகாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஒரு ஆசனத்தைக் கைப்பற்றியதும் குறிப்பிடத்தக்கது.

அனைத்து சிங்கள தேசிய கட்சிகளையும் பொறுத்தவரையில், தமிழர் பகுதிகளில், அதிலும் குறிப்பாக வட மாகாணத்தில் எதிர்கால சமுதாயத்தின் 'போர்க் குணம்' முற்றிலுமாக மாறுவதற்கு, அங்கு தங்களது அரசியல் மற்றும் தேர்தல் பங்களிப்பு அதிகப்பட வேண்டும் என்றே கருதுகின்றன. அரசியலுக்கு அப்பாற்பட்டு, இதனை தங்களது 'தேசிய கடமை'யாகவே அவை கருதுகின்றன. ஆனால், மக்கள் தொகையைக் காரணம் காட்டி, வட மாகாணத்தில் உள்ள மொத்த பாராளுமன்ற ஆசனங்கள் குறைக்கப்பட்டுள்ள காலகட்டத்தில், கூட்டமைப்புத் தலைமையால் ஒரு ஆசனத்தையாவது தனது கூட்டணிக் கட்சிகளுக்கு விட்டுக்கொடுக்க முடியுமா என்ற கேள்வியும் எழுகிறது.

இதன் காரணமாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமாவது, எந்தவொரு எதிர்க்கட்சி கூட்டணியும் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் இரண்டிற்கும் பொதுவான உத்திகளுடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கருத இடமிருக்கிறது. ஆனால், பாராளுமன்றத் தேர்தலைப் பொறுத்தவரையில், ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமல்ல, ஜே.வி.பி மற்றும் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி ஆகியவையும் தனியாகவே போட்டியிட விரும்பலாம். ஏன், அவை கூட, 'இனப்போர்' முந்தைய காலத்தை மனதில் வைத்து, வட மாகாணத்தில் தாங்களும் தனித்தோ அல்லது கூட்டமைப்பின் ஆதரவுடனோ போட்டியிட விரும்பலாம்.

கடந்த காலங்களில், தாங்கள் ஆதரித்த தென்னிலங்கை கட்சி, தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு, தமிழர்களது எதிர்பார்ப்புகளையும், அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளையும் மறந்து விட்டது என்றும் கூட்டமைப்பு தலைவர்கள் கருதுகிறார்கள். அந்த வகையில், ஜனாதிபதித் தேர்தலில் முதல் சுற்றில் மட்டுமாவது, தனி வேட்பாளரை நிறுத்தி, தங்களது கொள்கைகளுக்கும், கோரிக்கைகளுக்கும் தங்களது சமூகத்தினரிடையே தொடரும் ஆதரவு குறித்து உலகிற்கு மீண்டும் ஒருமுறை பறைசாற்றிக் கொள்ளலாம்.

ஆனால், தேர்தல் முதல் சுற்றிலேயே முடிந்துவிட்டால், தமிழர்களும் கூட்டமைப்பும் மீண்டும் தனித்துவிடப்படுவார்கள். தேர்தல் இரண்டாவது சுற்றிற்கு தள்ளப்படுமேயானால், 'இனப்பிரச்சினை' அப்போதும் தேர்தல் பிரச்சினையாக உருவெடுக்காது. ஜனாதிபதி மகிந்தவை தோற்கடிப்பதே எதிர்க்கட்சிகளின் ஒருமித்த கருத்தாக அமையும். எதிர்க்கட்சி வேட்பாளரை கூட்டமைப்பும், தமிழ் வாக்காளர்களும் ஆதரித்து, அவர் வெற்றிபெற்றாலும், 'இனப்பிரச்சினைக்கான தீர்வு' ஒரு தேசிய கடமையாக கருதப்படுமே தவிர, ஒரு அரசியல் உத்தியாகக் கருதப்படாது.

அதேசமயம், எதிர்க்கட்சி வேட்பாளருக்கு தமிழர்கள் ஆதரவு கொடுத்த பிறகும், முதல் சுற்றிலோ அல்லது பின்னரோ, ஜனாதிபதி மகிந்த, மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், தமிழர்கள் இலங்கை அரசியல் மற்றும் தேர்தலில் 'கொசுறு தான்' என்ற நிலைமை மீண்டும் உறுதி செய்யப்படும். எது எப்படியோ, முதல் சுற்று ஆனாலும் சரி, அல்லது இரண்டாவது சுற்றில் ஆகட்டும், கூட்டமைப்புத் தலைமை ஒரு குறிப்பிட்ட முடிவை எடுப்பதற்கு, 'பொறுப்புக் கூறும் பிரச்சினை'யில் தமிழர்களை ஆதரிக்கும் மேலை நாடுகள் அழுத்தம் கொடுக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இதுவே, பிற்காலத்தில், விடுதலைப் புலிகள் இயக்கம் உயிர்த்தெழுவதற்கும், இலங்கையில் 'தனி நாடு' கோரிக்கை மீண்டும் வலுப்பெறுவதற்கும் காரணமாக அமைந்துவிடும் என்று தற்போதைய ஆளும் தரப்பு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடலாம். எதிர்காலம் எப்படியோ, கடந்த காலத்தில், இத்தகைய பிரசாரம் பலன் தந்துள்ளது என்பதே உண்மை. ■

---

*(21ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

பிரச்சினைகள் அப்போது தான் பெருக ஆரம்பிக்கும். ஆகவே அந்தத் தேர்தலைத் தடுக்க வேண்டும் என்ற கட்டாயம் தோன்றும். தென் கொரியாவில் பாக்-சுங்-கீ 1971 இல் மூன்றாவது தடவையாகப் போட்டியிட்டபோது பாராளுமன்றத்தில் அவருக்கு 55 வீத ஆசனங்களே இருந்தன. இவ்வாறு பெரும்பான்மைப்பலம் குறைந்தபடியால் அவர் காங்கிரஸ் சபையைக் கலைத்துவிட்டு பிரதிநிதித்துவமுறையையும் மாற்றி காங்கிரஸிற்கு நியமன உறுப்பினர்களை நியமித்தார்.

பாக்-சுங்-கீ தனிப்பட்ட முறையில் மோசமான ஒரு நபர் அல்ல. ஜுர்ஜென் கிளய்னெர் என்பவர் 'கொரியா'; ஒரு நூற்றாண்டு மாற்றங்கள் (Jurgen Kleineri; Korea, A CENTURY OF CHANGE) என்ற நூலின் 164 ஆம் பக்கத்தில் பாக்-சுங்-கீ யின் ஆளுமையின் இயல்புகளைக்கூறும் பகுதியைக் கீழே தருகின்றேன். இதனை வாசகர்களே வாசித்து ஒப்பீட்டையும் செய்து மதிப்பிட்டுக் கொள்ளலாம்.

'பாக்-சுங்-கீ மகிழ்ச்சியான ஒரு மனிதர்தான். 1960களில் அவரின் புகைப்படங்களில் புன்சிரிப்பான முகத்தோடு தன் குடும்பத்தினர் மத்தியில் நிற்பதையும் விருந்தினரை சிரித்த முகத்தோடு வரவேற்கும் ஒருவராகவும் காணப்படுகிறார். அவர் மிகுந்த அடக்கமுடையவராக இருந்தார். ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தை (Blue House என்பது அதன் பெயர்) ஆடம்பர மாளிகையாக அவர் மாற்றவில்லை.

அவர் உறவினர்களுக்கு பாரபட்சமான முறையில் நன்மைகளை அள்ளிக்கொடுக்கவில்லை. அவரது அக்கறைகளும் பற்றுதலும் வேறொன்றில் குறிவைத்திருந்தன. நாடும் அதிகாரமும் அவரது குறி இலக்காக இருந்தன. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# மகிந்தவின் மின்னல் வேகமும் ரணிலின் நத்தை வேகமும்



பி.பேர்ட்டி ரணவீரகே

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதியைத் தோற்கடிக்கக்கூடிய - சகல இனங்களைச் சேர்ந்தவர்களுக்கும் ஏற்புடைய வல்லமை பொருந்திய பொதுவேட்பாளர் ஒருவர் களத்தில் இறங்குவதைக் காண்பதற்கு நல்மனம் கொண்ட சகலருமே ஆவல் கொண்டிருந்தார்கள். ஆனால், ஜனாதிபதியின் கதிரையில் அமருவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பெருவிருப்புக் கொண்டிருப்பதன் காரணமாக, அவர்கள் சகலரினதும் நம்பிக்கைகள் சிதறடிக்கப்பட்டுக் கொண்டிருப்பது பெரும் கவலையளிக்கிறது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிடுவார் என்பதை ஐக்கிய தேசியக்கட்சி உத்தியோகபூர்வமற்ற முறையில் ஊர்ஜிதம் செய்திருக்கிறது.

எந்தநேரத்திலும் எந்தத் தேர்தலையும் எதிர்கொள்வதற்குத் தயாராயிருப்பதாக ஐ.தே.க.பெரும்பகட்டு ஆரவாரமாக பல தடவைகள் கூறிவிட்டது. ஆனால், கடந்த பல வருடங்களாக நடத்தப்பட்ட ஒவ்வொரு தேர்தலிலும் அக்கட்சி பரிதாபத்துக்குரியவகையில் தோல்வியைக் கண்டுவந்ததை நாமெல்லோரும் அறிவோம். அண்மையில் நடைபெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊவா மாகாண சபைத் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் மாத்திரமே ஐ.தே.க.வினால் வெற்றி பெறக்கூடியதாக இருந்தது. நீண்டகாலத்துக்குப் பிறகு அக்கட்சி முதல் தடவையாக வெளிக்காட்டியிருக்கும் ஒரு வெற்றிகரமான தேர்தல் செயற்பாடாக அது அமைந்தது எனலாம். வாழ்க்கைச் செலவு கூரையைப் பிரித்துக்கொண்டு வானளாவ உயர்ந்துகொண்டு போவதே அதற்குக்காரணமாகும். தாங்கிக்கொள்ள முடியாத அரிசி விலையே மக்களை ஐ.தே.க.வுக்கு வாக்களிக்க வைத்தது என்பது எனது முடிவு. ஐ.தே.க.வின் செல்வாக்கு அதிகரிப்புக்கு ஹரின் பெர்னாண்டோவின் வசீகரம் பெருமளவுக்கு காரணமாக இருந்தது என்பதும் உண்மையே. ஆனால், அரிசியின் விலை தீர்க்கமான ஒரு காரணியாக இருந்தது.

ஹரின் பெர்னாண்டோவின் கடுமையான உழைப்பு மற்றும் ஆளுமை மிகுந்த தலைமைத்துவம் காரணமாக அரசாங்கம் மீதான மக்களின் கோபத்தை ஐ.தே.க.வுக்கான வாக்குகளாக மாற்றக்கூடியதாக இருந்தது எனினும், பதுளை மாவட்டத்தில் ஹரினினால் செய்ய முடிந்ததை ஜனாதிபதித் தேர்தலில் ரணிலால் செய்யக்கூடியதாக இருக்குமா என்பது மில்லியன் டொலர் பெறுமதியான ஒரு கேள்வியாகும்.

கடந்த சில வாரங்களில் மகிந்தவும் ரணிலும் செய்ததையும் அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐ.தே.க.வும் செய்ததையும் உன்னிப்பாக நாம் நோக்குவோமானால், அடுத்துவரும் வாரங்களில், அடுத்த ஓரிரு மாதங்களில் பிரசார நடவடிக்கைகளில் யார் வெற்றி பெறப்போகின்றார் என்பதை உய்த்துணர்வது ஒன்றும் பெரிய சிரமமான காரியம் அல்ல.

யாழ்ப்பாணத்துக்கு விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி ராஜபக்ஷ தனது பிரசாரத்தை வெகு உற்சாகத்துடன் ஆரம்பித்து விட்டார். அங்கு தமிழர்களுக்கு அவர் காணி உறுதிப்பத்திரங்களையும் தங்க நகைகளையும் வழங்கினார். கடந்த இரு ஜனாதிபதித் தேர்தல்களின் போதும் செய்ததைப்போன்று அவர் அரசாங்க ஊழியர்களை அலரிமாளிகைக்கு வரவழைக்க ஆரம்பித்துவிட்டார். கடந்த வாரம் காலையில் அவர் சுகாதாரச் சேவை ஊழியர்களுடன் பேசினார். மாலையில் விவசாயத்துறை ஊழியர்களைச் சந்தித்தார். மனதுக்கான பாதை வயிற்றினூடாகவே செல்கிறது என்பதை நன்கறித்த ஜனாதிபதி



ஹரின் பெர்னாண்டோவின் கடுமையான உழைப்பும் ஆளுமைமிகுந்த தலைமைத்துவமும் காரணமாக அரசாங்கத்தின் மீது மக்களுக்கிருந்த கோபத்தை ஐ.தே.க.வுக்கான வாக்குகளாக மாற்றக்கூடியதாக இருந்தது. பதுளை மாவட்டத்தில் ஹரினினால் செய்ய முடிந்ததை ஜனாதிபதி தேர்தலில் நாடு பூராவும் ரணிலால் செய்யக்கூடியதாக இருக்குமா என்பது மில்லியன் டொலர் கேள்வி

அலரிமாளிகைக்கு வரவழைக்கப்படுபவர்களுக்கு வயிறு நிறைய சாப்பாடு போட்டு பிறகு தேர்தல் பிரசாரப் பிரசுரங்களை கையில் கொடுக்க ஒரு போதும் தயங்குவதில்லை. வரவழைக்கப்படுபவர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக அவர்களின் வயிறுகளை நிரப்புகின்ற இந்த காரியங்களுக்கெல்லாம் அவர் தனது சொந்தப் பணத்தைச் செலவு செய்கிறாரா அல்லது மக்களின் வரிப்பணத்தைச் செலவு செய்கின்றாரா என்று இப்போது என்னிடம் கேட்காதீர்கள்.

அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ள இலத்திரனியல் ஊடகங்களும் பத்திரிகைகளும் ரணிலுக்கு விரோதமான விசமப் பிரசாரங்களை இடையறாது முன்னெடுக்கின்ற அதேவேளை, மகிந்தவின் ஆதரவாளர்கள் நாடு பூராவும் ரணில் மீது சேறுபூசும் சுவரொட்டிப் பிரசாரங்களை முடுக்கி விட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இதற்கிடையில் செய்திப் பத்திரிகைகளில் தினமும் மகிந்த புகழ்பாடும் முழுப்பக்க விளம்பரங்கள் வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இலங்கைத் துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான வேலைத் தலம் ஒன்றில் 24 மேடைகளும் (சில மேடைகள் 50 மீட்டர் அகலமானவை) பிரமாண்டமான தொலைக் காட்சித் திரைகளுக்கான ஸ்ராண்டுகளும் அமைக்கப்பட்டுக் கொண்டிருந்ததை அங்கு திடீரென்று விஜயம் மேற்கொண்ட சில ஐ.தே.க. எம்.பி.க்கள் கண்டார்கள். கொழும்பில் உள்ள பெரும்பாலும் சகல அச்சகங்களுக்கும் மகிந்தவின் தேர்தல் பிரசா ரப் பிரசுரங்களை அச்சிடுவதற்கான ஓடர்கள் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அதன் விளைவாக ஏனையவர்களின் ஓடர்களை ஏற்றுக் கொள்வதற்கு அந்த அச்சகங்கள் மறுப்புத் தெரிவிப்பதாகவும் ஜனதாவிமுக்தி பெரமுனை (ஜே.வி.பி) தெரிவித்திருக்கிறது.

இது இவ்வாறிருக்க, ஐ.தே.க. என்ன செய்து கொண்டிருக்கிறது? சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் சிறு கூட்டமொன்றில் கலந்து கொண்ட ரணில் சில தேர்தல் வாக்குறுதிகளை அளித்ததைக் காணக்கூடியதாக இருந்தது. தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியதிகாரத்துக்கு வந்தால் இந்த வாக்குறுதிகளையெல்லாம் அவர் நிறைவேற்றுவாராம். அதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப்பிறகு அவர் திடீரென்று சிங்கப்பூருக்கு பறந்ததாக செய்திகள் வெளியாகின. ஐ.தே.க.வின் தேர்தல் பிரசாரப் பணிகளுக்குப் பொறுப்பான 20 பேர்கொண்ட குழு மூன்றாவது தடவையாகக் கூடியதாக கட்சியிடமிருந்து இன்னொரு அறிவிப்பு வந்தது. அத்துடன், ஐ.தே.க. முக்கியஸ்தர்கள் செய்தியாளர் மகாநாடுகளைக் கூட்டியதையும் காணக்கூடியதாக இருந்தது.

பலம்பொருந்திய மகிந்தவை இந்த மாதிரியாகத்தான் ஐ.தே.க.எதிர்த்துப் போட்டியிடப்போகிறதா?

1994 ஆம் ஆண்டில் தேர்தலுக்கு முன்னரான நாட்களை நினைவு மீட்டிப்பாருங்கள். அரசாங்கத்துக்கு எதிரான பெருவாரியான பிரசுரங்கள், செய்தித் திரட்டுகள் வாராந்தம் வெளியிடப்பட்டன. அவை மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றன. சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஆதரவான முறையில் நிலைவரங்களை மாற்றியமைத்ததில் அந்தப் பிரசுரங்களுக்கு பெரும் பங்கு இருந்தது.

ஐ.தே.க. அதற்கு அனுகூலமான முறையில் சுவரொட்டிகளைப் பயன்படுத்திய இன்னொரு சந்தர்ப்பம் 1988 ஜனாதிபதித் தேர்தலாகும். ஜே.வி.பி.யிடமிருந்து வந்த அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் கூட, ரணசிங்க பிரேமதாச கொழும்பில் உள்ள தனது ஆதரவாளர்களை நாட்டின் மூலைமுடுக்குகளுக்கெல்லாம் அனுப்பி 'மே கவுத மொக்காத கறன்னே' (Who is this. What is he doing?) என்ற வாசகம் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகளை ஒட்டச் செய்தார். இத்தகைய சுவரொட்டிகளை ஒட்டும் இரண்டாவது சுற்றுப் பிரசாரமொன்றையும் முன்னெடுக்க பிரேமதாச திட்டமிட்டிருந்தார். ஆனால், ஆயுதபாணி ஜே.வி.பி.யினரிடமிருந்து அவரின் ஆட்களுக்கு வரக்கூடிய ஆபத்துகளை உணர்ந்து பத்திரிகை விளம்பரங்களுடன் மட்டுப்படுத்திக் கொண்டார்.

1977 பொதுத் தேர்தலுக்கு முன்னதாக பண்டாரநாயக்க குடும்ப அரசியலைப்பற்றி கேலிச்சித்திரங்கள் கொண்ட இலட்சக்கணக்கான சுவரொட்டிகள் நாடு பூராகவும் ஒட்டப்பட்டன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக மக்களின் அபிப்பிராயத்தைத்திசை திருப்பியதில் அந்தச் சுவரொட்டிகள் பாரிய தாக்கத்தைச் செலுத்தின.

ஜே.ஆர். ஜெயவர்தனவின் ஐ.தே.க.வுடனோ பிரேமதாசவின் ஐ.தே.க.வுடனோ இன்றைய ஐ.தே.க.வை ஒப்பிடுவது குறித்து நினைத்துப்பார்க்கவே முடியாது. இந்த நிலைமை ஏற்பட்டதற்கான காரணங்களில் ஒன்று ஆற்றலும் ஆளுமையும் மிகுந்த ஐ.தே.க. உறுப்பினர்கள் எல்லோரும் மகிந்தவின் அமைச்சரவைக்குள் இருப்பதேயாகும்.

ரணிலின் ஐ.தே.க. அதன் வேட்பாளரை அறிவிப்பது தொடர்பாகவோ அல்லது ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சியைக் கண்டனம் செய்தோ நாடளாவிய ரீதியில் ஒரு சுவரொட்டியைத் தானும் இதுவரை ஒட்டவில்லையே.

அரசுக்கு எதிரான ஒரு பிரசுரத்தைத் தானும் இதுவரையில் ஐ.தே.க.வினால் வெளியிட முடிந்திருக்கிறதா? நான் அறிந்தவரை அக்கட்சி அதன் உத்தியோகபூர்வ பத்திரிகையான 'சியரட்டவைக்' கூட இதுவரை வெளியிடத் தவறிவிட்டது என்றே தோன்றுகிறது. ஐ.தே.க.வுக்கென்று ஊடகப் பிரிவு ஒன்று இருக்கின்ற போதிலும் கூட, அது தனது செய்தியை மக்களுக்குப் பரப்ப எதையும் செய்வதாக இல்லை.

தேர்தலை நோக்கிய தனது பிரசார ஏற்பாடுகளை மகிந்த மின்னல் வேகத்தில் செய்ய ஆரம்பித்திருக்கும் அதேவேளை, ரணிலின் பிரசார இயக்கம் என்று ஒன்று இருக்கிறதா என்று கேட்க வேண்டியிருக்கிறது. அவ்வாறு ஏதாவது இருந்தாலும் கூட, அது ஆமைவேகத்திலேயே நடக்கிறது என்றுதான் சொல்லவேண்டும்.

மகிந்தவை தோற்கடிக்க வேண்டுமென்று ஐ.தே.க.நினைப்பதானால், அது அதிரவைக்கும் பிரசாரங்களை முன்னெடுக்க வேண்டும். வலிமையான பிரசார இயக்கத்தினால் மாத்திரம் எதிரணியைத் தோற்கடிக்க முடியாது என்பது உண்மையே. ஆனால், நாட்டின் ஒவ்வொரு வீட்டிலும் எதிரொலிக்கக்கூடிய பிரசார இயக்கமொன்று-எதிராளியை தடுமாற வைக்கின்ற பிரசார இயக்கமொன்று பெரும் பயனைத் தரக்கூடியதாக இருக்கும் என்பதிற் சந்தேகமில்லை.

**அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்த்து, மக்களை கவரக்கூடிய சிறந்த ஆளுமைகொண்ட பொது வேட்பாளருக்கு ரணில் ஆதரவளிப்பாரேயானால் அவருக்கும் நல்லது. ஐ.தே.க.வுக்கும் நல்லது. தேர்தலில் ரணில் போட்டியிட்டு தோல்வியடையும் பட்சத்தில் அதுவே அவரின் அரசியல் வாழ்வின் முடிவாக இருக்கும்**

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்த்து, மக்களைக் கவரக்கூடிய சிறந்த ஆளுமை கொண்ட ஒரு பொதுவேட்பாளருக்கு ரணில் ஆதரவளிப்பாரேயா னால், அது அவருக்கும் நல்லது, ஐ.தே.க.வுக்கும் நல்லது. ஏனென்றால் மகிந்த இன்னமும் கூட சிங்களவர்களில் பெரும்பான்மையானவர்களின் ஆதரவைக் கொண்டிருப்பதால் அவரைத் தோற்கடிப்பது சுலபமானதாக இருக்கப்போவதில்லை. மகிந்தவை நிபந்தனையின்றி ஆதரிக்கப்போவதாக ஆறுமுகன் தொண்டமானும் உறுதியளித்துவிட்டார். அதனால் மலையகத் தமிழர்களில் கணிசமான தொகையினரின் வாக்குகள் ஜனாதிபதிக்கு கிடைக்கப்போகிறது.

ஜனாதிபதித்தேர்தலில் ரணில் போட்டியிட்டு தோல்வியடையும் பட்சத்தில் அதுவே அவரின் அரசியல் வாழ்வின் முடிவாக இருக்கும்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரசியல்

ஈராக்கினதும் சிரியாவினதும் மீட்பர்களாக தாங்கள் மாத்திரமே இருக்க முடியாது என்று கூறும் அமெரிக்காவும் பிரிட்டனும் மத்திய கிழக்கைச்சேர்ந்த மேலும் கூடுதலான நாடுகள் தங்களுடன் போரில் இணைந்து கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்த வண்ணமிருக்கின்றன



ஹர்ஷ் வி பந்த்

# நேச நாடுகளைத்தேடும் மேற்குலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராக்கிலும் சிரியாவிலும் பல பகுதிகளைக் கைப்பற்றியிருக்கும் இஸ்லாமிய அரசு இயக்கத் தீவிரவாதிகள் மீது அமெரிக்கா அதன் விமானத்தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியிருக்கிறது. இதன் விளைவாக துருக்கி எல்லைக்கு அண்மையாக இருக்கும் குர்திஷ் இனத்தவர்களைப் பெரும்பான்மையாகக்கொண்ட சிரிய நகரான கோபானியில் தீவிரவாதிகளின் முன்னேற்றத்தைத் தாமதிக்கக்கூடியதாக இருந்திருக்கிறது. கோபானியில் நிலைவரம் தடுமாற்றமானதாக இருப்பதாக அமெரிக்கா தொடர்ந்து எச்சரிக்கை செய்து கொண்டிருக்கின்ற போதிலும், சகல பிரதான நகரங்களில் இருந்தும் இஸ்லாமிய அரசு தீவிரவாதிகள் விரட்டப்பட்டுவிட்டார்கள். கோபானி நகரில் விமானத்தாக்குதல்களைத் தீவிரப்படுத்துவதற்கு முன்னதாக வாஷிங்டன் சிரிய குர்திஷ் ஜனநாயக ஒன்றியக் கட்சியை (Syrian Kurdish Democratic Union party) அணுகியது. அக்கட்சிக்கும் அமெரிக்கா தலைமையிலான கூட்டணிக்கும் இடையேயான ஒருங்கிணைந்த செயற்பாடுகளே கோபானியில் இஸ்லாமிய அரசுத் தீவிரவாதிகளுக்கு எதிராக அடையக்கூடியதாக இருந்த வெற்றிக்கு பெருமளவுக்குக் காரணமாயிருந்தன.



தரைப்படைகள் இல்லாத காரணத்தினால் தொடர்ந்தும் நெருக்குதல்களுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்ற போதிலும் கூட, மேற்குலக நாடுகளின் முயற்சிகள் வெற்றி பெற்று வருவதற்கான சான்றுகள் தெரிகின்றன. கடந்தமாத நடுப்பகுதியில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா 22 நாடுகளைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினார். ஈராக்கிலும் சிரியாவிலும் இஸ்லாமிய அரசுத் தீவிரவாதிகளை முறியடிப்பதற்கு 'நீண்டகால அடிப்படையிலான நடவடிக்கைகள் தேவை' என்று அவர் எதிர்வு கூறிய போதிலும், இதுவரையில் காணப்பட்டிருக்கும் 'முக்கியமான வெற்றிகளை' அடிக்கோடிட்டுக் காட்டத் தவறவில்லை. கோபானியிலும் ஈராக்கின் அன்பார் மாகாணத்திலும் உள்ள நிலைவரங்கள் தொடர்பாக வாஷிங்டன் தொடர்ந்தும் அக்கறை கொண்டதாக இருக்கிறது. பாக்தாத்திலும் அன்பார் மாகாணத்திலும் அண்மையில் இடம்பெற்ற தாக்குதல்களுக்கு இஸ்லாமிய அரசு உரிமை கோரியிருக்கிறது.

இந்த நெருக்கடியில் துருக்கியின் பாத்திரம் தொடர்பில் பெருமளவு கவனம் குவிக்கப்பட்டு வருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இஸ்லாமிய அரசுக்கு எதிரான சண்டையில் இணைந்து கொள்வதற்கு துருக்கியில் உள்ள விமானப்படையின் 'ட்ரோன்களுக்கு' (ஆளில்லா விமானங்கள்) பச்சை விளக்குக் காட்டப்பட்டு விட்டதாகக் கூறப்படுகின்ற போதிலும் கூட, துருக்கியின் திட்டவட்டமான பாத்திரம் குறித்து பெருமளவுக்கு நிச்சயமற்ற தன்மையே நிலவுகிறது. ஈராக் மற்றும் சிரியாவுக்குள் இராணுவத்தை அனுப்புவதற்கு துருக்கி அரசாங்கம் தீர்மானிக்கும் பட்சத்தில், அவ்வாறு செய்வதற்கான அதிகாரத்தை அந்நாட்டுப் பாராளுமன்றம் அளித்திருக்கிறது. சிரியாவில் இஸ்லாமிய அரசுத் தீவிரவாதிகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரைச் சண்டைகளில் ஈடுபடக்கூடிய மிதவாதக் கிளர்ச்சியாளர்களுக்கு பயிற்சியளிக்க பயன்படுத்துவதற்கு பிராந்தியத்தை வழங்குவதில் சவூதி அரேபியாவுடன் இணைந்துகொள்வதற்கு துருக்கியும் இப்போது தயாராயிருக்கிறது.

இஸ்லாமிய அரசுக்கு எதிரான சர்வதேசப் போரில் இணைந்து கொள்ளுமாறு துருக்கிக்கு அமெரிக்காவும் பிரிட்டனும் அழைப்பு விடுத்திருக்கின்றன. ஈராக்கினதும் சிரியாவினதும் மீட்பர்களாக தாங்கள் மாத்திரமே இருக்க முடியாது என்று கூறும் அமெரிக்காவும் பிரிட்டனும் மத்திய கிழக்கைச் சேர்ந்த மேலும் கூடுதலான நாடுகள் தங்களுடன் இப்போரில் இணைந்துகொள்ள வேண்டும் என்று வேண்டுகோள்விடுக்கின்றன. துருக்கியின் தெற்கில் இன்கிறிலிக் என்ற இடத்தில் அமைந்திருக்கும் அமெரிக்க விமானத்தளத்தில் இருந்து போர் விமானங்கள் புறப்பட்டு இஸ்லாமிய அரசுத் தீவிரவாதிகளின் நிலைகள் மீது தாக்குதல்களை நடத்துவதற்கு அனுமதிக்குமாறு அமெரிக்கா துருக்கி அரசாங்கத்துக்கு நெருக்குதல்களைக் கொடுத்துக்கொண்டிருக்கும் அதேவேளை, சிரிய ஜனாதிபதி பஷார் அல்-அசாத்தின் ஆட்சிக்கு எதிராகப் பரந்தளவிலான நடவடிக்கைக்கு முன்வருமாறு துருக்கி ஜனாதிபதி ரஜிப் எர்டோகான் அமெரிக்காவை வலியுறுத்திக்கேட்டுக் கொண்டிருக்கிறார். உள்நாட்டுப் போரில் 2 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் பலியாவதற்கு மூலகாரணமே அசாத்தின் ஆட்சிதான் என்று எர்டோகான் குற்றஞ்சாட்டுகிறார்.

## அமெரிக்காவின் ஈடுபாட்டுக்கு கோரிக்கை

சுமார் 16 இலட்சம் சிரிய அகதிகளைப் பராமரிப்பதற்கு துருக்கி மேற்கொண்டிருக்கின்ற பணிகளை மேற்குலகம் அங்கீகரிப்பதாக இல்லை என்ற கவலையும் ஜனாதிபதி எர்டோகானுக்கு இருக்கிறது. சிரியாவுடனான எல்லைக்கு அண்மையாக விமானப் பறப்புத் தடை வலயம் ஒன்றையும் பாதுகாப்பு வலயம் ஒன்றையும் ஏற்படுத்துவது உட்பட அமெரிக்காவின் கூடுதல் ஈடுபாட்டை துருக்கி அரசாங்கம் வேண்டி நிற்கிறது. தன்னால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நிலைப்பாட்டை துருக்கி தெளிவாக அறிவித்திருக்கிறது; சிரிய-துருக்கி எல்லையோரமாக ‘இடைத்தடுக்கு வலயம்’ (Buffer Zone) ஒன்றை அமெரிக்காவும் அதன் கூட்டணி நாடுகளும் உருவாக்காதபட்சத்தில், மேற்குலகின் இராணுவ நடவடிக்கைகளில் துருக்கியால் இணைந்து கொள்ள முடியாமற் போகும்.

இஸ்லாமிய அரசு மீதான தாக்குதல்களுக்கு தென்துருக்கி இன்கிறிலிக் விமானத்தளத்தை அமெரிக்கா பயன்படுத்த அனுமதிப்பதற்கான உடன்பாடொன்று காணப்பட்டதாக ஒபாமா நிருவாகம் கூறியிருந்த போதிலும், அவ்வாறு எந்த உடன்பாடுமில்லை என்று துருக்கி நிராகரித்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இஸ்லாமிய அரசுக்கு எதிரான போரில் இன்கிறிலிக் விமானத் தளத்தை அமெரிக்கப் படைகள் பயன்படுத்த அனுமதிப்பதா இல்லையா என்பது தொடர்பில் வாஷிங்டனுக்கும் தங்களது அரசாங்கத்துக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதாக மாத்திரமே துருக்கி அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள். இன்கிறிலிக் விமானத்தளம் அமெரிக்க விமானப்படையினதும் துருக்கி விமானப்படையினதும் ஒரு கூட்டுத் தளமாகும். இதில் சுமார் 1500 அமெரிக்கப் படையினர் தங்கியிருக்கிறார்கள்.



கோபானி நகரில் இஸ்லாமிய அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டம் செய்யும் மக்கள்

துருக்கியில் அரச ஏதேச்சாதிகாரம் அதிகரித்துவருவதாகவும் அந்தநாடு மேற்குலகில் இருந்து தூர விலகிச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்ற குற்றச்சாட்டுகள் காரணமாக எர்டோகான் ஏற்கனவே பிரச்சினைகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில், இஸ்லாமிய அரசுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பில் அமெரிக்காவுடன் மூண்டிருக்கும் தகராறு துருக்கியின் உலகளாவிய நன்மதிப்பு குறித்து கேள்விகளைக் கிளப்பியிருக்கிறது. அயல் நாடொன்றில் தொடருகின்ற போர் குறித்து துருக்கி மக்களுக்கு இருக்கின்ற எச்சரிக்கையுணர்வு, பிராந்தியத்தின் குர்திஷ் இனத்தவர்களுடனான சஞ்சலமான உறவுகள் உட்பட பல்வேறு அம்சங்கள் இஸ்லாமிய அரசுக்கு எதிரான மேற்குலகின் போரில் ஈடுபடுவதில் துருக்கி பெரும் அக்கறை காட்டத் தயங்குவதற்கு காரணிகளாக இருக்கின்றன. இஸ்லாமிய அரசை மிகப்பெரிய அச்சுறுத்தலாக மேற்குலகம் பார்க்கும் போது, துருக்கி அரசாங்கமோ பல அச்சுறுத்தல்களில் ஒன்றாகவே அதைப் பார்க்கிறது. அத்துடன், துருக்கியின் நிகழ்ச்சி நிரலில் அதியுயர் மட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டத்தில் இஸ்லாமிய அரசு இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

புதிய நிலப்பகுதிகளைக் கைப்பற்றுவதில் இருந்து இஸ்லாமிய அரசுப் படைகளைத் தடுப்பதில் விமானத் தாக்குதல்கள் பெரியதாக்கத்தைச் செலுத்த முடியாமல் போகக்கூடும் என்பதால் மேலும் கூடுதலான அளவு ஆக்ரோஷமான இராணுவ நடவடிக்கையை எடுக்குமாறு ஒபாமா நிர்வாகத்துக்கு அமெரிக்காவுக்குள் இருந்து நெருக்குதல்கள் கொடுக்கப்படுகின்றன. ஆர்வமற்ற-தயக்கம் காட்டுகின்ற ஒரு பிரதம தளபதியாகவே தொடர்ந்து ஒபாமா காணப்படுகிறார். அதனால், வீறார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு கூடுதலான நேச அணிகள் அவருக்குத் தேவைப்படுகிறது. நேச நாடுகளுடன் ஒன்றுபட்ட நோக்கத்துடன் செயற்படுவதிலான தனது எண்ணத்தை ஒபாமா வெளிக்காட்டுகின்ற அதேவேளை, ஈராக்கிலும் சிரியாவிலும் இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் முன்னேற்றம் ஏற்படுகின்ற கால கட்டங்களும் பின்னடைவு ஏற்படுகின்ற காலகட்டங்களும் இருக்கும் என்று அவர் எதிர்வு கூறவும் தவறவில்லை.

ஈராக்கில் மொசூல் அணைக்கட்டைப் பாதுகாத்தது உட்பட இஸ்லாமிய அரசுக்கு எதிராக மேற்குலக கூட்டணி நாடுகள் கண்ட 'முக்கியமான வெற்றிகளை' ஒபாமா மெச்சிய அதேவேளை, இது ஒரு நீண்ட கால அடிப்படையிலான போராக இருக்கப்போகிறது என்பதை அந்த நாடுகள் விளங்கிக்கொள்ள வேண்டும் என்றும் கூறியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. போர்களினால் சலிப்படைந்து வெறுப்புற்றிருக்கும் மேற்குலக பொது ஜனங்களின் அபிப்பிராயத்தை தனது தரப்புக்கு ஆதரவாக வைத்திருப்பதிலேயே ஒபாமா பெரிய சவாலை எதிர்நோக்குகிறார். ■

***(கட்டுரையாளர் லண்டன் கிங்ஸ் கல்லூரியின் பாதுகாப்பு ஆய்வுகள் நிறுவனத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மத்திய கிழக்கு நெருக்கடி

# வரலாற்றால் வஞ்சிக்கப்பட்ட காஸா



ஜீன் பியரி பைலியு

2008ஆம் ஆண்டின் பின் மூன்றாவது தடவையாக காஸாவில் மூன்று மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட கொந்தளிப்புக்குப்பிறகு காஸாவின் பிரச்சினைகளுக்கான மூலகாரணங்களுக்கான தீர்வு இல்லாவிடின் யுத்த நிறுத்த ஒப்பந்தங்களால் எவ்வித பயனும் விளையப் போவதில்லை. இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையில் ஒரு சண்டை நிறுத்தம் வந்திருக்கக்கூடும். ஆனால் அடுத்த யுத்தத்திற்கான தொடக்க காலமாகவே இருக்கும். உலக தலைவர்களின் செயலின்மை வெளிப்படையாகத் தெரிகிறது. இஸ்ரேல் - பலஸ்தீனம் என்ற பிரச்சினையை முழுமையாக எடுத்து நோக்கினால் கிழக்கு ஜெருசலேம், மேற்குக் கரை, காஸா என்று மூன்று பிரச்சினை மையங்கள் உள்ளன. இந்த மூன்றில் காஸா மற்ற இரண்டையும் விடச் சிக்கல் ஓரளவுக்கு குறைவான மையம். அப்பகுதிக்கே தீர்வு கொண்டு வர முடியவில்லை.

1949 இல் அராபிய - இஸ்ரேல் யுத்தம் முடிவுற்ற போது காஸாவின் எல்லைகள் இவை என வரையறையாகிவிட்டன. இவ்வெல்லைகள் எல்லாத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. 2005இல் காஸாவை விட்டு எல்லா யூதக் குடியேறிகளும் வெளியேறினர். அப்போது ஏரியல் சரோன் காஸாவில் இருந்து இஸ்ரேல் ஒரு தலைப்பட்சமாக வெளியேறுவதென முடிவு செய்தார். எகுட்பராக்கும் 2000ஆம் ஆண்டில் தென் லெபனானில் இருந்த படைகளை விலக்கிக்கொள்ளும் முடிவைச் செய்திருந்தார். காஸா துண்டுப்பகுதியில் முஸ்லிம்கள், யூதர்கள், கிறிஸ்தவர்கள் என்ற மூன்று பிரிவினரும் எனது, உனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்று சண்டைபோட்டுக் கொள்ளக் கூடிய சமயத்தலம் எதுவும் இல்லை.

இஸ்ரேலியர்கள் தாம் ஒரு நாள் நித்திரைவிட்டு எழும்போது காஸா என்ற இடம் காணாமல் போய்விட்டது என்பதை அறியும் போது ஆச்சரியப்பட்டிருக்கமாட்டார்கள். (என்றோ ஒரு நாள் அது பறிபோகும். அப்படிப் போகும் போது எகிப்து நாட்டின் பகுதியாக மாறினால் சந்தோஷம் என்பதே அவர்களின் கனவாக இருந்து வந்தது). ஆனால் காஸா இன்றும் இருக்கிறது. 141 சதுர மைல் பரப்பளவு (365 சதுர கிலோ மீற்றர்) உள்ள இடத்தில் 1.8 மில்லியன் மக்கள் செறிந்து வாழும் காஸா இன்றும் இருக்கிறது. மத்திய தரைக்கடலின் கரையோரத்தின் இச்சிறுதுண்டு நிலம் உலகின் மிகவும் கொடுமை நிறைந்த இடமாக நிலைத்திருப்பது எப்படி நிகழ்ந்தது?

பல நூற்றாண்டுகளுக்கு முன்பே காஸா வரலாற்றில் இடம்பெற்றுவிட்டது. அங்கு வந்துபோன பயணிகளின் குறிப்புகளில் காஸா வளம் மிக்க பசும்சோலை என்று வர்ணிக்கப் பட்டுள்ளது. இன்றைய புதிய நகருக்கு தெற்கே, மத்திய தரைக்கடலோடு இணையும் காஸா பள்ளத்தாக்குப் பகுதி வனராசிகள் உறைவிடமாகும். அங்கு பறவைகள் இடம் பெயர்ந்து தங்குவது உண்டு. சிறிய விலங்குகளும் வாழும் இடமாக இப் பள்ளத்தாக்குப் பகுதி உள்ளது. காஸா ஒரு காலத்தில் பார்லி ஏற்றும் திக்கு புகழ்பெற்ற இடமாக இருந்தது. அண்மைக்காலமாக அது தோடை இன பயிர்ச்செய்கைக்கும் அவ்வினப் பழங்களின் ஏற்றுமதிக்கும் சிறப்பு வாய்ந்த இடமாக மாறியது. காஸாவைச் சூழ லெவன்ட், சினாய், நெகவ் என்ற பாலைவனங்கள் உள்ளன. அதன் புவியியல் அமைவிடம் பேரரசுகளின் சந்திப்பு மையமாக காஸாவை ஆக்கிவிட்டது.

காஸா நகரம் இயற்கைத்துறை முகத்தை அண்டி உள்பக்கமாக அமைந்துள்ளது. 3500 வருடங்களுக்கு முன்பே மக்கள் இங்கு வாழ்ந்திருக்கிறார்கள். அண்மையில் நடந்த யுத்தத்தின் போது காஸாவில் ஹமாஸ் இயக்கம் சுரங்க வழிகளை வலைப்பின்னலாக அமைத்து இஸ்ரேலியப் படைகள் மீது தாக்குதல் தொடுத்தன. வரலாற்றில் நிகழ்ந்த யுத்தங்கள் பற்றிய குறிப்புகள் என்ற வகையில் இதே பகுதியில் மகா அலெக்சாண்டர் யுத்தம் செய்திருக்கிறான். காஸா நகரை அவனது படைகள் மூன்று மாதம் வரை சுற்றி வளைத்து முற்றுகையிட்டன. இறுதியில் நகரக் கோட்டையில் சிறைப்படுத்தப்பட்டிருந்த அராபியப் படைகளை வென்று நகரைச் சூறையாடிய மகா அலெக்சாண்டர், கொள்ளையிட்ட செல்வங்களை ஆறு கப்பல்களில் நிரப்பிக்கொண்டு சென்றான் என்பது வரலாறு. அவனது படையெடுப்பு நிகழ்ந்து 1500 ஆண்டுகள் கழிந்தபின் இஸ்லாம் தோன்றியது. காஸாவில் இஸ்லாமியர் தம் மதத்தை நிறுவினர். பின்னர் ஆசியாவில் புகுந்த மொங்கோலியப் படையெடுப்பாளர்கள் காஸாவின் எல்லை வரை மேற்காக முன்னேறி வந்தனர். பல நூற்றாண்டுகளின் பின்னர் நெப்போலியன் காஸாவைக் கைப்பற்றினான். சிறிது காலம் மட்டுமே காஸா நெப்போலியன் கட்டுப்பாட்டில் இருந்தது. 1906 ஆம் ஆண்டில் எகிப்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த பிரித்தானியாவும் பலஸ்தீனை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஒட்டோமன் பேரரசும் காஸாவின் எல்லைகள் பற்றிய உடன்பாடொன்றுக்கு வந்தன. அதன்படி எகிப்தின் சினாய் பகுதிக்கும் பலஸ்தீனத்திற்கும் இடையிலான எல்லை தெளிவாக்கப் பட்டது. கரையோர எல்லை நகரான றபா (RAFAH) இன்றுவரை எல்லையாக இருந்து வருகிறது.

காஸா பிரித்தானியாவின் பாதுகாப்புப் பகுதியாக (Mandate) ஆகிய பின்னர் 1922 இல் தான் இங்கு யூதர் - முஸ்லிம்கள் மோதல்கள் ஆரம்பித்தன. 1929 இல் காஸாவின் சுதேசிகளான யூதர்கள் 54 பேர்

> **இஸ்ரேலும் ஹமாஸும் இன்னமும்கூட இராணுவ வெற்றி பற்றி கனவு காண்கின்றன. இந்த மாயையினால் அவலப்படுபவர்கள் காஸாவின் மக்களே. இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையில் சமாதானம் ஏற்பட வேண்டுமானால் காஸாவில்தான் அதற்கான அத்திபாரம் இடப்படவேண்டும். சமாதானத்தின் திறவுகோல் அதுதான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஸா நகரை விட்டு வெளியேறினர். அப்போது ஜெருசலேம் நகரிலும் ஹெபிரோன் போன்ற வேறு இடங்களிலும் ஏற்பட்ட சியோனிச எதிர்ப்புக் கலவரங்களால் காஸாவும் பாதிக்கப்பட்டதால் இவ்வெளியேற்றம் நிகழ்ந்தது.

(அயலவர்களான அராபியர்கள் இந்த யூதர்களைப் பாதுகாத்தனர்). 1945 இல் காஸாவில் ஐரோப்பிய யூதர்களின் குடியேற்றம் காரணமாக அந்த யூதர்கள் தொகை சனத்தொகையில் 2% ஆகியது. அவர்களின் நில உடைமை 4% ஆக இருந்தது. 1947 இல் ஐ.நா. பிரிவினைத் திட்டத்தை வகுத்த போது புதிதாக உருவாக்கப்படும் அராபிய அரசின் பகுதியாக காஸா அமையும் என்றும் இஸ்ரேல் என்ற தனிநாடு உருவாகும் என்றும் கூறியது. 1948 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி இஸ்ரேல் அரசு பிரகடனம் செய்யப்பட்ட போது, எகிப்திய இராணுவம் காஸாவைக் கைப்பற்றி தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டது. நாலா திசைகளில் இருந்தும் அப்போது பலஸ்தீன அகதிகள் காஸாவிற்குள் நுழைந்தனர்.

இஸ்ரேல் காஸா மீது தரை வழியாகவும், கடல் வழியாகவும், வான் வழியாகவும் தொடர்ந்து குண்டுவீசித் தாக்கியபடி இருந்தது. அன்றைய தாக்குதல்கள் இன்று போல் பலமானவையாக இருக்கவில்லை. காஸாவில் அகதிகள் எண்ணிக்கை பெருகுளிராலும், தொற்று நோய்களாலும் பலர் மடிந்தனர். அமெரிக்காவின் குவாக்கர்ஸ் நிறுவனம் ஐ.நா.உதவியுடன் அகதிகளுக்கு உதவி வழங்கியது. இழந்த பலஸ்தீனில் மிஞ்சிய ஒரு பகுதியாக காஸா இருந்தது. முன்னைய பிரித்தானிய பாதுகாப்பு (மன்டேற்) பகுதிகளில் இருந்து 25% மான பலஸ்தீனர்கள் காஸாவிற்குள் புகுந்தனர். இதனால் 80,000 மக்களைக் கொண்ட காஸாவில் 200, 000 அகதிகள் புகுந்து கொண்டனர். (இன்னும் கூட காஸாவில் சொந்த மக்கள்- அகதிகள் விகிதாசாரம் முன்னைய மாதிரியே உள்ளது. 1.8 மில்லியன் மக்கள் வாழும் காஸாவில் 1.2 மில்லியன்கள் அகதிகளாக உள்ளனர்). ஆனால் சினாய்ப் பகுதிக்குள் புகுந்த அகதிகள் எதிப்தின் தலைநகர் கைரோவிற்கும் நகர்ந்தனர். இதே போல் பெய்ரூட், டமாஸ்கஸ், அம்மான் ஆகிய அயல்நாட்டுத் தலைநகர்களிலும் அகதிகள் குவிந்தனர்.

காஸாவை நிர்வகித்த எகிப்து அதனைத் தன்னுடன் இணைத்துக் கொள்ளவில்லை. ஆனால் ஜோர்தான் மேற்குக் கரைப்பகுதியைத் தன்னோடு இணைத்துக்கொண்டது. 1949 இல் டேவிட் பென் குரியன் இஸ்ரேலுடன் காஸாவை இணைக்கப் போவதாகவும் அங்குள்ள பலஸ்தீன அகதிகளை இஸ்ரேலிற்குள் மீள்குடியேற்றப் போவதாகவும் கூறினார். அவரது இந்த யோசனையை ஐ.நா.சபையும், அராபிய நாடுகளும் ஏற்றுக்கொள்ளவில்லை. இஸ்ரேலின் விஸ்தரிப்பை அவை எதிர்த்தன. எகிப்தின் கீழ் இருந்த காஸா பலஸ்தீன தேசியவாதத்தின் விளைநிலமாக மாறியதில் ஆச்சரியமில்லை. இத்தேசியவாதம் கமால் அப்துல் நாஸரினால் பயன்படுத்தப்பட்டது. 1955 இல் எகிப்தின் ஆட்சிக்கு எதிராக நடந்த கலவரங்களுக்கு இத்தேசியவாதம் உதவியது. எகிப்திய அரசின் புலனாய்வுப் பிரிவும் 'பெடயின்' (FEDAYEEN) எனப்படும் போராளிக் குழுக்களை ஆரம்பத்தில் பயிற்சி கொடுத்து உருவாக்கியது. காஸாவின் இப்போராளிக் குழுக்கள் இஸ்ரேல் மீது தாக்குதல்களை நடத்த உபயோகிக்கப்பட்டன.

இஸ்ரேல் என்ற புதிய அரசு காஸாவைத் தலையிடியைக் கொடுக்கும் இடமாக கருதத் தொடங்கியது. நாஸரின் எகிப்தின் மீது 1956 ஒக்டோபரில் பிரித்தானிய, பிரெஞ்சு இராணுவ ஆதரவுடன் தாக்குதல் தொடங்கிய போது இஸ்ரேல் காஸாவைக் கைப்பற்ற வேண்டும் என்று எண்ணியது. 1956 இல் காஸாவைக் கைப்பற்றிய இஸ்ரேல் அதனை நான்கு மாதங்கள் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. அப்போது 300,000 மக்களைக் கொண்டிருந்த காஸாவில் 1000 பேர் வரை உயிரிழந்தனர். அமெரிக்காவின் அழுத்தம் காரணமாக இஸ்ரேலியப் பிரதமர் பென்குரியன் காஸாவை எகிப்திற்கு விட்டுக் கொடுத்தார். நாஸர் காஸாவில் அமைதியைப் பேணுவார் என்று பென்குரியன் எதிர்பார்த்தார். அடுத்த பத்து வருடங்கள் காஸாவில் பெரிய பிரச்சினைகள் இல்லாமல் கழிந்தன. 'பெடயின்' தீவிரவாதிகள் தலைமறைவானார்கள். 1964 இல் பலஸ்தீன விடுதலை இயக்கம் (பி.எல்.ஓ) ஆரம்பிக்கப்பட்டது. அவ்வியக்கத்தின் முக்கிய தலைவர்கள் பலர் காஸாவில் இருந்து தோன்றியவர்களாய் இருந்தனர்.



1967 ஜூன் ஆறுநாள் யுத்தத்தின் போது காஸாப்பகுதி சில மணித்தியால நேரத்திற்குள் இஸ்ரேலின் பிடிக்குள் வந்தது, எகிப்திய இராணுவத்தில் சரணடைந்த போர் வீரர்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர். இப்புதிய ஆக்கிரமிப்புக்கு எதிராக பலஸ்தீன கெரில்லாக்கள் நான்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகள் தொடர்ந்து போராடினர். இஸ்ரேலிய இராணுவம் அப்போது ஒரு தந்திரத்தைக் கையாண்டது. காஸாவிற்குள் இஸ்லாமிய வலைப் பின்னல் ஒன்று உள்நுழைய அது வழிசெய்தது. காலப்போக்கில் சேக் அகமது யாசின் தலைமையில் 'ஹமாஸ்' இயக்கம் தோன்றி பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்குப் போட்டி இயக்கம் ஆகியது.

1987 டிசம்பரில் இன்டிபதா (IDTIFADA) எழுச்சி தோன்றியது. இருபது வருடகால ஆக்கிரமிப்பின் கீழ் உருவான புதிய பரம்பரையின் அடக்கப்பட்ட உணர்வுகள் 'இன்டிபதா' கிளர்ச்சியாக வடிவம் பெற்றன. காஸா துண்டு நிலம் இந்த கிளர்ச்சியின் தொட்டில் ஆகும். இக்கிளர்ச்சி பின்னர் மேற்குக்கரைக்கும் பரவியது. ஜோர்தான் மன்னர் மேற்குக் கரையின் மீது தனக்குள்ள உரிமையைக் கைவிடும் நிர்ப்பந்தம் இதனால் ஏற்பட்டது. 1990களின் முற்பகுதியில் பலஸ்தீன விடுதலை இயக்கம் 'இரு அரசுகள் கொள்கையை' ஏற்றுக் கொண்டது கிழக்கு ஜெருசலேம் மேற்குக் கரை காஸா என்ற மூன்று பகுதிகளையும் உட்படுத்தியதாய் தனியான சுதந்திர பலஸ்தீன தேசமும், இஸ்ரேலும் என்ற இக்கொள்கை ஒஸ்லோ பேச்சுவார்த்தையை நோக்கிய திருப்பம் ஆக அமைந்தது. இச்சமாதான உடன்பாட்டை ஹமாஸ் மூர்க்கமாக எதிர்த்தது. ஹமாஸ் தலைவர் ஷேக் யாசின் இஸ்ரேலியர்களால் சிறையில் அடைக்கப்பட்டார். ஆயினும் அவரது ஆதரவாளர்கள் ஒரு இராணுவப் படையணியை குவாசாம் அணி என்ற பெயரில் அமைத்தனர். 1994 இல் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத் காஸாவில் புதியதாக அமைக்கப்பட்ட பலஸ்தீனிய அதிகார சபையின் நிர்வாகத்திற்கு தலைமை ஏற்றார். ஹமாஸ் இயக்கத்திற்கு இது பேரடியாக இருந்தது. ஹமாஸ் தனது போராளிகளில் ஒரு பகுதியினரை மேற்குக் கரைக்கு நகர்த்தியது. அரபாத்துடன் ஒஸ்லோ பேச்சுவார்த்தையில் பங்குபற்றிய இஸ்ரேலிய பிரதமர் யிட்சாக் ராபின் 1995 இல் படுகொலை செய்யப்பட்டார். யூத இனத்தவரான தீவிரவாதி ஒருவன் இப்படுகொலையைச் செய்தான். பெஞ்சமின் நெதான்யாகு இஸ்ரேலியப் பிரதமரானார். ஹமாஸ் இயக்கத்தை ஒழிப்பதில் தீவிரம் காட்டிய நெதான்யாகு மேற்குக் கரையில் தஞ்சம் புகுந்திருந்த 'ஹமாஸ்' தலைவர் காலித் மெஷால் என்பவரை நஞ்சூட்டி கொல்வதற்காக 1997இல் கையாட்களை அனுப்பினார். ஜோர்தானிய உளவுப் பிரிவு இந்தச் சதியை முறியடித்தது. மெஷால் காப்பாற்றப் பட்டார். இதனைவிட இஸ்ரேலியச் சிறையில் இருந்த யாசினை விடுவிக்கும் நிர்ப்பந்தம் நெதாயாகுவிற்கு ஏற்பட்டது. யாசின் காஸாவில் விமானம் மூலம் வந்திறங்கினார். அரபாத் எடுத்த இடத்தை யாசின் பெற்றுக் கொண்டார். பலஸ்தீனியர்கள் மத்தியில் ஹமாஸ் தலைவர் யாசினின் மதிப்பு ஓங்கியது. (2004 இல் யாசின் படுகொலை செய்யப்பட்டார்). கட்டாரில் தங்கியிருந்தவாறு ஹமாஸ் இயக்கத்தை மெஷால் இன்றுவரை தலைமைதாங்கி நடத்தி வருகிறார். பலஸ்தீனிய அதிகாரசபை பலமிழந்து போனமையால் 2000 ஆம் ஆண்டில் இரண்டாவது இன்டிபதா கிளர்ச்சி எழுந்தது. இதன்போது தற்கொலைத் தாக்குதல்களும் பதிலடியான குண்டு வீச்சுகளும் இடையீடின்றித் தொடர்ந்தன.



தெற்கு காஸாவில் கான் யூனிஸ் பகுதியில் ஐக்கிய நாடுகளினால் நிருவகிக்கப்படும் பாடசாலையில் நிவாரண உதவி பெறுவதற்கு வரிசையில் தாயாருடன் வரிசையில் காத்திருக்கும் பாலஸ்தீன சிறுவன்.

அரபாத்தின் தேசிய இயக்கத்தை வேரறுக்கும் வகையிலும் பாலஸ்தீன அதிகார சபையைப் பலமிழக்கச் செய்யும் வகையிலும் ஏரியல் சறோன் பிரசாரம் செய்தார். இதன் பயனாக ஹமாஸ் இயக்கம் பலம்பெற்றது. 2005 இல் மொஹமட் அப்பாஸ் அரபாத்தின் இடத்தை எடுத்துக்கொண்டார். அப்பாஸ் பதவியேற்று இரண்டு ஆண்டுகளில் ஹமாஸ் பலஸ்தீன அதிகாரசபையைக் காஸாவை விட்டு வெளியேற்றியது. 2008இன் பின் பகுதியில் இஸ்ரேலியப் படைகள் காஸாவை ஆக்கிரமித்தன. மீண்டும் 2012 இல் குண்டு வீச்சுகள் இடம் பெற்றன. இப்போது நடைபெறும் யுத்தம், 2008, 2012 ஆகிய ஆண்டுகளின் முந்திய இரு யுத்தங்களைவிட மோசமானது.

இந்த நச்சுவட்டத்தை உடைப்பதற்கு ஒரு வழி உண்டு. இஸ்ரேலியர்கள் காஸாவை யுத்த சூனியப் பிரதேசமாக்க விரும்புகிறார்கள். பலஸ்தீனியர்கள் காஸா மீதான முற்றுகையை முடிவுக்குக் கொண்டுவர விரும்புகின்றனர். இஸ்ரேலியர் பார்வையில் யுத்த சூன்யப் பிரதேசமாக்குவதற்கு முன்தேவை பொருளாதாரத் தடையை நீக்குவதாகும். முற்றுகையும் பொருளாதாரத்தடையும் காரணமாக பொருட்களை கள்ளக்கடத்தல் செய்யும் தேவையுள்ளது. இதற்காகச் சுரங்கப் பாதைகளை

*(21ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் கூட்டணிக்கு வழிவிட்ட வாழ்க்கை கூட்டணி?



## வைகோ- ஸ்டாலின் திடீர் சந்திப்பின் பின்னணி

திருமண வீடுகளும் பொது நிகழ்ச்சிகளும் பல நேரங்களில் தேர்தல் கூட்டணிக்கான அச்சாரமாக அமைந்துவிடுவதுண்டு. அந்த வகையில் தி.மு.க. பொருளாளர் மு.க். ஸ்டாலினும், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவும் சந்தித்துக் கொண்டது அரசியல் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அச்சந்திப்பிற்கு வழி அமைத்துக் கொடுத்தது பாட்டாளி மக்கள் கட்சித்தலைவர் டாக்டர் ராமதாஸின் மகன் அன்புமணி ராமதாஸ் மகளின் திருமண நிகழ்ச்சி.

அக்டோபர் 29ஆம் திகதி மாலை சென்னை அருகில் உள்ள மாமல்லபுரத்தில் டாக்டர் அன்புமணி ராமதாஸ்- சவுமியா அன்புமணியின் புதல்வி அ.சம்யுக்தா- பாப்ரித்தீவன் மண விழா வரவேற்புதான் ஒரு புறம் அவர்களின் வாழ்க்கைக் கூட்டணிக்கும் இன்னொருபுறம் தி.மு.க மற்றும் ம.தி.மு.க.விற்கு இடையிலான எதிர்காலத் தேர்தல் கூட்டணிக்கும் வெள்ளோட்டம் அமைத்துக் கொடுத்திருக்கிறது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் முன்பு புதிய தலைமுறை தனியார் காட்சிக்கு பிரத்தியேக நேர்காணல் ஒன்றைக் கொடுத்தார் மு.க. ஸ்டாலின். அப்பேட்டியில் அவர், வைகோ, டாக்டர் ராமதாஸ் உள்ளிட்டோரை புகழ்ந்தார். டாக்டர் ராமதாஸை புகழ்ந்து பேசியதில் பெரிய சூட்சுமம் இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னை மெயில்



முத்தையா காசிநாதன்

என்றாலும், ஸ்டாலின் வைகோவைப் பாராட்டியதில் ஆயிரத்தெட்டு அரசியல் சூட்சுமம் சூழ்ந்து கிடக்கிறது என்றே அரசியல் பார்வையாளர்கள் கருதினார்கள். ஏனென்றால் ஸ்டாலினுக்கும், வைகோவிற்கும் எப்போதுமே ஏழாம் பொருத்தம்.

ஸ்டாலினின் இப்பேட்டி வெளிவந்த நேரத்தில் வைகோ கோவை அருகில் உள்ள குன்னூரில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதான தடை குறித்து விசாரித்துக் கொண்டிருக்கும் தீர்ப்பாயத்தின் முன்பு



வைகோ ஆஜராகி வாதாடிக் கொண்டிருந்தார். இப்பேட்டி குறித்து கேள்விப்பட்ட வைகோ, நல்லவிதமாகத் தானே கூறியிருக்கிறார். மகிழ்ச்சிக்குரியதுதான் என்று தன் சக கட்சித் தலைவர்களிடம் சொன்னார். ஸ்டாலினின் இப்பாராட்டுக்கு வித்திட்டது இதற்கு முன்பு செப்டெம்பர் 15ஆம் திகதியன்று சென்னை அருகே உள்ள பூந்தமல்லியில் ம.தி.மு.க. நடத்திய அண்ணா பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம். அக்கூட்டத்தில் அ.தி.மு.க. அரசை சகட்டு மேனிக்கு விமர்சித்த வைகோ, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சிறப்பாக இருந்தது என்பதைச் சுட்டிக்காட்டினார். வைகோவின் இந்த அணுகுமுறை தி.மு.க. தலைவர் கருணாநிதியின் மனதை குளிரவைத்தது. அது பற்றி அவர் கருத்து தெரிவிக்கையில், உண்மை வெளியே வந்திருக்கிறது என்ற தொனியில் சொன்னார். வைகோ முன்னெடுத்து வைத்ததைப் பற்றிக்கொண்ட ஸ்டாலின் இப்போது வைகோவை பதிலுக்கு தன் டி.வி. பேட்டியில் பாராட்டினார். அதைத் தொடர்ந்துதான் இந்தத் திருமண வீட்டில் சந்திப்பு அரங்கேறியது.


இச்சந்திப்பு அரசியல் வட்டாரத்தில் பெரும் எதிர்பார்ப்பை உருவாக்கியதற்கு சில அர்த்தங்கள் இருக்கிறது. 1993இல் வைகோ ம.தி.மு.க.வை தோற்றுவித்தார். தி.மு.க.விலிருந்து விலக்கப்பட்ட அவர் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தைத் தொடக்கியதிலிருந்து வைகோ ஸ்டாலின் எதிர்ப்பில் முனைப்பாக இருந்தார். தி.மு.க.வின் அடுத்த தலைவராக ஸ்டாலினை உருவாக்குவதற்காகவே தன்னை விலக்கி வைத்தார் தி.மு.க. தலைவர் கருணாநிதி என்று ஆணித்தரமாக எண்ணினார் வைகோ. அந்தப் பயணத்தில் அவர் 1996இல் தனியாகத் தேர்தலைச் சந்திக்க முடிவு செய்தார். வைகோ முதலமைச்சர் வேட்பா ளர் என்பதை ஏற்றுக்கொள்ள முடி யாது என்று டாக்டர் ராமதாஸ் சொல்லி விட்டதால், அப்போது வைகோ தலைமையில் பலமான அணி அமையவில்லை.

இதன் விளைவாக சங்கரையா தலைமையிலான மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், வைகோவும் இணைந்து தேர்தலைச் சந்தித்தனர். இவர்களுக்கு எதிர்பாராத ஆபத்து மூப்பனார் புதிதாகத் துவங்கிய தமிழ் மாநில காங்கிரஸால் ஏற்பட்டது. மூப்பனார் துவங்கிய புதிய கட்சியும், தி.மு.க.வும் கூட்டணி வைத்து 1996 சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றது. அதனால் வைகோவின் ம.தி.மு.க. 177 சட்டமன்றத் தொகுதிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளில் போட்டியிட்டு 5.78 சதவீத வாக்குகளைப் பெற்றதே தவிர, ஒரு எம்.எல்.ஏ. கூட வெற்றி பெற வில்லை. இந்தத் தோல்வி ம.தி.மு.க. விற்கு இந்தியத் தேர்தல் ஆணையம் அளித்துள்ள அரசியல் கட்சி அங்கீகாரத்தை ரத்துச்செய்து விடுமோ என்று அஞ்சினார். அதனால்தான் எந்தக் கட்சியின் ஊழலை எதிர்த்து நடைபயணம் சென்றாரோ, அதே அ.தி.மு.க.வுடன் 1998 நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டணி வைத்தார். இக்கூட்டணி வைகோவின் அரசியல் பிழைக்கு பிள்ளையார் சுழி போட்ட விடயம் இதுதான்!

ஆனால், இக்கூட்டணி தேர்தல் வெற்றியைக் கொடுத்தது. ஐந்து நாடாளுமன்றத் தொகுதிகளில் போட்டியிட்டு மூன்று எம்.பி.க்களைப் பெற்றார். நாடாளுமன்றத்திற்குச் சென்ற ம.தி.மு.க. எம்.பி.க்களில் வைகோ முதன்மையானவர். பிரதமர் வாஜ்பூர் பாய்க்கும் வைகோவிற்கும் இடையிலான உறவில் புதிய சகாப்தத்தை உருவாக்கிய காலகட்டம் இது. தேசிய அரசியலில் தி.மு.க.விலிருந்து விலக்கப்பட்ட பிறகு மின்னினார் வைகோ என்றால் அது 1998ஆம் வருட காலகட்டம்தான். அடுத்து வந்த 1999 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க- பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்தார். நான்கு எம்.பி.க்களைப்பெற்றார். நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வுடன் கூட்டணி வைக்கத் தயங்காத வைகோ சட்டமன்றத் தேர்தலில் அக்கட்சியுடன்



கூட்டணி வைக்கத் தயங்கினார். அதனால் 2001இல் அவர் மீண்டும் தனித்துப் போட்டி என்ற நிலைக்கு வந்தார். ஆனால், அவர் தேசிய ஜனநாயகக் கூட்டணியிலேயே டில்லி அளவில் நீடித்தார். தி.மு.க.வோ தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள பா.ஜ.க. வுடன் சட்டமன்றத் தேர்தலைச் சந்தித்தது. இத்தேர்தலில் வைகோ வித்தியாசமான போக்கை கடைப்பிடித்தார். பா.ஜ.க. போட்டியிட்ட 23 சட்டமன்றத் தொகுதிகளில் வேட்பாளரை நிறுத்தாமல் அக்கட்சிக்கு விட்டுக் கொடுத்து விட்டு, மீதியுள்ள 211 சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிட்டது ம.தி.மு.க. அதில் 4.65 வாக்கு சதவீதத்தைப் பெற்றாலும், ஒரு எம்.எல்.ஏ.வைக் கூடப் பெறவில்லை. இரு சட்டமன்றத் தேர்தல்களில் ம.தி.மு.க. தொடர்ந்து ஜெயிக்கவில்லை.

ஸ்டாலின் எதிர்ப்பு என்பதை மனதில் வைத்தே சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.வுடன் கூட்டணி வைக்காமல் விலகி விலகிச் சென்றார் வைகோ. ஆனால், பொடாவில் வைகோ கைது தி.மு.க.வையும், ம.தி.மு.க.வையும் நெருங்கிவர வைத்தது. வேலூர் சிறைச்சாலைக்கே சென்று வைகோவை சந்தித்தார் தி.மு.க. தலைவர் கருணாநிதி. வைகோவின் விடுதலைக்காகப் போராடினார். எம்.பி.க்களை வைத்து கையெழுத்து இயக்கம் நடத்தினார். அதில் முதல் கையெழுத்தாக கலைஞர் கருணாநிதியே கையெழுத்திட்டார். ஆனால், சிறைக்குள் இருந்த வைகோவுடன் வெளியில் இருந்த கலைஞர் கருணாநிதி போட்ட தொகுதிப் பங்கீடு 2004 நாடாளுமன்றத் தேர்தலில் கசப்புணர்

## ஜெயலலிதாவின் முதல் நிகழ்ச்சி

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பெங்களூர் சொத்துக் குவிப்பு வழக்கில் சிறைத்தண்டனை பெற்று ஜாமினில் வெளிவந்த பிறகு இப்போதுதான் அவரது படம் வெளிவந்திருக்கிறது. போயஸ் கார்டனில் வைக்கப்பட்டிருக்கும் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் படத்திற்கு அவரது ஜெயந்தியை முன்னிட்டு மலர் தூவி மரியாதை செலுத்தும் படம் வெளிவந்திருக்கிறது. சிறையிலிருந்து வெளியே வந்த பிறகு அக்டோபர் 29ஆம் திகதி முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட அனைத்து அமைச்சர்களையும் அழைத்து வீட்டில் ஆலோசனை நடத்தினார் ஜெ. இப்போது பசும்பொன் முத்துராமலிங்க தேவர் படத்திற்கு மலர் தூவியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுடன் கூட்டணியில் இருக்க வேண்டிய சூழலை வைகோவிற்கு உருவாக்கியது. தொகுதிப் பங்கீட்டில் ஏற்பட்ட குழப்பத்தால் தானே போட்டியிடாமல் தன் கட்சியிலிருக்கும் மற்றவர்களை எம்.பி. ஆக்கினார். வைகோ தனது அரசியல் பயணத்தில் 2004 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடாதது அவர் செய்த இரண்டாவது அரசியல் பிழை. அதிலிருந்து இன்னும் மீளமுடியாமல் தவிக்கிறார் என்பதுதான் உண்மை.

இந்தக் கோபத்தில் 2006 சட்டமன்றத் தேர்தலை கருணாநிதி எப்படி முக்கியம் என்று கருதினாரோ அதே போல் வைகோவும் முக்கியம் என்று நினைத்தார். கலைஞர் கருணாநிதிக்கு அந்தத் தேர்தலில் கிடைக்கும் வெற்றி அடுத்த முதல்வராக ஸ்டாலினை அமர்த்த கிடைக்கும் வாய்ப்பாக இருக்கும் என்று கருதினார். இந்த நேரத்தில் தி.மு.க. கூட்டணியில் இருப்பது ஸ்டாலினை முதல்வராக்க நாமே உதவியது போலாகிவிடும் என்று வைகோ கருதினார். இந்த எண்ணவோட்டங்களில் ஏற்பட்ட மோதல் பொடாவில் கைது செய்ததைக்கூட மறந்து அ.தி.மு.க.வுடன் 2006 சட்டமன்றத் தேர்தலில் 35 தொகுதிகளை வாங்கிக்கொண்டு கூட்டணி வைத்தார். இது வைகோ தன் அரசியல் பயணத்தில் செய்த மூன்றாவது பிழை.

இந்த மூன்று பிழைகளினால் ஏற்பட்ட சோதனையைத்தான் வைகோ இப்போது சந்தித்துக் கொண்டிருக்கிறார். 2009 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட இடங்களில் ஒரேயொரு இடத்தில் மட்டுமே வெற்றி பெற்றதற்கும், 2011 சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடவே முடியாமல் போனதற்கும், 2014 நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணியில் போட்டியிட்டு ஓரிடத்தில் கூட-ஏன் வைகோவே கூட ஜெயிக்க முடியாமல் போனதற்கும் 1996இலிருந்து 2004க்குள் வைகோ செய்த அந்த மூன்று பிழைகள்தான் காரணம். பா.ஜ.க. கூட்டணியில் சேர்ந்தாலும் காலப்போக்கில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் காங்கிரஸை விட பா.ஜ.க. மோசம் என்பதை வைகோ புரிந்துகொண்டார். அப்புரிதலின் விளைவாக அமைதி காத்தார். அந்த அமைதிதான் செப்டெம்பர் 15 அன்று அண்ணா பிறந்த நாளில் புயலாகப் புறப்பட்டது. அந்தப் புயல் இப்போது ஸ்டாலின் சந்திப்பு என்ற ரீதியில் கரை கடந்திருக்கிறது.

வைகோவை தன் எதிரியாகவே பாவித்து தி.மு.க.விற்குள் அரசியல் செய்து வந்தவர் ஸ்டாலின். வைகோவிற்கு கலைஞர் கருணாநிதி முக்கியத்துவம் கொடுத்த காலகட்டங்களில் அது பற்றி அடிக்கடி கருத்து வேறுபாடுகளை உருவாக்கியவர் ஸ்டாலின் என்றால் மிகையாகாது. அப்படிப்பட்ட ஸ்டாலினுக்குப் போட்டியாகத்தான் 2014 நாடாளுமன்றத் தேர்தலின் போது கூட மதுரைக்குச் சென்று கட்சியிலிருந்து விலக்கப்பட்ட மு.க. அழகிரியைச் சந்தித்தார் வைகோ. இதுவெல்லாம் ஸ்டாலினுக்கு பிடிக்காததுதான். ஆனால் தி.மு.க.விற்குள் ஸ்டாலினின் கை இப்போது கொஞ்சம் தாழ்ந்து இருக்கிறது. தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதியின் கை ஓங்கியிருக்கிறது. 2011 சட்டமன்றத் தேர்தல் கூட்டணி, அதில் வேட்பாளர் தேர்வு, 2014 நாடாளுமன்றத் தேர்தல் கூட்டணி, அத்தேர்தலில் வேட்பாளர் தேர்வு என்று அனைத்துப் பொறுப்புகளையுமே ஸ்டாலினிடம் கொடுத்துவிட்டு அமைதியாக இருந்

## ஆவின் பால் விலை உயர்வும், ஆர்ப்பாட்டங்களும்!

தமிழகத்தில் ஆவின் பால் விலை 10 ரூபாய் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதை அனைத்துக் கட்சிகளும் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளன. தி.மு.க. நவம்பர் மூன்றாம் திகதி மாநிலம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்துகிறது. ம.தி.மு.க. நவம்பர் நான்காம் திகதி ஆர்ப்பாட்டத்தை நடத்துகிறது. இதற்கிடையில் முன் கூட்டியே ஆர்ப்பாட்டத்தை நடத்தி விட்டு தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், அக்டோபர் 30ஆம் திகதி காலை குடும்பத்துடன் மலேசியா புறப்பட்டுச் சென்றார். புறப்படும் முன்பு ஊழல் செய்பவர்களை கண்டுபிடிக்க ரகசியமாக ஆட்களை நியமித்துள்ளேன் என்று ஒரு குண்டை தூக்கிப் போட்டு விட்டுக் கிளம்பியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார் கலைஞர் கருணாநிதி. அதே மாதிரி கட்சி நிர்வாகிகளுக்குள் வரும் கோஷ்டி பிரச்சினைகளைத் தீர்க்கும் பொறுப்பைக் கூட ஸ்டாலினிடம் கொடுத்துவிட்டு அமர்ந்திருந்தார். ஆனால் அனைத்திலுமே ஸ்டாலினுக்கு கொடுக்கப்பட்ட சுதந்திரம் தி.மு.க.விற்கு வெற்றி வாய்ப்பை பெற்றுத்தரவில்லை.

இந்நிலையில் சமீபகாலமாக கட்சித்தேர்தல் உட்பட மற்ற அரசியல் கட்சிகளுடனான தொடர்பு விடயங்கள் அனைத்தையுமே கலைஞர் கருணாநிதியே தன் கையில் எடுத்துக் கொண்டார். அதன் ஒரு அங்கமாகத் தான் கட்சித்தேர்தலில் குழப்பம் செய்தார் என்ற புகாருக்கு உள்ளான அமைப்புச் செயலாளர்களில் ஒருவரான பெ.வீ. கல்யாணசுந்தரத்தை கட்சியை விட்டு விலக்கி வைத்தார்கள். இவர் ஸ்டாலினின் வலது கரம் என்பது குறிப்பிடத்தக்கது. இது போன்ற சூழ்நிலையில் ஸ்டாலின் தன் தலைமைப் பண்பை நிரூபிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. அதன் ஒரு பகுதியாகவே தனியார் டி.வி.க்கு அளித்த பேட்டியில் வைகோ, டாக்டர் ராமதாஸ், விஜயகாந்த் ஆகியோரைப் பாராட்டி, ஒரு பரந்து விரிந்த கூட்டணியை தி.மு.க. அமைக்கும் என்ற தோற்றத்தை ஏற்படுத்தினார். அதற்கு முதலில் கை கொடுத்துள்ளார் வைகோ. இந்தச் சந்திப்பு எதிர்காலக் கூட்டணிக்கு வித்திடுமா என்பது தேர்தல் அறிவிப்பு, மற்ற கட்சிகள் கூட்டணியில் சேருவது, தொகுதிப் பகிர்வு போன்ற பல அம்சங்களின் அடிப்படையில்தான் இருக்கும். ஆனால் தோல்வியடைந்து கிடக்கின்ற தி.மு.க.விற்கு ம.தி.மு.க. தேவை. தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து விலகவும், அ.தி.மு.க. அணியில் மீண்டும் சேரவும் தயங்கியும் கொண்டிருக்கும்' வைகோவிற்கு தி.மு.க. தேவை. அது தான் இந்தச் சந்திப்பின் ஒட்டுமொத்த வியூகம்!

இந்தச் சந்திப்பு பற்றி நிருபர்கள் ஸ்டாலினிடம் கூட்டணி அமையுமா என்று கருத்துக்கேட்ட போது, உங்கள் விருப்பம் அதுவென்றால் என் விருப்பமும் அதுவே என்று கூறியிருக்கிறார். அதேபோல் வைகோவும், தேர்தலுக்கு இன்னும் 18 மாதங்கள் இருக்கிறது என்ற ரீதியில் கருத்துச் சொல்லி, திருமண வரவேற்பில் நான் சாப்பிட்டுக் கொண்டிருந்த இடத்திற்கே ஸ்டாலின் வந்து வரவேற்றார். அதனால் நான் அவரை வரவேற்று வழியனுப்பும் இடம் வரை சென்று அனுப்பி வைத்தேன். இருவரும் பரஸ்பரம் உடல்நலம் விசாரித்துக் கொண்டோம் என்று கூறியிருக்கிறார்.

இத்துடன் நின்று போகாமல் இந்தச் சந்திப்பு மறுநாளும் தொடர்ந்தது. பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் 107ஆவது பிறந்த நாள் கொண்டாட்டம் அக்டோபர் 30ஆம் திகதி ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் இருக்கும் அவர் நினைவிடத்தில் நடைபெற்றது. தமிழக முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் உள்ளிட்ட அமைச்சர்கள் தமிழக அரசின் சார்பில் அங்கே மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தியுள்ளார்கள். அங்கு தி.மு.க. சார்பில் மு.க. ஸ்டாலின் கலந்து கொண்டார். ம.தி.மு.க. சார்பில் வைகோ கலந்து கொண்டார். அந்நிகழ்ச்சிக்கு சென்னையிலிருந்து காலையில் ஒரே விமானத்தில் பயணித்து மதுரையில் வந்து இறங்கி, அந்த நிகழ்ச்சியில் பங்கேற்க கிளம்பினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மதுரை விமான நிலையத்தில் இறங்கியதும், கலைஞரின் அன்புக்கு நன்றி என்று வைகோவும், ம.தி.மு.க., பா.ம.க. கூட்டணி பற்றி கட்சியின் அமைப்பு முடிவு செய்யும் என்று ஸ்டாலினும் கருத்துக் கூறியிருக்கிறார். அத்துடன் தங்கள் சந்திப்பு அரசியல் நாகரிகத்தின் வெளிப்பாடு என்பதையும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

ம.தி.மு.க.வுடனான அணுகுமுறை இப்படியிருக்கையில், அக்டோபர் 30 ஆம் திகதி காலையில் நடைபெற்ற டாக்டர் ராமதாஸின் பேத்தி திருமணத்திற்கு கலைஞர் கருணாநிதி சென்றார். அதற்கு முன்பு, நீண்ட கால நண்பர்கள் என்ற அடிப்படையில் வைகோவும், ஸ்டாலினும் சந்தித்துக் கொண்டார்கள். ம.தி.மு.க. வுடன் கூட்டணி அமைந்தால் மகிழ்ச்சியே என்று வைகோ-ஸ்டாலின் சந்திப்பிற்கு ஒரு சிறப்பு அங்கீகாரத்தைக் கொடுத்தார் கருணாநிதி. அதே போல் டாக்டர் ராமதாஸ் இல்லத் திருமணத்தில் பங்கேற்ற போது பா.ம.க. வுடன் கூட்டணி அமைப்பதற்கும் விருப்பம் தெரிவித்த அவர் அது பற்றி தி.மு.க. பொதுக்குழு கூடி முடிவு எடுக்கும் என்றார். என்னை இங்கே முன்னாள் முதலமைச்சர் என்றார்கள். அதை விட என்னை தாத்தா என்று அழைத்தால் மகிழ்வேன் என்றும் நகைச்சுவையுடன் கூறினார். திருமணத்தில் பங்கேற்ற கருணாநிதிக்கு நன்றி சொன்ன டாக்டர் ராமதாஸ், 1989இல் இருந்து நாங்கள் இருவரும் நண்பர்கள். அரசியல் நாகரிகம் தெரிந்தவர் கலைஞர் என்று திருமண நிகழ்ச்சியிலேயே பாராட்டினார். வைகோவும், ஸ்டாலினும் சந்தித்துக் கொண்டதற்கு அடுத்த கட்டமாக கருணாநிதியும், ராமதாஸும் திருமண நிகழ்ச்சியில் காட்சியளித்துள்ளார்கள். திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய மூன்று கட்சிகளும் 2016 சட்டமன்றத் தேர்தலில் ஒரே அணியாக நிற்பதற்கான முன்னோட்டமாகவே இந்த நிகழ்வுகள் அமைந்துள்ளன. அந்த வகையில் இந்தச் சந்திப்புகள் கூட்டணிக்கான விதையை விதைத்துள்ளது என்றால் அதை மறுக்க முடியாது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தொடரும் மோடி அலை

## பாரதிய ஜனதா காஷ்மீரிலும் அதன் கைவரிசையைக் காட்டுமா?



பிரதமர் நரேந்திரமோடி கனவு கண்ட வெற்றிகரமான அரசியல் பயணம் உத்வேகத்துடன் தொடர்ந்து கொண்டிருக்கிறது. மகாராஷ்டிரா மாநிலத்திலும் ஹரியானா மாநிலத்திலும் நடைபெற்ற சட்டசபைத் தேர்தல்களில் பாரதிய ஜனதா கண்டிருக்கும் உறுதியான வெற்றிக்குப் பிறகு அக்கட்சிக்குள் மிகவும் முக்கியமானவர்களாக மோடியும் அவரது வலதுகரமான அமித்ஷாவுமே வந்துவிட்டார்கள். எல்.கே.அத்வானி உட்பட மற்றைய தலைவர்கள் எல்லோரையுமே இவர்கள் இருவரும் மாற்றீடு செய்து பின்னுக்குத் தள்ளிவிட்டார்கள். கடந்த மே மாதம் பாரதியஜனதா பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று மோடி பிரதமராகப் பதவியேற்ற பிறகு முதன்முதலில் மகாராஷ்டிராவிலும் ஹரியானாவிலுமே மாநில சட்டசபைகளுக்கான தேர்தல்கள் நடைபெற்றன. இதுகாலவரையில் ஹரியானாவில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கட்சியாக செல்வாக்கான நிலையில் இல்லாமல் இருந்த பாரதிய ஜனதா இத்தடவை அதன் சொந்தத்தில் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றி பெருவெற்றி பெற்றிருக்கிறது. இதற்கு மோடி அலையே காரணமாகும். மகாராஷ்டிராவில் கூடுதலான ஆசனங்களைப் பெற்ற தனியொரு கட்சியாக பாரதிய ஜனதா வந்திருக்கிறது. சட்டசபையில் இறுதிப் பெரும்பான்மைப்பலம் இல்லாத நிலையிலும் கூட, அங்கு அக்கட்சியை ஆட்சியமைத்திருக்கிறது. இவ்விரு மாநிலங்களிலும் முன்

டில்லி டயரி



எம்.பி.வித்தியாதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர் ஒருபோதுமே பாரதிய ஜனதா முதலமைச்சர்கள் பதவி வகித்ததில்லை என்பதால் இப்போது நிகழ்ந்திருப்பது அக்கட்சியைப் பொறுத்தவரை ஒரு சாதனையாக நோக்கப்படுகிறது.


மோடி பாணி அரசியல் மேலும் இருமாநிலங்களில் பாரதிய ஜனதாவை ஆட்சிக்குக்கொண்டு வந்திருக்கிறது. 90 ஆசனங்களைக் கொண்ட ஹரியானா சட்டசபையில் இறுதியாக பாரதிய ஜனதா வெறுமனே 4 ஆசனங்களை மாத்திரமே கொண்டிருந்தது. முன்னதாக 1996 சட்டசபைத் தேர்தலின் போதே அக்கட்சி 11 ஆசனங்களைக் கைப்பற்றக்கூடியதாக இருந்தது. பிறகு 2000 ஆம் ஆண்டில் 6 ஆசனங்களையும் 2005 ஆம் ஆண்டில் இரு ஆசனங்களையும் கைப்பற்றியது. 2005 தேர்தலில் காங்கிரஸ் 67 ஆசனங்களைப் பெற்று ஆட்சியமைத்தது. 2009 ஆம் ஆண்டில் 40 ஆசனங்களுடன் காங்கிரஸ் கட்சி ஆட்சியைத் தக்க வைத்தபோது பாரதிய ஜனதா 4 ஆசனங்களில் மாத்திரம் வெற்றி பெற்றது. ஆனால், இப்போது பாரதிய ஜனதா 47 ஆசனங்களைப் பெற்றிருக்கும் அதேவேளை, காங்கிரஸ் கட்சிக்கு வெறுமனே 15 ஆசனங்களே கிடைத்திருக்கின்றன. ராஷ்டிரிய சுயம் சேவக் சங்க் (ஆர்.எஸ்.எஸ்) இற்கு நெருக்கமானவரான மோகன்லால் கத்தார் ஹரியானாவின் முதலமைச்சராகப் பதவியேற்றிருக்கிறார்.

பிரியங்கா காந்தியின் கணவரான ரொபேர்ட் வதேரா நிலங்களை கைமாற்றுவதற்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் உட்பட முன்னைய காங்கிரஸ் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நடவடிக்கைகளை மறு பரிசீலனை செய்யப்போவதாக கத்தார் ஏற்கனவே அறிவித்துவிட்டார். இந்த நிலங்கள் கைமாற்றம் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்திருந்தது. அரசாங்கத்துக்குச் சொந்தமான நிலங்கள் வதேராவின் பெயருக்கு மாற்றப்பட்டு பிறகு அவை சட்டவிரோதமான முறையில் டி.எல்.எவ். என்ற றியல் எஸ்டேட் நிறுவனத்துக்கு மாற்றஞ்செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த நிலக் கைமாற்ற விவகாரம் தொடர்பாக கேள்வியெழுப்பிய இந்திய நிருவாக சேவை அதிகாரி அடிக்கடி இடமாற்றஞ் செய்யப்பட்டு பழிவாங்கப்பட்டார்.

மகாராஷ்டிரா மாநிலத்தைப் பொறுத்தவரை பாரதிய ஜனதா இத்தடவை பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை வந்தாலும் பரவாயில்லை விளைவுகளை எதிர்நோக்கத் தயார் என்ற துணிச்சலுடன் செயற்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. அதாவது, சிவசேனை கட்சியுடனான பலதசாப்தகால தேர்தல் கூட்டணி உறவைத் துண்டித்துக் கொண்டே அது போட்டியிட்டது. 288 ஆசனங்களைக் கொண்ட சட்டசபையில் 122 ஆசனங்களில் பாரதிய ஜனதா வெற்றிபெற்றது. இது தனியாக ஆட்சியமைப்பதற்கு தேவையான அறுதிப் பெரும்பான்மைப்பலத்துக்கு (144) 20 ஆசனங்கள் குறைவானதாகும். சிவசேனைக்கு 63 ஆசனங்கள் கிடை த்தன. இதற்கு முன்னதாக பாரதிய ஜனதா மகாராஷ்டிரா மாநில சட்டசபையில் கூடுதல் ஆசனங்களைக் கைப்பற்றிய சந்தர்ப்பம் என்றால் அது 1995 தேர்தலேயாகும். அப்போது அதற்கு 65 ஆசனங்கள் கிடைத்தன. கடந்த சட்டசபையில் பாரதிய ஜனதாவுக்கு 46 ஆசனங்கள் மாத்திரமே இருந்தன.

இத்தடவை தேர்தல் பிரசாரங்களின் போது பிரதமர் மோடி பத்து தினங்கள் தொடர்ச்சியாக தினமும் கூட்டங்


தேவேந்திர பட்நாவிஸ்


மோகன்லால் கத்தார்

களில் உரையாற்றினார். பிரதமர் போன்று செயற்படாமல் மாநிலங்கள் மீது கூடுதல் கவனத்தைக் குவித்து ஒரு முதலமைச்சர் போன்று நடந்துகொள்வதாகக் குற்றச்சாட்டும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், மோடியின் சளைக்காத பிரசாரமும் கடும் உழைப்பும் பலன் தந்தது. மகாராஷ்டிரா சட்டசபையில் கூடுதல் ஆசனங்களைப் பெற்ற தனிக்கட்சியாக பாரதிய ஜனதா வந்திருக்கிறது.

சிவசேனை அதன் தலைவர் உதவ் தக்காரேயை முதலமைச்சர் வேட்பாளராக முன்னிறுத்தும் நோக்குடன் செயற்பட்டு தோல்வியைச் சந்தித்தது. அக்கட்சிக்கு 63 ஆசனங்களே கிடைத்தன. மாநிலத்தில் இறுதியாக ஆட்சியில் இருந்த அரசாங்கத்துக்கு தலைமை தாங்கிய காங்கிரஸ் கட்சிக்கு வெறுமனே 42 ஆசனங்கள் மாத்திரமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தன. அதன் பங்காளிக்கட்சியாக இருந்த சரத்பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் கட்சிக்கு 41 ஆசனங்கள் கிடைத்தன.

பாரதிய ஜனதாவும் காங்கிரஸ் கட்சியும் கூட்டாகப் போட்டியிட்டால் காங்கிரஸ்-தேசியவாத காங்கிரஸ் கட்சி கூட்டுக்கு படுதோல்வியே கிட்டும் என்று தேர்தலுக்கு முன்னதாகவே தெளிவாகத் தெரிந்தது. ஆனால், தொகுதி ஒதுக்கீடு சம்பந்தமாக ஏற்பட்ட முரண்பாடு காரணமாக பாரதிய ஜனதா-சிவசேனை கூட்டணியில் பிளவு ஏற்பட்டது. இரு கட்சிகளுமே தனித்தனியாகப் போட்டியிட்டன.

மகாராஷ்டிரா மாநில பாரதிய ஜனதா தலைவரான 44 வயதான தேவேந்திர பட்நாவிஸ் முதலமைச்சராக அக்டோபர் 31 ஆம் திகதி பதவியேற்றிருக்கிறார். சரத்பவார் தனது நண்பரான பாரதிய ஜனதாவின் முன்னாள் தலைவரும் தற்போதைய மத்திய அமைச்சருமான நிதின் கட்காரியை முதலமைச்சராக்குவதற்கான வியூகங்களை வகுத்தார் என்ற போதிலும் அதில் அவரால் வெற்றிகாண முடியவில்லை.

பாரதிய ஜனதா சிவசேனையின் ஆதரவை நாடுமா அல்லது சரத்பவாரின் தேசியவாத காங்கிரஸ் கட்சியின் ஆதரவை நாடுமா என்பதே இப்போதுள்ள கேள்வி. புதிய மாநில அரசாங்கத்தின் பெரும்பான்மைப் பலத்தை சட்டசபையில் நிரூபிப்பதற்கு நடத்தப்படவேண்டியிருக்கும் வாக்கெடுப்பில் பங்கேற்காதிருக்க தேசியவாத காங்கிரஸ் முடிவெடுத்திருக்கிறது. என்ன செய்வதென்று அறியாது சிவசேனை திணறுகிறது. பாரதிய ஜனதாவுடன் முன்னரைப் போன்று நெருக்கமாகச் செயற்படுவதற்கு சிவசேனை முயற்சிக்கின்ற போதிலும் பாரதிய ஜனதா தலைவர்கள் அதில் பெரிதாக அக்கறை காட்டுவதாக இல்லை.

பரந்தமனப்பான்மையும் விட்டுக்கொடுக்கும் பண்புமுடையவர்களான அடல் பிஹாரி வாஜ்பாய் மற்றும் எல்.கே.அத்வானி போன்றவர்கள் அல்ல தாங்கள் என்று சிவசேனைக்கு மோடியும் அமித்ஷாவும் காட்டிக்கொள்கிறார்கள். தொகுதிப் பங்கீடு தொடர்பில் பாரதிய ஜனதாவுடன் நடந்த பேச்சுவார்த்தைக்கு சிவசேனைத் தலைவர் உதவ் தக்காரே தனது 20வயது மகனை அனுப்பி வைத்திருந்தார். அந்த அவமதிப்புக்கு ஒரு பாடம் கற்பிக்க பாரதிய ஜனதா தலைவர்கள் இப்போது விரும்புகிறார்கள். இன்னொரு தக்காரேயான மகாராஷ்டிரா நவநிருமாண் சேனா கட்சியின் தலைவரான ராஜ் தக்காரேக்கு கடும் உறைப்பான பாடம் கிடைத்திருக்கிறது. ஹைதராபாத்தைத் தளமாகக் கொண்ட எம்.ஐ.எம். என்ற முஸ்லிம் கட்சி கூட மகாராஷ்டிராவில் இரு ஆசனங்களைக் கைப்பற்றியிருக்கும் நிலையில், ராஜ் தக்காரேயின் கட்சிக்கு ஒரேயொரு ஆசனமே கிடைத்திருக்கும் பரிதாபம்.

தக்காரேக்கள் இந்தத் தேர்தலில் கிடைத்திருக்கும் படிப்பினைகளுக்குப் பிறகு தங்கள் போக்கை மாற்றிக்கொண்டு மீண்டும் ஒன்றிணைவார்களா? அல்லது உதவ் தக்காரே தனது மகனை அரசியலில் முன்னணிக்குக் கொண்டு வரும் முயற்சிகளையே தொடர்வாரா?

எது எவ்வாறிருந்தாலும், காங்கிரஸ் கட்சியில் மாத்திரம் என்றில்லை, பெரும்பாலான கட்சிகளில் குடும்ப அரசியலே ஆதிக்கம் செலுத்துகின்றது என்பதே உண்மை. முலாயம் சிங் யாதவின் சமாஜ்வாதி கட்சி, லல்லுபிரசாத் யாதவின் ராஷ்டிரிய ஜனதா தளம், பிரகாஷ் சிங் யாதவின் அகாலி தளம், கருணாநிதியின் திராவிட முன்னேற்றக்கழகம், ஜகன்மோகன் ரெட்டியின் வை.எஸ். ஆர். காங்கிரஸ், சரத்பவாரின் தேசியவாத காங்கிரஸ், பாரூக் அப்துல்லாவின் தேசிய காங்கிரஸ் என்று பெரும்பாலான இந்தியக் கட்சிகளில் எல்லாம் குடும்ப அரசியலின் ஆதிக்கமே காணப்படுகிறது.

கட்சிகளில் குடும்பங்களின் ஆதிக்கம் நிலவும் இந்தப்போக்கை மோடியினால் எந்தளவு தூரத்துக்கு மாற்றக் கூடியதாக இருக்கும்?

இம்மாத இறுதியில் மேலும் இரு மாநிலங்களில் சட்டசபைத்தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன. ஜம்மு-காஷ்மீரும் ஜார்க்காண்டுமே அவையாகும். நவம்பர் 25க்கும் டிசம்பர் 20க்கும் இடைப்பட்ட நாட்களில் ஐந்து கட்டங்களாக வாக்களிப்பு நடைபெறும். டிசம்பர் 23 தேர்தல் முடிவுகள் வெளியாகும். மோடி அலையினால் உத்வேகம் பெற்றிருக்கும் பாரதிய ஜனதா காஷ்மீரிலும் அதன் கைவரிசையைக் காட்டுமா?

தடையின்றிய வெற்றிப் பயணத்தை பாரதிய ஜனதா தொடருகின்ற அதேவேளை, காங்கிரஸ் கட்சியோ படுமோசமான நெருக்கடிக்குள் சிக்கியிருக்கிறது. காங்கிரஸின் தலைவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். சோனியா காந்தியினதும் ராகுல் காந்தியினதும் வழிகாட்டுதலில் இயங்கும் மத்திய தலைமைத்துவத்தை பல தலைவர்கள் கடுமையாக விமர்சிக்க ஆரம்பித்திருக்கிறார்கள் போலத் தெரிகிறது. தோல்விக்கான காரணங்கள் குறித்து காந்திகள் சுயவிமர்சனம் செய்துகொள்ள வேண்டும் என்றும் கட்சித் தொண்டர்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கக் கூடியதாக செயல்பாணியை மாற்ற வேண்டும் என்று முன்னாள் மத்திய அமைச்சர் பி.சிதம்பரம் கூட வெளிப்படையாகவே கூறியிருக்கிறார்.

ஹரியானாவிலும் மகாராஷ்டிராவிலும் அடைந்த படுதோல்விக்குப் பிறகு காங்கிரஸ் கட்சி ஜம்மு-காஷ்மீரிலோ அல்லது ஜார்க்காண்டிலோ மேம்பாடான செயற்பாட்டை வெளிக்காட்டக்கூடியதாக இருக்குமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. காந்திகளுக்கு கெட்டகாலம் மேலும் தொடரப் போகின்றது என்றே தெரிகிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுப் பரவல்

# பென் பிரட்லீ

பென் பிரட்லீயை பொறுத்தவரை பத்திரிகைத் துறை வெறுமனே ஊதியத்திற்கான தொழிலே அல்ல. ஜனநாயகத்திற்கும் பொது நன்மைக்குமான கடமை என்றே அதை நினைத்து செயற்பட்டார். அதிகாரத்தில் உள்ளவர்கள் எவ்வளவுதான் பலம் பொருந்தியவர்களாக இருந்தாலும், உண்மையைக் கண்டறிவதற்கான துணிச்சலான செயற்பாடுகள் மூலமாக அவர்களை பதவியிலிருந்து தூக்கியெறிந்து நேர்மையை நிலைநாட்ட முடியும் என்பதற்கு பிரட்லீ ஒப்புயர்வற்ற ஒரு உதாரணமாக திகழ்கிறார்



கடந்தமாதம் 21ஆம் திகதி வாஷிங்டனில் தனது 93ஆவது வயதில் காலமான மகத்தான அமெரிக்கப் பத்திரிகை ஆசிரியர்களில் ஒருவரான பென் பிரட்லீ ஜனாதிபதிகளைப் பதவியில் இருந்து அகற்றுவதில் செய்திப்பத்திரிகைகளுக்கு இருக்கின்ற வல்லமையை வெளிச்சம் போட்டுக் காட்டியதால் உலகில் பெருமதிப்பைப் பெற்றவர். அவர் ஆசிரியராக இருந்த காலகட்டத்தில் தான் வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை வாட்டர் கேட் ஊழல் விவகாரத்தை அம்பலப்படுத்தி அன்றைய அமெரிக்க ஜனாதிபதி றிச்சர்ட் நிக்சன் பதவிவிலக வேண்டிய நிர்ப்பந்தம் உருவானது. பென் பிரட்லீயின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்த ஜனாதிபதி பராக் ஒபாமா, அவரது தனிச்சிறப்புக்குரிய வாழ்வு குறித்து குறிப்பிடுகையில் 'ஒரு உண்மையான பத்திரிகைக்காரன்' என்று வர்ணித்திருந்தார். 'சொல்ல வேண்டிய கதைகளை பென் பிரட்லீ சொன்னார். அந்தக் கதைகள் எமது உலகத்தையும் இன்னொரு உலகத்தையும் நாம் புரிந்துகொள்வதற்கு எமக்கு உதவின. நேர்மையான செயற்பாட்டுக்காகவும் விபரங்களைத் தவறவிடாமல் கவனிக்கின்ற செய்தி அறிவிப்புக்காகவும் அகவுணர்வுகளுக்கு அப்பாற்பட்ட கடமையாற்றலுக்காகவும் அவர் வகுத்த தராதரங்கள் பத்திரிகைத் தொழில்துறையில் பிரவேசிப்பதற்கு பலரை உற்சாகப்படுத்தின' என்று ஒபாமா தனது செய்தியில் கூறியிருந்தார்.

பென் பிரட்லீக்கு மரியாதை செலுத்துவதில் ஊடகத்துறை உலகமும் அரசியல் உலகமும் ஒன்றுபட்டு நின்றதை அமெரிக்கா கடந்தமாதம் கண்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (1921-2014)

வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகையின் ஆசிரியராக பென் பிரட்லீ 26 வருடங்கள் பணியாற்றினார். அந்தக் காலகட்டத்தில் அப்பத்திரிகை 17 புலிட்சர் விருதுகளைப் பெற்றது. அதன் விற்பனை இருமடங்காக அதிகரித்தது. சகாக்களினாலும் போட்டியாளர்களினாலும் பென் பிரட்லீ அமெரிக்க பத்திரிகைத்துறையின் ஒரு விக்கிரகமாகவே நினைவு கூரப்படுகிறார்.

1972 ஜூன் 17 ஆம் திகதி வாஷிங்டனில் வாட்டர் கேட் கட்டிடத் தொகுதியில் அமைந்திருந்த ஜனநாயகக் கட்சி தேசியக் கமிட்டி தலைமை அலுவலகத்திற்குள் புகுந்து இனந்தெரியாதோர் நடத்தியதாகக் கூறப்பட்ட திருட்டுச் சம்பவம் தொடர்பான உண்மையைத் துருவி ஆராய்வதற்கு பென் பிரட்லீயின் வழிநடத்துதலின் கீழ் வாஷிங்டன் போஸ்ட் மேற்கொண்ட நடவடிக்கைகள் வாட்டர் கேட் ஊழல் விவகாரம் என்று உலகம் பின்னர் அறிந்து கொண்ட அரசியல் முறைகேடுகளை அம்பலப்படுத்தி இறுதியில் ஜனாதிபதி நிக்சனை பதவி விலகவைத்தன. பென் பிரட்லீயின் மறைவு குறித்து செய்தி பரவத் தொடங்கிய கணம் முதல் வாட்டர் கேட் ஊழல் விவகாரத்தையே உலகம் நினைவு மீட்டிக் கொண்டது.

வாஷிங்டன் போஸ்டை அமெரிக்காவின் உன்னதமான பத்திரிகைகளில் ஒன்றாக' மாற்றியமைத்த பெருமை பென்பிரட்லீக்கே உரித்தானது. பத்திரிகைத்துறை அவரைப் பொறுத்தவரை வெறுமனே ஊதியத்துக்கான ஒரு தொழிலேயல்ல, ஜனநாயகத்துக்கும் பொது நன்மைக்குமான ஒரு கடமை என்றே அவர் அதை நினைத்துச் செயற்பட்டார் என்று



பிரட்லீயுடன் பொப் வூட்வார்ட்டும் கார்ள் பேர்ன்ஸ்டீனும்



ஜனாதிபதி பராக் ஒபாமா சுதந்திரத்திற்கான விருது பதக்கத்தை பிரட்லீக்கு வெள்ளை மாளிகையில் வைத்து அணிவிக்கும் காட்சி (2013)

அமெரிக்காவின் முன்னணி ஊடகவியலாளர்களும் அரசியல் அவதானிகளும் புகழாஞ்சலி சூட்டினார்கள்.

வாட்டர்கேட் ஊழல் விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்திய வாஷிங்டன் போஸ்டின் செய்தியாளர்களான பொப் வூட்வார்ட்டும் கார்ள் பேர்ன்ஸ்டீனும் வெளியிட்ட இரங்கல் செய்தியில், உண்மையைக் கண்டறிவதில் பென் பிரட்லீக்கு இருந்த தணியாத வேட்கையைப் பெரிதும் மதித்துப் போற்றியிருக்கிறார்கள்.

'பென் உண்மையான நண்பர். பத்திரிகைத்துறையில் மாண்புமிக்க ஒரு தலைவர். ஒரு இராணுவத்திடம் இருக்க வேண்டிய துணிச்சல் அவரிடம் இருந்தது. பத்திரிகைத் தொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஜோன் எப். கென்னடி -ஜக்குலின் தம்பதியருடன் பேன் பிரட்லீ தம்பதியர்

லின் வரலாற்றைப்பற்றி உள்ளுணர்வால் அறியப்பட்ட விளக்கப்பாடு ஒன்று பென்னிடம் இருந்தது. தனது பாதையை தன் சிந்தனைப்படியே வகுத்துக்கொண்டவர் அவர். நாம் அவரை ஆழமாக நேசித்தோம். அவரை ஒருபோதும் மறக்க முடியாது. எமது வாழ்வில் அவரை யாரும் மாற்றீடுசெய்யமுடியாது' என்றும் அவர்கள் இருவரும் தெரிவித்திருக்கிறார்கள். 'சரித்திரத்தின் மீதும் எமது தொழில்துறையின் மீதும் அழிக்கமுடியாத தடத்தை பென்பிரட்லீ ஏற்படுத்திச் சென்றிருக்கிறார்' என்று வாஷிங்டன் போஸ்டின் தற்போதைய நிறைவேற்று ஆசிரியர் மார்ட்டின் பரோன் குறிப்பிட்டார்.

கடந்த வருடம் பென்பிரட்லீ ஜனாதிபதி பராக் ஒபாமாவிடமிருந்து 'சுதந்திரத்துக்கான விருதை' (Medal of Freedom) பெற்றார். அவ்விருதை அவருக்கு வழங்கி உரையாற்றிய ஒபாமா, 'உண்மையைக் கண்டறிவதிலான பென்பிரட்லீயின் ஓயாத முயற்சியும் ஆர்வமும் பத்திரிகைத்துறைக்கான தராதரங்களைத் தொடர்ந்து வகுத்துக் கொண்டேயிருக்கும்' என்று குறிப்பிட்டார்.

ஒரு பத்திரிகை ஆசிரியர் என்ற வகையில் பென் பிரட்லீ பெரும் அவமதிப்பைச் சந்திக்க வேண்டியேற்பட்ட சம்பவம் 1981ஆம் ஆண்டில் இடம்பெற்றது. ஹெரோயின் போதைப்பொருளுக்கு அடிமையான 8 வயது சிறுமியொருத்தி பற்றிய விவரணக் கட்டுரையொன்றுக்காக வாஷிங்டன் போஸ்டுக்கு அந்தக் ஆண்டு புலிட்சர் விருது கிடைத்தது. அந்தக் கட்டுரையை எழுதிய ஜனெட் குக் என்ற கறுப்பின பெண் செய்தியாளர் உண்மையில் போதைப்பொருளுக்கு அடிமையான சிறுமியைப் பற்றியல்ல, கற்பனையில் உருவாக்கிய ஒரு பாத்திரத்தை அடிப்படையாக வைத்தே அதை எழுதியிருந்தார் என்பது பிறகு கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே பத்திரிகை அந்த விருதை திருப்பிக்கொடுக்க வேண்டியேற்பட்டது.

வாஷிங்டன் போஸ்டின் முன்னேற்றங்களின் போதும் பின்னடைவுகளின் போதும் தன்னை அப்பத்திரிகையுடன் பிணைத்தவராகவே பென் பிரட்லீ விளங்கினார். வாட்டர் கேட் ஊழல் விவகாரத்தை அம்பலப்படுத்தி அப்பத்திரிகை வரலாறு படைத்ததையடுத்து அந்த யுகத்தில் மிகவும் மதிக்கப்பட்ட, செல்வாக்கு மிக்க அமெரிக்கப் பத்திரிகையாளராக அவர் நோக்கப்பட்டார்.

வாஷிங்டனில் உள்ள ஜனநாயகக் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற சிறு திருட்டுச் சம்பவம் என்று ஜனாதிபதி நிக்சன் வர்ணித்த அந்த விவகாரம் தொடர்பில் ஏனைய பத்திரிகைகள் அலட்சியப் போக்கைக்கடைப்பிடித்த வேளையில், உண்மையைக் கண்டறிவதில் தனது செய்தியாளர்களான வூட்வார்ட்டும் பேர்ன்ஸ்டீனும் காட்டிய ஆர்வத்தை பென் பிரட்லீ மேலும் ஊக்கப்படுத்தி அவர்களின் செயற்பாடுகளுக்கு பக்கபலமாக இருந்தார். தனது நிருவாகத்தில் இருந்தவர்களின் சட்டத்துக்குப் புறம்பான செயற்பாடுகளை மூடி மறைப்பதற்கு நிக்சன் மேற்கொண்ட காரியங்கள் அம்பலமானதையடுத்து அவருக்கு எதிராக அமெரிக்க காங்கிரஸில் பதவி நீக்கத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அந்தத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் தனக்கு தோல்வி ஏற்படுமென்பதை முன்கூட்டியே உணர்ந்துகொண்ட நிக்சன் 1974 ஆகஸ்ட் 9ஆம் திகதி பதவியை இராஜினாமா செய்தார். அமெரிக்காவின் 37ஆவது ஜனாதிபதியான நிக்சனின் வீழ்ச்சிக்கு சூத்திரதாரிகளாக இருந்த வாஷிங்டன் போஸ்டின் இரு இளம் செய்தியாளர்களும் பத்திரிகைத் துறையின் புதிய வீரசாகச தோற்றப்பாட்டை உருவகப்படுத்தி நின்றார்கள்.

வாட்டர் கேட் ஊழல் விவகாரம் 1976 ஆம் ஆண்டு All the president's Men என்ற பெயரில் ஹொலிவூட் திரைப்படமாகவும் எடுக்கப்பட்டது. பென் பிரட்லீயின் பாத்திரத்தில் நடிகர் ஜேசன் ரொபார்ட்ஸ் நடித்தார். பெருமளவுக்கு பிரபலமில்லாத உள்ளூர் பத்திரிகையை சர்வதேச புகழ்மிக்க செய்திப் பத்திரிகையாக மாற்றிக் காட்டிய ஆசிரியர், உண்மையைக் கண்டறிவதற்காக துணிச்சலுடன் மேற்கொள்ளப்படக்கூடிய நடவடிக்கைகள் மூலமாக, அதிகாரத்தில் உள்ளவர்கள் எவ்வளவு தான் பலம் பொருந்தியவர்களாக இருந்தாலும் அவர்களை பதவியில் இருந்து தூக்கியெறிந்து நேர்மையை நிலைநாட்ட முடியும் என்பதற்கான ஒப்புயர்வற்ற உதாரணமாகத் திகழ்கிறார்.

பென்பிரட்லீ மசாசூசெட்ஸ் மாநிலத்தின் தலைநகர் பொஸ்டனில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்த மேன்மைவாய்ந்த குடும்ப மொன்றில் பிறந்தவர். இவரின் குடும்பத்தைச் சேர்ந்த 51பேர் ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று தேறியவர்கள். இரண்டாவது உலக மகாயுத்தத்துக்குப் பிறகு நியூஹம்ஷயர் பத்திரிகையொன்றில் வேலைக்குச் சேர்ந்தார். ஆனால், 1948 இல் அதிலிருந்துவிலகி வாஷிங்டன் போஸ்டின் நிருபரானார். அப்பத்திரிகையின் இணைப் பிரசுரகர்த்தா பில் ஹிரஹாமுடன் நெருக்கமான நட்புறவை பென்பிரட்லீ வளர்த்துக் கொண்டார். பில் ஹிரஹாமுக்கு புலனாய்வுத்துறையினருடன் தொடர்புகள் இருந்தன.

1951 ஆம் ஆண்டில் பாரிஸ் நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் பத்திரிகைத் தொடர்பு அதிகாரியாக பென்பிரட்லீ நியமனம் பெறுவதற்கு பில் ஹிரஹாம் உதவினார். அடுத்த வருடம் தூதரகத்தின் பிரசாரப் பிரிவில் பென் இணைந்து கொண்டார். 1953 இல் நியூஸ்வீக் சஞ்சிகையின் வெளிநாட்டு நிருபரானார். பின்னர் அந்தச் சஞ்சிகை வாஷிங்டன் போஸ்ட்டுக்கு சொந்தமானதாகியது. வாஷிங்டன் திரும்பிய பென் பிரட்லீ வாஷிங்டன் போஸ்டில் இணைந்து கொண்டார். 1965 இல் அதன் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

1971 இல் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையைத் தொடர்ந்து பிரட்லீயும் வியட்நாமில் அமெரிக்காவின் போர் பற்றிய இரகசிய தகவல்கள் அடங்கிய பென்டகன் ஆவணங்களை வாஷிங்டன் போஸ்டிக் பிரசுரம்செய்தார். அந்த ஆவணங்களில் வியட்நாமில் அமெரிக்கத் தலையீடுகள் பற்றிய முன்னர் அறியப்படாததும் திகைப்பைத் தருகின்றதுமான தகவல்களை அந்த ஆவணங்கள் கொண்டிருந்தன. அவற்றை பத்திரிகைகளில் வெளியிடுவதைத் தடுக்க வெள்ளை மாளிகை முயற்சித்த போதிலும், வாஷிங்டனில் உள்ள உயர்நீதிமன்றம் அவ்வாறு தடுக்க முடியாது என்று உத்தரவு பிறப்பித்தது.

பென்பிரட்லீ தனது நெருங்கிய நண்பரான ஜோன் எவ்.கென்னடி பற்றிய இரு நூல்களை எழுதியிருக்கிறார். A Good Life என்ற தலைப்பில் தனது சுயசரிதையையும் 1995 இல் வெளியிட்டார். ■

---

*(66ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

அம்சம் தான் காரணம் என்றால் தங்கள் ஆளுமையினை இவர்கள் வளர்த்திருக்க வேண்டும். கடந்த செம்டெம்பர் மாதம் யாழ் முகாமையாளர் அமைப்பின் ஏற்பாட்டில் 'காலநிலை மாற்றம்' தொடர்பாக கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றது. இதற்கு வளவாளராக கொழும்பு பல்கலைக்கழக புவியியற்துறை தலைவரும் பேராசிரியருமான எஸ்.அன்ரனி நோர்பேட் கலந்து கொண்டார். இந்த விடயம் தொடர்பில் பேராசிரியர் பல்வேறு புதியவிடயங்களை முன்வைத்தார். இங்கு 'காலநிலை மாற்றம்' குறித்து பல விடயங்கள் ஆழமாக கலந்துரையாடப்பட்டன. இந்த நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்துறை பேராசிரியர்கள்,விரிவுரையாளர்கள், மாணவர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை. அந்த அளவிற்குத்தான் நம்மவர்களின் ஆர்வமும் ஈடுபாடும் உள்ளது. ஒரு சமூக விஞ்ஞான துறையில் முன்மாதிரியாக இயங்கி துறை சார்ந்து சேவையாற்றிய மறைந்த பேராசிரியர்களின் நினைவுப்பேருரைகளை ஏற்பாடு செய்யக் கூட இவர்களால் முடிவதில்லை. எனவே இவர்கள் ஓர் அறிவுப் பரவலாக்கச் சிந்தனையினை ஏற்கவும் ஏற்படுத்தவும் இன்னும் துணியவில்லை என்று தான் கூறவேண்டும்.

சுயபாசைக் கல்வி அறிமுகமான போது பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட துறை சார்ந்த நூலாக்கப்பணி, தரமான பாடநூல்களின் வருகை இப்பிராந்திய பல்கலைக்கழகங்களில் இடம்பெறவில்லை. ஏனைய பகுதி பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் பேராசிரியர்களால் எழுதப்படும் தரமான துறைசார்ந்த நூல்களை விமர்சனம் செய்யும் இவர்களால் இதற்கு மாற்றீடாக தரமான ஒரு நூலைத் தானும் இவர்களால் இதுவரையில் வெளியிட முடியவில்லை. சாய்வு நாற்காலி போதை, அதிகார சிந்தனை மேலோங்கி நிற்கும் நிலையில் சமூக சிந்தனைத் தளத்தையும் சமூக விஞ்ஞான ஆய்வுகளையும் இவர்களிடம் நாம் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்.

இனிமேலாவது பிராந்திய பல்கலைக்கழகங்களுக்கு வெளியேயுள்ள புலமையாளர்களை, சமூகச்செயற்பாட்டாளர்களை ஒன்றிணைத்து குவியப்படுத்தி சமூக விஞ்ஞானத் துறைகளின் வளர்ச்சிக்கு ஆரோக்கியமான சூழலை உருவாக்க வேண்டும். சமூக மாற்றம் தொடர்பில் இளம்தலைமுறையினருக்கு சீரிய கடப்பாடு உண்டு. அதிலும் குறிப்பாக பல்கலைக்கழகங்களின் துறைகளிற்குள் உள்வாங்கப்பட்ட அல்லது அரவணைக்கப்பட்ட இளையவர்கள் இத்தகைய சமூகச் செயற்பாடுகளில் இருந்து விலக முடியாது. ஏனெனில் உயர்கல்வி உயர் ஆய்வுகளிற்கான வசதி வாய்ப்புகள் அதிகம் பெற்றவர்கள் இவர்கள்தான்.


பல்கலைக்கழகம் அமைவுற்ற பிரதேசத்தை மட்டுமல்ல அது பிரதிநிதித்துவப்படுத்தும் முழு பிராந்தியத்திலும் நுண் மாண் நுழைபுலமிக்க ஆய்வுகளை முன்னெடுக்க வேண்டும். ஆகவே தமிழ்ப்பிராந்திய பல்கலைக்கழகங்கள் துறைசார்ந்த ஆய்வுகளிலும் பிராந்திய ஆய்வுகளிலும் இன்றைய நிலையில் இருந்து இன்னும் பல படிகள் முன்னேறி உந்திப்பாய வேண்டிய தேவையும் அவசியமும் எழுந்துள்ளது. ஆகவே ஒரு பல்கலைக்கழக ஆசிரியனின் பணி என்பது 'கற்றல் கற்பித்தல் ஆராய்ச்சி' ஆகத் தான் இருக்க முடியும். மேலும் சமூகம் சார்ந்து செயற்பாடுகளிலும் இணைந்துகொள்ள வேண்டும். இதனை பல்கலைக்கழக சமூகத்தினர் உணரும் வேளையில் தான் நம்மிடையே சமூக விஞ்ஞானத்துறைசார் வளர்ச்சியில் மாற்றங்களை அதிகம் எதிர்பார்க்கலாம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராந்திய அரசியல்



# தாயாரின் மரபை மீட்டெடுக்கும் முயற்சியில் பூட்டோ சர்தாரி



சல்மான் மசூத்

ஒரு தசாப்தகாலமாக வெளிநாடுகளில் அஞ்ஞாத வாசம் செய்த பின்னர் பெனாசீர் பூட்டோ 7 வருடங்களுக்கு முன்னர் பாகிஸ்தான் திரும்பியபோது இலட்சக்கணக்கில் திரண்ட ஆதரவாளர்கள் அவருக்கு அமர்க்களமான வரவேற்பை அளித்தனர். 26 வயதான அவரின் மகன் பிலாவால் பூட்டோ சர்தாரி இருவாரங்களுக்கு முன்னர் பாகிஸ்தானின் தென்பகுதித் துறைமுக நகரான கராச்சியில் பிரமாண்டமான பேரணியொன்றை நடத்தி தனது தாயாரின் மரபை மீளநிலை நிறுத்துவதற்கு முயற்சித்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

பாகிஸ்தான் மக்கள் கட்சியின் கொடியில் உள்ள சிவப்பு, கறுப்பு மற்றும் பச்சை வர்ணங்களிலான ஆடைகளை அணிந்த ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் பாகிஸ்தான் தேசபிதா முஹமட் அலி ஜின்னா நினைவாலயத்தின் முன்பாகவுள்ள பரந்த மைதானத்தில் அணிதிரண்டு தங்களின் இளந்தலைவரு க்கு ஆதரவாக கோஷங்களை எழுப்பியதுடன், கட்சியின் கீதத்தை இசைத்து நடனமாடினர். தேய்ந்துகொண்டு போகும் தனது கட்சியின் செல்வாக்கை தூக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்துவதற்கான பாகிஸ்தான் மக்க ளைக் கவருவதற்கு பூட்டோ சர்தாரி மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கும் முயற்சிகளின் ஒரு அங்கமே இந்த கராச்சிப் பேரணியாகும். ஆட்சியதி காரத்தில் ஐந்து வருடங்களைப் பூர்த்தி செய்த பிறகு 2013 பொதுத் தேர்தலில் பாகிஸ்தான் மக்கள் கட்சி பெருந்தோல்வியைத் தழுவியது. மக் கள் கட்சி தலைமையிலான அரசாங் கத்துக்கு எதிராக பெருவாரியான ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட் டதுடன் திறமையற்ற நிருவாகத்தை நடத்தியதாகவும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

ஒக்ஸ்போர்ட்டில் கல்வி கற்றவ ரான பூட்டோ சர்தாரி தனது கட்சியை பழைய செல்வாக்கு நிலைக்குக் கொண்டுவருவதென்பது சுலபமான காரியமாக இருக்கப்போவதில்லை. பாகிஸ்தானின் மத்திய பகுதி நகரான முல்தானில் கடந்தமாத முற்பகுதி யில் நடைபெற்ற இடைத்தேர்தலில் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் வேட் பாளர் வெறுமனே சில ஆயிரம் வாக் குகளை மாத்திரமே பெற்று மூன்றா வது இடத்துக்கே வந்தார். இது பூட்டோ சர்தாரி எதிர்நோக்கப் போகும் சவாலை வெளிச்சம் போட் டுக்காட்டுகிறது. எதிரணி அரசியல் வாதியான முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான் கானின் ஆதரவைப் பெற்ற சுயேட்சை வேட்பாளர் ஒருவரே அந் தத்தேர்தலில் வெற்றிபெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் அர சாங்கத்துக்கு எதிராகத் தலைநகர் இஸ்லாமாபாத்தில் கடந்த ஆகஸ்ட் நடுப்பகுதியில் இருந்து இடம்பெற் றுவரும் ஆர்ப்பாட்ட இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரான இம்ரான் கானின் செல்வாக்கு துரிதமாக அதிக ரித்துவருகின்றது. பிரதமர் ஷெரீ புக்கு சவாலாக அவர் வளர்ந்து வரு கின்றார் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது. மோசடி கள் நிறைந்ததாக இருந்த தேர்தலை யடுத்தே ஷெரீப் அதிகாரத்துக்கு வந் தார் என்று குற்றஞ்சாட்டும் இம்ரான் கான், புதிதாக தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்தி ருக்கின்றார். மக்கள் மத்தியில் அர சாங்கத்தின் மீது அதிகரித்துவரும் அதிருப்தியை தனக்கு சாதகமான முறையில் பயன்படுத்துவதில் முன் னாள் கிரிக்கெட் காப்டன் முனைப் பாக இருக்கிறார். பணவீக்கமும் மின் வெட்டுப் பிரச்சினையும் மக்களைப் பெரிதும் பாதித்துக்கொண்டிருக்கின் றன. உறவினர்களுக்கு சலுகை காட் டுவதாகவும் ஊழல் செய்வதாகவும் ஷெரீப் குடும்பத்தினருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்படுகின் றன. இவைபற்றியெல்லாம் இம்ரான் கான் செய்துவருகின்ற பிரசாரம் அண்மைய மாதங்களாக பெரிதாக எடுபடுகிறது போலத் தெரிகிறது.

அக்டோபர் 19 ஆம் திகதி கராச்சி யில் இடம்பெற்ற பேரணி மீண்டும் தான் அரசியல் களத்துக்கு வந்துவிட் டதை வெளிக்காட்டுவதற்கு பூட்டோ சர்தாரியினால் மேற்கொள்ளப்படு கின்ற புதியதொரு முயற்சியின் சமிக் ஞையாகும். தன்னை பாகிஸ்தானின் ஒரு எதிர்காலத் தலைவராகவும் நாட் டின் இளஞ்சந்ததியின் உண்மையான பிரதிநிதியாகவும் காண்பிக்க அவர் முனைந்து நிற்கிறார். நாட்டின் பிரத மர்களாக இருந்த மக்கள் வசீகரம் கொண்ட தலைவர்களான தனது

(65ஆம் பக்கம் பார்க்க...)




கராச்சி பேரணியில் பூட்டோ ஆதரவாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் கோட்பாடு

# நவீன மத உருவாக்கங்களின் அரசியல்



பேராசிரியர்
ந.முத்து மோகன்

நமது மதங்களை உருவாக்கியவர்கள் யார்? இது ஒரு மோசமான கேள்வி என்பது எனக்கே தெரிகிறது. நமது மதங்களை நாம்தான் சொந்தமாக உருவாக்கிக் கொண்டதாக நம்பிக்கொண்டிருக்கிறோம். கொஞ்சம் மரியாதையாகச் சொன்னால், நமது முன்னோர்கள் தாம் இந்த மதங்களை வடிவமைத்து நமக்குத் தந்ததாக நம்பிக் கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கையில், அந்த நம்பிக்கையில் கீறலை ஏற்படுத்துவதுபோல இந்தக் கேள்வி அமைகிறது. நமது மதங்கள் மிகப் பழமையானவை. 2000-2500-3000 ஆண்டுகள் எனப் பழைய வரலாறுகளைத் தாராளமாகக் கிளறமுடியும். வெவ்வேறு வரலாற்றுக் காலகட்டங்களில் வெவ்வேறு அழுத்தங்களுடன், வெவ்வேறு திசைகளை நோக்கி அவை ஆடி அசைந்து அலைந்து வளர்ந்திருக்கின்றன. நமது மதங்களின் வரலாற்றில், அவை இப்படித்தான் இருக்க வேண்டுமென்று அவற்றுக்குக் கறாரான கட்டுப்பாடுகள் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. நமது மதங்களைப் பற்றி ஒவ்வொரு இருநூறு வருடத்திற்கும் ஒவ்வொரு கதை சொல்லமுடியும். இந்த நீண்ட நெடிய வரலாற்றின் ஊடே, காலனி ஆட்சிக் காலம் என்பது காத்திரமான மாற்றங்களை ஏற்படுத்திய காலகட்டம் ஆகும். கீழை நாடுகளின் வரலாறு அக்காலத்தில் சில திருப்புமுனைகளைச் சந்தித்ததாகக் கூறுவார்கள். குறிப்பிட்ட அக்காலகட்டத்தில், நமது மதங்களும் தீவிரமான மாற்றங்களைச் சந்தித்துள்ளன. நீங்கள் நம்புவீர்களோ நம்பமாட்டீர்களோ, குறிப்பிட்ட இக்காலத்தில் நமது மதங்கள் முன்னெப்போதுமில்லாத அளவில் மாற்றமடைந்து முழுக்க புது வடிவங்களை ஈட்டியுள்ளன. ஐரோப்பியர்கள் நமது நாடுகளுக்கு வந்தபோது இங்கிருந்த மக்களையெல்லாம் நாகரிகப்படுத்தப் போகிறோம் என்றுதான் சொல்லிக்கொண்டார்கள். மக்கள் ஒருபுறமிருக்க, நமது மதங்களெல்லாம் நவநாகரிக மதங்களாக மாறிவிட்டன. அந்த மாற்றங்களைத் தொகுத்தே நவீன மத உருவாக்கங்கள் என்று இங்கு குறிப்பிடுகிறோம்.

காலனி ஆட்சிக்காலத்தில் நம்மூர் மதங்களில் ஏற்படத் தொடங்கிய ஒருவகையான மாற்றங்கள், 19, 20 ஆம் நூற்றாண்டுகளைக் கடந்து, இன்று உச்சகட்டத்தை எட்டியுள்ளன. வெளிநாட்டுச் சக்திகளுக்கு எதிராக மட்டுமன்றி, உள்ளூர் சகபாடிகளுக்கு எதிராக மதப்பெரும்பான்மையைப் பயன்படுத்துவது, மதச்செல்வாக்கைப் பயன்படுத்தி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது, சிறுபான்மையினர் மீது இனப் படுகொலைகளை ஏவிவிடுவது என மத அரசியல் பெருகி வளர்ந்து வந்துள்ளது. இந்தியாவிலும் இலங்கையிலும் ஒருசேர மதப்பெரும்பான்மையை ஆதாரமாகக்கொண்ட கட்சிகள் ஆட்சியில் அமர்ந்துள்ளன என்பது அச்சமூட்டக்கூடியசூழலை உருவாக்கியுள்ளது. காலனி ஆட்சிக் காலத்திலிருந்து, நாடு விடுதலை பெற்ற நாட்களிலிருந்து, இத்தகைய சூழலை நோக்கித்தான் வேகவேகமாக ஓடி வந்தோமா என்று எண்ணத் தோன்றுகிறது.மீண்டும் அதே கேள்வி முன்னுக்கு வருகிறது, இந்த மதங்களை உண்மையில் நாமேதான் விரும்பி வடிவமைத்தோமா? இந்த மதங்களைச் செய்தவர்கள் யார்?

மேற்கத்திய அறிவாளிகள்

குறைந்தபட்சம் இரண்டு காரணங்களுக்காக காலனிய ஆட்சியாளர்கள் தெற்கு ஆசியாவின் மதங்களை மறு உருவாக்கம் செய்தார்கள். ஒன்று, அவர்களது நிர்வாகத் தேவைகளுக்காக. சாலை ஓர மரங்களின்மீது எண்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளைப் பொறித்து வைத்து கணக்கெடுப்பதைப்போல இந்தியா, இலங்கை போன்ற நாடுகளின் மக்களை ஓர் ஒழுங்கிற்குள் கொண்டுவருவதற்கு மதக்கணக்கெடுப்பு அவர்களுக்குத் தேவைப்பட்டது. மக்கள் கூட்டங்களை ஒழுங்குபடுத்த, கட்டுப்படுத்த, அடிமைப்படுத்த, 'நாகரிகப்படுத்த' எண்ணிக்கைக் கணக்கு தேவைப்பட்டது. ஆற்றில் கொட்டினாலும் அளந்து கொட்ட வேண்டுமல்லவா? மதங்கள் சமூக ஒழுக்கங்களை, கட்டுப்பாடுகளை நோகாமல் நொறுங்காமல் மக்களிடையில் வழக்குக்குக் கொண்டுவந்து விடுகின்றன. எவ்வளவோ கடினமான விடயங்களை மதங்கள் உளவியல்ரீதியாக நெகிழ்வாகஏற்புடமை கொண்டனவாக மாற்றிவிடுகின்றன. அதனால் மதங்கள் முக்கியமாகின்றன. எந்த மதம் பெரும்பான்மை மதம்? ஆட்சியாளர்கள் எந்த மதத்தவருக்கு எவ்வளவு இடம் கொடுக்க வேண்டும்? எந்த மதத்தவரை அதிகமாக அனுசரித்துக்கொள்ள வேண்டும்? என்பவையெல்லாம் இந்தக் காலத்தில்தான் முக்கியமாகின. மதப்பெரும்பான்மை என்ற விடயத்திற்கு நாம் அறிமுகமாகிக்கொண்ட காலமும் இதுதான். காலனி ஆட்சியாளர்கள் சொல்லிக்கொடுத்ததைத் தாண்டி, மதப் பெரும் பான்மையை இன்னும் பல நோக்கங்களுக்கு லாவகமாகப் பயன்படுத்த இந்த நாட்களில் நாம் கற்றுக் கொண்டுவிட்டோம் என்பதையும் சொல்லியாக வேண்டும்.

19ஆம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து தெற்கு, தென் கிழக்கு ஆசியாவின் பெரிய மதங்களான பௌத்தம், இந்து மதம் ஆகியவற்றைக் கிறிஸ்தவ மதத்தின் நோக்கிலிருந்து மறு உருவாக்கம் செய்யத் தொடங்கினார்கள். இது நவீன மத உருவாக்கங்களின் இரண்டாவது சூழலாகும். ஐரோப்பாவில் கத்தோலிக்கக் கிறிஸ்தவத்தைத் தீவிரமாக விமர்சித்து சீர்திருத்த கிறிஸ்தவம் தோன்றி நிலை கொண்ட காலம் அது. கத்தோலிக்கத்திற்கு சுமார் 1500 ஆண்டுகால இறையியல் உண்டு. ஆயின் சீர்திருத்த கிறிஸ்தவம் அப்போதுதான் சுமார் 200-300 ஆண்டுகளாகத் தனது இறையியலை எழுதிக் கொண்டிருந்தது. கீழைநாட்டு மதங்களைச் சீர்திருத்த கிறிஸ்தவம் ஆர்வத்தோடு அணுகியது என்றும் கூறுவார்கள். கத்தோலிக்கத்தின் சடங்குகள், உருவ வழிபாடு ஆகியவற்றைத்தாண்டி அருவமான இறைக்கொள்கை, அற உணர்வு ஆகியவை தூக்கலாக அமைந்த சீர்திருத்த கிறிஸ்தவம் காலனியவாதிகளில் பலரால் (ஆங்கிலேயர்கள், ஜெர்மானியர்கள் ஆகியோரால்) ஆதரிக்கப்பட்டது. ஐரோப்பாவில் கத்தோலிக்கத்திற்கும் சீர்திருத்த கிறித்தவர்களுக்கும் இடையில் வெளிப்பட்ட வேறுபாடுகள் தெற்காசிய சமய உருவாக்கங்களிலும் வெளிப்பட்டன. இன்னும் சரியாகச் சொல்லுவதானால், ஐரோப்பியர்களுக்கிடையில், கத்தோலிக்கர்/ சீர்திருத்த கிறிஸ்தவர், ஆங்கிலேயர்/ஜேர்மானியர், ஆங்கிலேயர்/ அயர்லாந்துக்காரர்/ ஸ்காட்லாந்துக்காரர், பழமைவாதி/ தாராளவாதி/ தொழிற் கட்சியாளர் என்பது போன்ற ஒவ்வொரு வேறுபாடும் இந்து மதம், பௌத்தம், சைவ சித்தாந்தம் ஆகியவற்றின் மீட்டுருவாக்கங்களில் வேறுபாடுகளை ஏற்படுத்தியது. இருப்பினும் மேற்கத்திய சிந்தனை, கிறித்தவம், காலனிய நலன் ஆகியவற்றின் நோக்கங்கள் துலாம்பரமாக வெளிப்பட்டன.

ஒரு மதம் என்பது இறைச் செய்தியைச் சுமந்து நிற்கும் புனித நூல் ஒன்றை மையமாகக் கொண்டிருக்க வேண்டும் என்பது மேற்கத்தியரின் நம்பிக்கை. எனவே இந்தியா, இலங்கை, சீனா போன்ற நாடுகளைக் காலனிப்படுத்தியிருந்த ஐரோப்பியர்கள் நமது புனித நூல்களைத் தேடினார்கள். அவை அவர்களுக்குக் கிடைத்துவிட்டன! வேதங்கள், உபநிடதங்கள், திரிபீடக நூல்கள், பகவத் கீதை என வரிசைப்படுத்தினார்கள். நவீன மத உருவாக்கங்களில் மக்களை விட, புரோகிதர், பூசாரி, பிக்கு போன்றோரை விட புனித நூல்கள் தாம் முக்கியப்படுகின்றன என்று சொல்லுகிறார்கள். இது ஓர் ஆச்சரியம் தான். நமது மதங்களின் வரலாற்றில் புத்தகங்களுக்கு இவ்வளவு மரியாதை எப்போதுமே இருந்தது கிடையாது. அவரவர் ஊரில் அவரவர் வசதிக்கேற்ப மதச்சடங்குகளை மனம்போல வளைத்துக் கொள்வார்கள்.

வேதங்களைப் பழைய ஏற்பாடு எனக் கொண்டால் உபநிடதங்களைப் புதிய ஏற்பாடு எனச் சொல்லலாம் என்று மேற்கத்திய அறிஞர்கள் ஒப்பிட்டார்கள். வைதீக

> **உலகின் மிகப் பழமையான மதம் வேத மதம். உலகின் மிகப் பழமையான தத்துவம் வேதாந்தம். இவை இரண்டுமே ஆன்மீகம் பேசுபவை. மதத்தையும் தத்துவத்தையும் பிரித்தறிய முடியாத ஓர் ஆன்மீக துவக்கத்தை உலக வரலாறு கொண்டுள்ளது.**

இந்துமதத்தைக் கத்தோலிக்கக் கிறித்தவம் என்று சொன்னால், அதன் சடங்காச்சாரங்களைக் கேள்விக்குள்ளாக்கிய பௌத்த சமயத்தைச் சீர்திருத்த கிறித்தவத்தோடு ஒப்பிடலாம் என்றார்கள். அத்வைத வேதாந்தமும் பௌத்தமும் அருவமான சீர்திருத்த கிறித்தவ இறையியலுக்கு மிகவும் நெருங்கி வந்தன. பௌத்தத்தின் அறக் கோட்பாடுகள் சீர்திருத்த கிறித்தவர்களுக்கு மிகவும் பிடித்திருந்தன. இயேசுவின் வாழ்க்கையையும் புத்தரின் வாழ்க்கையையும் ஒப்பிட்டு மேற்கில் பல நூல்கள் வெளிவந்தன. துக்கம், துயரம், துன்பத்தின் வழியாக விடுதலை என்ற கருத்து கிறித்தவத்தையும் பௌத்தத்தையும் பக்கத்தில் கொண்டு வந்தன. பௌத்தத்தின் நடைமுறை வடிவங்களிலிருந்து பெரிதும் விலகிய தூய அறவடிவம் மேற்கு நாடுகளில் பிரபலம் அடைந்தது. இந்து மதத்தவர் எல்லோருமே அத்வைத வேதாந்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது போன்ற கருத்தும் மேற்கில் பிரசித்தி பெற்றது. சைவம், வைணவம், சாக்தம், ஊருக்கு ஊர் வேறு வேறான அம்மன் கோவில்கள், ஆவேச தெய்வங்கள், குல தெய்வ வழிபாடுகள் ஆகியவற்றை எல்லாம் சேர்த்துத் தைத்து இந்து மதம் என்ற ஒரு புதிய மதத்தையே மேற்கத்திய அறிஞர்கள் உருவாக்கினார்கள். இந்து மதம் என்பது அறிஞர்களுக்கிடையில் மட்டும் தான், பெரும்பாலும் புத்தகப் பயன்பாட்டில் மட்டும் தான் நிலவுகிறது என்று இப்போது ஓர் அறிஞர் எழுதுகிறார். வெள்ளைக்காரன் தான் நம் எல்லோரையும் ஒரே மதத்திற்குள் வைத்துப் பூட்டினான் என்று காஞ்சி காமகோடி சங்கராச்சாரியர் தெய்வத்தின் குரல் நூலில் கூறுகிறார். பிராம்மணனையும் சூத்திரனையும் ஒரே மதத்தினுள் வைத்துப் பூட்டியதில் இன்றுவரை அவருக்கு வருத்தம் உண்டு.

கீழைநாட்டு மதங்களின் ஆராய்ச்சியில் செர்மானியர்களின் நுழைவு வரலாற்றுச் சிறப்புமிக்கது. வாழ்க்கையில், நடைமுறையில் செய்ய இயலாமல் போனதை செர்மானியர்கள், அவர்களது தத்துவத்தில் செய்தார்கள் என்று கார்ல் மார்க்ஸ் சொல்லுவார். கீழை நாடுகள் விடயத்திலும் அப்படித்தான் ஆனது. ஆங்கிலேயர்கள் உலகம் முழுவதையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டுவந்தார்கள். செர்மானியர்கள் உலகவரலாற்றுக்குத் தாமே முதல்வர்கள் என்பது போல ஒரு கோட்பாட்டை உருவாக்கினார்கள். சமஸ்கிருத மொழி குறித்த சில கண்டுபிடிப்புகள் செர்மானியர்களின் வரலாற்றுக் கொள்கைக்கு முகாந்திரமாக அமைந்தன. எப்படி? முதலில், சமஸ்கிருத மொழி கிரேக்கம், லத்தீன், யூதர்களின் ஹிப்ரூ போன்ற மொழிகளை விடப் பழமையானது என்று செர்மானிய மொழியியல் நிறுவனம் ஒன்றில் கண்டுபிடித்தார்கள். இரண்டாவதாக, சமஸ்கிருத மொழி ஐரோப்பிய மொழிகள் பலவற்றின் தாய் மொழி, எனவே அது ஓர் இந்தோ-ஐரோப்பிய மொழி என்று நிறுவினார்கள். மூன்றாவதாக, சமஸ்கிருத மொழி ஓர் ஆரிய மொழி என்றார்கள். இன்னும், ஐரோப்பிய மொழிகளுக்கிடையில் செர்மானிய மொழியே சமஸ்கிருதத்திற்கு மிகவும் நெருக்கமானது என்றும் 'கண்டறிந்தார்கள்'.

மொழி அடிப்படையில் இதுவரை பேசப்பட்ட விடயத்தை செர்மானியர்கள் அதன்பின் வரலாற்றுரீதியாகவும், சமய வரலாற்றுரீதியாகவும் (இன அரசியலாகவும்) பலப்படுத்தினார்கள். சமஸ்கிருத மொழியே உலகின் ஆகப் பழமையான மொழி என்று ஆகிவிட்டதால், இறைச்செய்தி வரலாற்றில் முதலில் வழங்கப்பட்ட மொழி இந்த மொழியே என்று ஆகிவிடுகிறது. வேதங்களே முதல் இறைச் செய்திகளைக் கொண்ட ஆரிய நூல்களாகும். இந்த முடிவின்படி யூதர்களின் ஹிப்ரூவையோ, கத்தோலிக்கர்களின் லத்தீனையோ, கடவுளை அறியாத கிரேக்கத்தையோ இனி பற்றிப் பிடிக்க வேண்டியதில்லை. செர்மானியர்களின், இந்தோ-ஐரோப்பியர்களின் சொந்த மொழியான சமஸ்கிருதத்திலேயே இறைவன் முதலில் பேசினார். இறைவன் முதலில் பேசிய அந்த ஆரிய மொழியே உலக வரலாற்றின் மிகத் தூய்மையான புனித மொழி.

உலகின் மிகப்பழமையான மதம் வேத மதம். உலகின் மிகப் பழமையான தத்துவம் வேதாந்தம். இவை இரண்டுமே ஆன்மீகம் (Spiritualism) பேசுபவை. மதத்தையும் தத்துவத்தையும் பிரித்தறிய முடியாத ஓர் ஆன்மீகத் துவக்கத்தை உலகவரலாறு கொண்டுள்ளது. செர்மானிய அறிஞர் ஹெகலின் தத்துவம் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள்! அது ஆன்மாவில் தொடங்கி ஆன்மாவில் முழுமையடையும்! பிதா, சுதன் ஆகியோரைவிட, உயிர்த்தெழுந்த ஏசுவின் பரிசுத்த ஆவியே சீர்திருத்த கிறித்தவர்களுக்கு அதிகம் நெருக்கமானது. அதுவே எல்லாம். அந்த தூய ஆவியின் செயல்பாடுகளைப் பற்றிப் பேசுவதுதான் ஆன்மீகம். கீழை நாடுகளில் அத்வைத வேதாந்தமும் பௌத்தமும் பரிசுத்த ஆவியின் இறையியல்கள் போல் தோற்றமளிக்கும். செர்மானியர்கள் உலகையும் உலக வரலாற்றையும் கோட்பாட்டுரீதியாகக் கைப்பற்றி விட்டார்கள்! இத்தாலிய மறுமலர்ச்சி, கிரேக்கத் தத்துவம், யூதர்களின் பழைய ஏற்பாடு போன்ற வரலாற்றுத் துவக்கங்களை செர்மானியர்கள் ஒரே தாவலில் தாண்டிக் குதித்து விட்டார்கள். நவீன ஐரோப்பாவின் பகுத்தறிவு, அறிவொளி இயக்கம், விஞ்ஞான அறிவு போன்றவற்றையும் முறியடித்து விட்டார்கள். ஒரே கல்லில் எத்தனை மாங்காய்கள்!

> மதங்கள் இறைவனுக்கு எதிராக ஒரு சாத்தானைக் காட்டுவது போன்று தேசியங்களும் தேசவிரோதிகளை உற்பத்தி செய்து காட்டுகின்றன. கால ஓட்டத்தில் எதிரிகள் மாற்றப்பட்ட கதைகள் எல்லாம் உண்டு. காலனி ஆட்சியாளர்களையும் கிறிஸ்தவ மதத்தையும் ஒரு காலத்தில் எதிரிகளாக சித்தரித்தது உண்டு. ஆனால் கிறிஸ்தவ எதிரிகள் மறைந்துபோய் இந்தியா போன்ற நாடுகளில் முஸ்லிம்கள் இந்துத்துவத்தின் எதிரிகளாக மாற்றப்பட்டு விட்டார்கள்

## கீழைநாட்டுத் தேசியவாதிகள்

காலனிய அறிவாளிகள், செர்மானிய கீழைத்தேயவாணர்கள் (Orientalists) ஆகியோரிடம் பாடம் படித்தவர்கள் நமது நாடுகளின் புதிய அறிவாளிகள். மரபுரீதியாக மேட்டுக்குடிகளாகவும் மேட்டிமைச் சாதியினராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் அமைந்து போனவர்கள். இவர்கள் தாம் நமது நாடுகளின் தேசியவாதிகளாக நமக்குக் கிடைத்தவர்கள். இந்த தேசியவாதிகளுக்கும் நமது நாடுகளின் சாதாரண விவசாயிகளுக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது என்று அறிஞர்கள் எழுதுகிறார்கள். நமது நாடுகளின் அடித்தள விவசாயிகளைக் கண்டு நமது தேசியவாதிகள் அச்சப்படுகிறார்கள் என்றும் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். மரபான மேட்டிமை அந்தஸ்தை இழக்க விரும்பாத இவர்கள் மதங்களின் அடிப்படையிலேயே தேசியங்களை உருவாக்கினார்கள்.

ஐரோப்பாவில் நீண்ட நெடிய இடைக்காலத்தில் நிலவிய (கிறிஸ்தவ) மதத்தைப் பின்னுக்குத் தள்ளி, அந்தந்த நாடுகளின் மொழி அடிப்படையில் தேசியங்களை உருவாக்கினார்கள். அந்த தேசியங்கள் சமயச் சார்பற்ற தேசியங்களாகவும் இருக்க முடிந்தது. ஆனால் நமது நாடுகளின் தேசியவாதிகள் மொழிகளை விட மதங்களையே அடிப்படையான அடையாளமாகக் கொண்டார்கள். அடித்தளமக்களிடமிருந்து இன்னும் போதுமான ஆதரவைத்திரட்ட முடியாத (திரட்ட விரும்பாத) தேசியவாதிகள் மதங்களின் அடிப்படையில் தேசியங்களை உருவாக்கினார்கள். தேசியம் என்ற நவீன அடையாளம் உருவாகாமல் தவித்தபோது, அதன் இடைவெளிகளை இட்டு நிரப்ப மதம் தேவைப்பட்டது. தேசியம் என்பது ஒரு நவீன அரசியல் கொள்கை. ஒரே நேரத்தில் தேசிய உருவாக்கமும் நவீன மத உருவாக்கமும் இங்கே நடந்தன. அரசியலும் மதமும் இணைந்து செல்வது என முடிவு செய்து கொண்டன. இதன் விளைவுகள் பாரதூரமானவை.

தேசியத்தை நமது காலத்தின் மதமாக மாற்றுவோம் என சில தேசபக்தர்கள் கூறுவதுண்டு. ஆனால் நடந்த தென்னவோ, மதங்களே தேசியங்களாக மாற்றப்பட்டன, இந்து தேசியம், பௌத்த தேசியம். நாட்டின் மொழி, நிலப்பரப்பு, தேசியம், மதம், இன்னும் கூடுதலாக அரசாங்கம் ஆகியவை பரஸ்பரம் ஒன்றுபடுத்தப்பட்டுள்ளன; ஒன்றுக்கொன்று ஒத்தாசையாக உள்ளன. விலகுபவர்கள் வெளியேறவேண்டும். காலனி ஆட்சிக்காலத்திய எண்ணிக்கை அரசியல் போல தேசியத்திற் கும் எண்ணிக்கை அரசியல் தேவைப்படுகிறது. தேசியம் ஓர் ஒருமைவாதம், ஓரிறைக்கொள்கை போல. அதற்கு வேறுபாடுகளைப் பிடிக்காது. அது வேறுபாடுகளைச் சகிக்காது. அது வேறுபாடுகளைக் கொன்றுவிடவே செய்யும்.

கிறிஸ்தவ மதத்தைப் பார்த்துப் பாவனை செய்து இந்து மதத்தையும் பௌத்த மதத்தையும் நாம் உண்டாக்கிக் கொண்டது போல ஐரோப்பியரைப் பார்த்துப் பாவனையாக நமது தேசியங்களையும் உருவாக்கிக் கொண்டோம். பாவிக்கப்பட்ட மதங்கள், பாவிக்கப்பட்ட தேசியங்கள். நமது மதங்களும் தேசியங்களும் உள்ளுக்குள்ளிருந்து வரவில்லை, அவை முழுக்க நமக்கே சொந்தமானவை அல்ல, அவை வருவிக்கப்பட்டவை (Derivative Religions and Derivative Nationalisms), கைமாறி வந்தவை என்று ஓர் அறிஞர் எழுதுகிறார்.

மதங்கள் இறைவனுக்கு எதிராக ஒரு சாத்தானைக் காட்டுவதைப்போல, தேசியங்களும் தேசவிரோதிகளை உற்பத்தி செய்து காட்டுகின்றன. ஆனால் கால ஓட்டத்தில் எதிரிகள் மாற்றப்பட்ட கதைகளெல்லாம் உண்டு. காலனி ஆட்சியாளர்களையும் கிறிஸ்தவ மதத்தையும் ஒரு காலத்தில் எதிரிகளாகச் சித்தரித்ததுண்டு. ஆனால் கிறிஸ்தவ எதிரிகள் மறைந்து போய், இந்தியா போன்ற நாடுகளில் முஸ்லீம்கள் இந்துத்துவத்தின் முதல் எதிரிகளாக மாற்றப்பட்டு விட்டார்கள். எப்போதுமே கிறித்தவர்கள்தாம் எதிரிகளாக இருக்க வேண்டுமென்று நான் கருதவில்லை. ஆனால், உலக அரசியலில் மேற்கு நாடுகளின் எதிரிகள் என்ற முத்திரையைப் பெற்ற முஸ்லிம்களே எப்படி கீழை நாட்டவருக்கு (முஸ்லிம்களும் கீழை நாட்டவர்தான்) எதிரிகளானார்கள்? என்பது ஓர் அரசியல் விசித்திரம். காலனி ஆட்சியாளரை நோக்கி வெளிமுகமாக உருவான எதிர்ப்பு, எப்போது, ஏன் உள்முகமாகத் திரும்பியது? என்பது ஒரு சிக்கலான கேள்வி. வெவ்வேறு நாடுகளில் தொழில்பட்ட வெளிமுகமான எதிர்ப்புகள் மிக விரைவில் உள்முகமாக மாற்றப்பட்டு நாம் உள்ளுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் கொன்றழிப்பவர்களாக மாற்றப்பட்டிருக் கிறோம். சாமுவேல் ஹன்டிங்டன் முன் வைத்த நாகரிகங்களின் மோதல் (மதங்களின் மோதல்) என்ற வேலைத்திட்டத்தை நோக்கி உலக நாடுகள் வேகவேகமாக வழிநடத்தப்படுவது போன்ற தோற்றம் கிடைக்கிறது. மதங்களின் மோதல் என்ற வேலைத் திட்டம் நடைமுறைக்கு வரும்போது மூன்றாம் உலக நாடுகள் ஒவ்வொன்றுமே போர்க்களமாக மாறும் நிலையைச் சந்திக்க வேண்டிவரும்.


கடைசியாக, சில கேள்விகளை முன்வைத்து, இந்த விவாதத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவோம். காலனி ஆட்சியாளர்களை எதிர்த்து உருவான நமது நாடுகளின் தேசியவாதிகள் ஐரோப்பிய முன்மாதிரியிலான, ஒற்றைவடிவிலான மதத்தையும் தேசியத்தையும் ஏன் சுவீகரித்துக் கொண்டார்கள்? மிகப் பழமையான, மிகச் செழுமையான தமது சொந்த மதங்களின் ஆற்றல்களை மீட்டெடுக்க அவர்கள் ஏன் முயற்சி செய்யவில்லை? தமது சொந்த நாடுகளின், சொந்தக் கலாசாரத்தின் அனுபவங்களிலிருந்து ஒரு கோட்பாட்டை அவர்களால் ஏன் உருவாக்க முடியாமல் போனது? பாவனை, வருவித்தல், கைமாற்றிப் பெறுதல், கலப்பு வடிவம் (Hybrid, Mimicry, Imitation) போன்ற பம்மாத்தான நிலைப்பாடுகளை அவர்கள் ஏன் தேர்ந்தெடுத்தார்கள்? நாட்டு விடுதலைக்குப் பின்னரும் மேலைநாட்டவரின் தொங்கு சதைகளாக இவர்கள் தொடர்ந்து தொழிற்பட்டு வருவது ஏன்? காலனி ஆட்சியின் தொடர்ச்சிதான் இப்போதைய ஆட்சிகளே தவிர புதிதாக, சொந்தமாக இந்த ஆட்சியாளர்களிடம் எதுவும் மிச்சமில்லை என்பதைத் தானே இது குறிக்கிறது! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா

# இலங்கையில் நடந்த முதலாவது உலகத் திரைப்பட விழா 2014

கடந்த இதழின் தொடர்ச்சி...



அ. யேசுராசா

**7. அன்னாவும் ரசூலும் இந்தியா (2013, 167 நிமிடம்)**



மலையாளப் படம். புனேயிலுள்ள இந்திய திரைப்பட தொலைக் காட்சிப்பயிற்சி நிறுவனத்தில், 1997இல் பயிற்சியை முடித்த ராஜீவ் ரவி இதன் நெறியாளராவார்.

வர்த்தகச் சரக்குக் கப்பலில் பணியாற்றும் அஷ்லியின் விபரிப்பில் கதை சொல்லப்படுகிறது. இரண்டாம் தடவை விடுமுறையில் கொச்சின் வரும் அவன், தனது முந்தைய வருகையின் போது நடந்தவற்றைச் சொல்கிறான். வைப்பீனில் அவனின் பக்கத்து வீட்டில் வசிக்கும் அன்னா என்ற கத்தோலிக்கப் பெண், புடைவைக் கடையில் வேலைபார்க்கிறாள்; நாள்தோறும் இயந்திரப்படகில் வேலைக்குச்செல்கிறாள். சுற்றுலா டாக்சிச் சாரதியான ரசூல், அவளின் அமைதியிலும் அழகிலும் மயங்கி, அவளைச் சுற்றித் திரிகிறான். ஒரு நாள் தனது காதலை அவளிடம் சொல்கிறான். அவள் தயங்கி மௌனமாகச் செல்கிறாள். பின்னொரு நாள், அது நடக்க முடியாதவொன்று எனச் சொல்கிறாள். ஆயினும் நாளடைவில் அவனை ஏற்கச் சம்மதிக்கிறாள். இடையில் ரசூலின் நண்பர்கள் அன்னாவின் தம்பியின் நண்பர்களுடன் சச்சரவில் ஈடுபட்டு அடிபிடிப்படுகின்றனர்; ரசூலும் சந்தர்ப்பவசத்தால் இவற்றில் சம்பந்தப்படுகிறான். அன்னாவுடனான உறவில் இது விரிசலைக் கொண்டுவருகிறது. பிரான்சிஸ் என்பவனுக்கு இரண்டாம் தாரமாக அன்னாவைத் திருமணம் செய்துவைக்க முயற்சி நடைபெறுகிறது; அன்னாவும் ரசூலும் ஓடிச்சென்று வேறோர் இடத்தில் வாழ்கின்றனர். ரசூலின் நண்பன் உஸ்மானின் மரணத்தில் சந்தேகப்பட்டு, நகரில்வைத்து பொலிஸார் ரசூலைக் கைதுசெய்து செல்கின்றனர். நடந்ததை அறியாது - ரசூலைக் காணாது அன்னா குழம்பியநிலையில், தம்பியும் பிரான்சிசும் வந்து அவளைப் பலாத்காரமாக வீட்டுக்கு இழுத்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்கின்றனர். திருமண ஏற்பாடுகள் நடக்கும்போது, அன்னா தற்கொலை செய்கிறாள். பொலிஸிலிருந்து தப்பிவரும் ரகுல், அன்னாவின் சடலத்தைக் கண்டு புலம்புகிறான். காதல் என்றால் அர்த்தம் மரணம்தான் என்ற அவலச் செய்தி உணர்த்தப்படுகிறது.

மனிதத்தன்மையற்ற மனிதர்மீதும் - சமூக நடைமுறைகள் மீதும் வெளிச்சம் பாய்ச்சப்படுகிறது. தான் மௌனமாக நேசித்த பெண்ணை (அன்னாவின் அக்கா; அவளது காதலன் ஏமாற்றியதில் கன்னியாஸ்திரியாக மாறினாள்) முன்பு இழந்த துயரில், அஷ்லி காதலர் இருவருக்கும் எப்போதும் உதவியாக இருக்கிறான்; அன்னாவின் மரணமும் ரகுலின் நிலையும் அவனை மேலும் பாதிக்கின்றன. ரகுல் வய்ப்பீனை நீங்கி ரயிலில் வெவ்வேறு இடங்களுக்குச் செல்கிறான். மூன்றாம் தடவை லீவில் வரும் அஷ்லி, தனது மனதில் மௌனமாய் வைத்திருந்த காதலை அன்னாவின் அக்காவுக்குத் தெரியப்படுத்துகிறான்; அவளும் துறவறத்தை விட்டு வந்து அவனை மணக்கிறாள்; இது கொஞ்சம் செயற்கை தான்!

உணர்வெழுச்சி தரும் அழகிய காதலும், சூழ்நிலைகளும், படகுப் பயணங்களும் காட்சிப்படுத்தலில் வித்தியாசமாயுள்ளன. அன்னா 'ரகுல்' அஷ்லி பாத்திரங்கள் (ஏனைய பாத்திரங்கள் பலவுங்கூட) நன்கு உருவாகியுள்ளன. மனிதர்மீது மனிதர் கொள்ளும் ஆணவ வெறுப்புக் கொண்டு வரும் தொடர்ந்த அவலம் பற்றிய புரிதலும் உணர்த்தப்படுகின்றது. ஒரு துன்பியல் காவியமாக முழுமைப்படவேண்டிய திரைப்படம், சில சமரசங் களால் (உதாரணம்: பாடல்கள், தெருச் சண்டைகள், தெருவில் கதாநாயகன் நீண்ட தூரம் ஓடுதல்) அவ்வாறில்லாமல் ஆகிறது.

திரைப்படம் முடிந்தபின் திரை அரங்கின் வெளியே சந்திக்கநேர்ந்த நெறியாளரிடம், இந்தச் சமரசங்கள் தவிர்க்கப்பட்டிருந்தால் ஆழமான படமாக மாறியிருக்கும் என்று சொன்னேன். அவர், வணிகரீதியில் பிரபலமாகும் சினிமா எடுக்கவேண்டுமென்றே இதை எடுத்ததாயும், இரசிகர்களிடம் நல்ல வரவேற்பு என்றும் சிரித்தபடி சொன்னார்.

## 8. Hanna Arendt ஜேர்மன் (2012, 113நிமிடம்)

புகழ்பெற்ற மார்கரெத்தா வொன் ட்றொற்றா நெறியாள்கை செய்த படம் இது; உண்மை வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது.

ஹன்னா அரென்ட், முக்கியமான அரசியல் கோட்பாட்டாளரும் தத்துவவாதியுமான ஜேர்மனிய யூதப் பெண்ணாவார்; கதையின்போது அமெரிக்காவில் வாழ்கிறார். 1961 இல், ஜேர்மன் நாஸி உயர் இராணுவ அதிகாரியான அடோல்வ் ஈச்மன் தென்னமெரிக்காவிலிருந்து மொசாட்டினால் கடத்தப்பட்டு, இஸ்ரேலுக்குக் கொண்டு வரப்படுகிறான்; 60 இலட்சம் யூத மக்களைக் கொலைசெய்ததற்காக, அவன்மீது நீதிமன்றில் விசாரணை நடைபெறுகிறது. இந்த விசாரணையை அவதானித்து நியூயோர்க்கர் இதழில் எழுதும்பொருட்டு, ஹன்னா அரென்ட் இஸ்




ரேல் வருகிறாள். தான் திட்டமிட்டு அந்தக் கொலைகளைச் செய்யவில்லை; தனக்கு வழங்கப்பட்ட கட்டளைகளையே நிறைவேற்றியதாகவும், எனவே தான் குற்றவாளியல்ல எனவும், ஈச்மன் தெரிவிக்கிறான். அமெரிக்கா திரும்பிய ஹன்னா விசாரணைக் குறிப்புகளை எல்லாம் ஆராய்ந்து, குற்றங்களுக்கு ஈச்மனைப் பொறுப்பாக்க முடியாதென நியூயோர்க்கரில் எழுதுகிறாள். ஈச்மன் சிந்திக்கவில்லை; சிந்தித்து முடிவெடுத்துச் செயற்படாதபோது, ஒருவனை அவனது செயல்களுக்குப் பொறுப்பாக்க முடியாது என, அவள் கருதுகிறாள். மாணவப் பருவத்தின்போது அவளது தத்துவ ஆசானான மார்ட்டின் ஹைடெக்கரிடம் பெற்ற சிந்தனைத் தாக்கமும், இங்கு ஒத்துப்போகிறது. ஹன்னாவைப் பலரும் விமர்சிக்கின்றனர்; தொலைபேசியிலும் ஏசுகின்றனர். யூத சமூகத்தில் கடும் எதிர்ப்புக் காட்டப்படுகிறது. நாஸி விபசாரி என ஒருவன் ஏசுகிறான். அவளது நண்பியான நாவலாசிரியை மேரி மக்கார்த்தி, நாஸிகளை ஏற்றுக் கொண்டவரான மார்ட்டின் ஹைடெக்கருடன் முன்பு அவளுக்கிருந்த காதல் தொடர்பையும் சுட்டிக்காட்டுகிறாள். தான் பலரிடமிருந்தும் தனிமைப்படுவதை ஹன்னா உணர்கிறாள். ஆனால், தனது நிலைப்பாட்டில் நின்று கொள்ளும் அவள், தான் தவறாகப் புரிந்துகொள்ளப்படுவதாகச் சொல்கிறாள்.

படத்தில் ஹன்னாவினது வாழ்வின் முக்கிய சம்பவங்கள் வருகின்றன; முக்கிய நபர்களான மார்ட்டின் ஹைடெக்கர், நாவலாசிரியை மேரி மக்கார்த்தி, நியூயோர்க்கர் இதழின் ஆசிரியர் வில்லியம் ஷான் ஆகியோர் பாத்திரங்களாக வருகின்றனர். ஈச்மனின் விசாரணையின்போதான உண்மைப் பதிவுக் காட்சிகளும், நாஸி இனப்படுகொலையில் தப்பிய உண்மை மனிதர்கள் சிலரதும் வழக்குத் தொடுநரதும் கருத்துகளும், படத்தில் இணைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டுள்ளன. ஹன்னா பாத்திரத்தில் நடித்த பார்பரா சுக்கோவா, சிறந்த நடிகைக்கான பவேரியன் திரைப்பட விருதைப் பெற்றுள்ளார். வேறு சில திரைப்பட விழாக்க ளிலும் இவரது நடிப்பு கௌரவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## 9. Liars Dice இந்தியா (2014, 104 நிமிடம்)



கீதா மோகன்தாஸ் நெறியாள்கை செய்துள்ளார். இவர், அன்னாவும் ரசூலும் திரைப்படத்தின் நெறியாளரான ராஜீவ் ரவியின் மனைவியாவார்.

ஆரம்பத்தில் கதை சிம்லாவில் தொடங்குகிறது. சிற்குல் கிராமத்திலுள்ள கமலா என்னும் பெண், ஆறு மாதங்களாகத் தொடர்பில் இல்லாத கணவனைத் தேடி, மூன்று வயதுச் சிறுமியான மகள் மன்யாவுடன் டில்லி செல்கிறாள்; பலவகைக் கஷ்டங்களை அனுபவிக்கிறாள். இடையில், இராணுவத்திலிருந்து விலகிய நவாசுடீனைச் சந்திக்கிறாள். அவன் ஒரு நாடோடியும் சூதாடியுமா வான். அவனுடன் இடைக்கிடை முரண்பாடுகள் ஏற்பட் டாலும், அவனது உதவி அவளுக்குக் கிடைக்கிறது. இறு தியில், அவன் கொண்டுவரும் கணவனது பயணப் பையின்மூலமும், அவற்றிலுள்ள பொருள்களின்மூல மும் கணவன் இறந்துவிட்டமை தெரியவருகிறது; அவள் புலம்பி அழுகிறாள்.

ஆரம்பத்தில் படம் சிறிது ஏமாற்றம். காட்சிகள் இயல் பற்றும் முதிர்ச்சியற்றும் இருந்தன. ஆனால், பிறகு படம் நன்கு வளர்கிறது; காட்சிகளும் மனதில் பதிகின்றன. பெண்ணின் துயர்நிலை அனுதாபத்தை எழுப்புகின்றது; சூதாடியின் உதவும் பண்பும் மனதைக் கவர்கிறது!

சிறந்த ஒளிப்பதிவுக்கான இந்திய தேசிய விருது இத் திரைப்படத்துக்கு வழங்கப்பட்டுள்ளது; அதைப்போல, கமலா பாத்திரத்தில் நடித்த கீதாஞ்சலி தபாவுக்கு, சிறந்த நடிகைக்கான தேசிய விருதும் கிடைத்துள்ளது.

## 10. Fandry இந்தியா (2013, 101 நிமிடம்)

மராத்தி மொழிப் படம். நாகராஜ் மஞ்சுளே இதை நெறி யாள்கை செய்துள்ளார். மராத்தியில் ஃவன்றி எனப்படு வது, தமிழில் பன்றியையே குறிக்கிறது!

தலித் சமூக மனிதர்களைப் பற்றியது. பாடசாலைச் சிறு வனான - சுமார் 15 வயதுச் சிறுவனான ஜப்யா கதாநாய கன். தன்னுடன் பாடசாலையில் படிக்கும் உயர்சாதிப் பெண்ணைக் காதலிக்கிறான்; அரிதான கருங் குருவியின் சாம்பலின்மூலம் நினைத்த அக்காரியம் நடக்கும் என்ற நம்பிக்கையில், அதைப் பிடிக்கவும் கெற்றப்போலுடன் முயன்றபடியுள்ளான். ஓர்உயர்சாதி மாணவன் இவ னைத் துன்புறுத்துகிறான். கோவில் திருவிழாவில் சுவாமி ஊர்வலம் வருகையில், இடையில் புகுந்த பன்றியினால் சுவாமியின் பாடை முறிந்து விழுகிறது; குழப்பமேற்படு கிறது. இது நல்லதல்ல என்பதால், குறித்த பன்றியைப் பிடித்து அகற்றும்படி, ஓர் உயர்சாதிப் பேர்வழி ஜப்யா வின் தகப்பனுக்குக் கட்டளை இடுகிறான். முதிய தகப் பன், முதிய தாய், மகள், ஜப்யா ஆகியோர் பன்றியைப் பிடிக்கக் கஷ்டப்படுகின்றனர்; ஊரே கூடி வேடிக்கை பார்க்கிறது. ஜப்யா விரும்பும் பெண்ணும் பாடசாலை மாணவர்களுங்கூட, குழுமி நின்று வேடிக்கை பார்க்கின் றனர்; அவமானத்திலும் தாழ்வுணர்ச்சியிலும் ஜப்யா குறு கிப் போகிறான். அவன் ஒதுங்கி ஒளிவதைத் தகப்பன் கண்டிக்கிறான். சாதித் தடிப்புள்ள வளர்ந்த இளைஞர்க ளின் தொடர்ந்த கேலிகளைக்கண்டு ஆத்திரமடையும் ஜப்யா, கற்களைக் கொண்டு அவர்களைத் தாக்குகிறான்; அவர்களும் தாக்க முயலும்போது மேலும் அவன் மூர்க் கமாகக் கற்களால் தாக்கவே, அவர்கள் தயங்கிப் பின் வாங்குகின்றனர். இதுவரைகாலமும் அடக்கிவைக்கப் பட்ட தலித் மக்களின் ஆத்திரம் ஒரு குறியீடுபோல ஜப்யாவின் வழியாக வெளிப்படுகின்றமை, தாக்குவலுக் கொண்டதாக அமைகின்றது!



திரைப்படம் முடிந்தபின் திரையரங்கில் நடைபெற்ற இரசிகர்களுடனான கலந்துரையாடலின்போது, தனது சொந்த அனுபவங்களை வைத்தே, ஒடுக்கப்படும் தலித் மக்கள் பற்றிய இத்திரைப்படத்தை உருவாக்கியதாக, நெறியாளர் தெரிவித்தார். ஆனால், தலித் மக்களின் ஒடுக் கப்பட்ட - இழிவான வாழ்க்கை நிலைமைகள், விரிவா கவும் நன்கும் சித்திரிக்கப்படவில்லை. ஊரில் மற்றவர்க ளைப் போலவே அவர்களும் வாழ்கிறார்கள்; பாடசாலையில் சேர்ந்தே கற்கிறார்கள்; திருவிழாவின் போது வேறுபாடேதும் இன்றி சேர்ந்தே ஆடிப் பாடுகி றார்கள். பதினைந்து வயது ஜப்யாவின் காதல், முதிரா மனோரதியக் காதல்; அதனை வகைமாதிரியான ஒடுக்கு முறைக்கு உரியதாகக் கருத முடியாது. உச்சாலியா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனார்யா முதலிய மராத்தியத் தன் வரலாற்று நூல்களில், தலித் மக்களின் இழிந்த வாழ்வும் சுரண்டல் கொடுமைகளும் ஆழமாக வெளிப்படுவது போல் இத்திரைப்படத்தில் வெளிப்படாமைக்கு, திரைச்சுவடியின் பலவீனமே காரணம். தமிழகத்தைச் சேர்ந்த சிலரின் தமிழ் இணையப் பக்கங்களில் இப்படம் பற்றிவந்த கட்டுரைகள் பலவும், மிகை மதிப்பீட்டைக் கொண்டுள்ளதாகவே எனக்குத் தோன்றுகிறது!

முதல் திரைப்படத்துக்காக வழங்கப்படும் இந்திரா காந்தி விருதும், இப்படத்துக்காக நெறியாளருக்கு வழங்கப்பட்டுள்ளது!

**11. In Bloom** ஜோர்ஜியா (2014, 102 நிமிடம்)



நானா எக்விமிஷ்பில், சிமோன் கிறப் ஆகிய இருவர் இணைந்து, இதனை நெறியாள்கை செய்துள்ளனர்.

ஜோர்ஜியாவிலுள்ள அப்காஷியா மாகாணத்தில், 1992 இல் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின்போது கதை நிகழ்கிறது. பதினான்கு வயதான நதியா, எக்கா ஆகிய இரண்டு தோழிகள் முக்கிய பாத்திரங்கள். வன்முறைச் சூழல் இவர்களிடமும் எதிர்ப்புணர்வைத் தோற்றுவிக்கிறது. பாண் வரிசையில் நிகழும் ஒழுங்கீனத்தையும் சிற்றூர்தியில் ஒரு பெண் கடத்தப்படுவதையும் யாருமே எதிர்க்காதபோது, எக்கா மட்டுமே கோபத்துடன் குரல் எழுப்புகிறாள். நதியா குடிகாரத் தகப்பனுடனும் தாயுடனும் முரண்படுகிறாள். குழு வன்முறையில் நதியாவின் காதலன் கொல்லப்படுகிறான். சிறுமிப் பருவத்திலிரு ந்து மலர்ந்து, முதிர்ச்சியான அடுத்த பருவத்துக்கு அவர்கள் மாறுகின்றனர்.

இன்னும் சில படங்களைப் பற்றிய சிறு குறிப்புகள் வருமாறு:

**12. Land of Plenty** என்ற ஆர்ஜன்ரீனா படத்தை (2014, 108 நிமிடம்), லிசன்ட்றோ அலோன்சோ என்பவர் நெறியாள்கை செய்துள்ளார். டென்மார்க்கிலிருந்து பற்றக்கோனியா வரும் கப்ரன் கன்னர் டிசென்னுடைய மகள், சாதாரண போர்வீரனுடன் ஓடிவிடுகிறாள். அவர் எதிரியின் நிலப்பகுதிக்குள் செல்கிறார். அங்கு குகையொன்றினுள் காணும் பெண்ணின் கனவுக்குள், கதை மேலும் விரிகிறது. புரிதலில் சிக்கல் கொண்ட படம்.

**13. Still Life** என்னும் ஆங்கிலப் படத்தை (2012, 87 நிமிடம்), உபேற்றோ பசோலினி நெறியாள்கை செய்துள்ளார். அநாதரவாக இறந்து போகின்றவர்களின் உறவினரைக் கண்டுபிடித்து, அவர்களின் உடைமைகளைச் சேர்ப்பிக்கும் பணியில், 22 ஆண்டுகளாக ஈடுபட்டு வருபவர் ஜோண் மே. அண்மையில் இறந்த பில்லி ஸ்ரோக்கின் விபரங்களை அறிந்து உறவினரைத் தேடும்போது, அவரது மகளான கெல்லியைச் சந்திக்கிறார். இருவரிடையே நேசம் மலர்கிறது. அவரது ஒரேவகையான வாழ்வில் பெரிய மாறுதல். ஆனால், விரைவில் விபத்தொன்றில் நடுவீதியில் இறந்து விடுகிறார். ஆயினும், மனித நேசப் பணியாற்றிய அவரது வாழ்வு நிலைக்கிறது! ஆங்கிலத் துணைத் தலைப்புகள் இருந்திருந்தால், ஆங்கில உரையாடல்களைப் புரிந்து இன்னும் சிறப்பாக இரசித்திருக்கலாம்.

பாரிஸில் வசிக்கும் நாத்திகரான ஈரானிய நெறியாளர் மெஹ்ரான் ரமடான், Iranian (2014, 105 நிமிடம்) என்ற விவரணப்படத்தை உருவாக்கியுள்ளார். ஈரானிலுள்ள நான்கு இஸ்லாமிய மார்க்க அறிஞர்களை (முல்லாக்கள்) அழைத்து, வார இறுதி நாளொன்றில் தனது பாரம்பரிய வீட்டில் தங்கவைத்து உரையாடியுள்ளார். கருக்கலைப்பு, பர்தா அணிதல், மதச்சார்பற்ற சமூகம், ஊடக சுதந்திரம் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி அவர்களுடன் விவாதிக்கிறார்; அவர்கள் அடிப்படைவாதக் கருத்துகளையே வெளிப்படுத்துகிறார்கள். கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அங்கேயே தனி அறையில் தங்கி, உணவு தயாரித்து, சிரித்துப் பழகி, தனியாகத் தொழுகைசெய்து பிரிகிறார்கள். இதனை ஒரு பரிசோதனையாகக் கையாண்டதாக நெறியாளர் கூறுகிறார். சுவாரசியமான படமாக உள்ளது!

**14. Frangipani** (2013, 90 நிமிடம்) என்ற சிங்களப் படத்தை, அவுஸ்திரேலியாவில் வசிக்கும் விசாகேச சந்திரசேகரம் என்ற தமிழர் நெறியாள்கை செய்திருந்தார். இரண்டு இளைஞர்களிடையேயான ஒருபாலுறவைச்சித்திரிக்கும் படம். அவர்களில் ஒருவன் ஒரு பெண்ணையும் காதலிக்கிறான்; ஆனால், மற்றவன்தான் அவளை மணம் புரிகிறான்! சித்திரிப்பில் செயற்கைத் தன்மை இருந்தது; நல்ல திரைச் சட்டகங்களும் இல்லை. இதனால் இப்படம் மனதைக் கவரவில்லை.

பிரசன்ன ஜெயக்கொடியின் நெறியாள்கையில் 28 (2013, 99 நிமிடம்.)என்னும் தலைப்பிலான சிங்களப் படம் உருவாக்கப்பட்டுள்ளது. வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொலைசெய்யப்பட்ட ஒரு பெண்ணின் சடலத்தை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பதினைந்து ஆண்டுகளுக்கு முன் தன்னை விட்டுச் சென்ற மனைவி என அபயசிறி அடையாளம் காண்கிறான். மனைவி விபச்சாரியாக வாழ்ந்திருக்கிறாள். சடலத்தை மலைநாட்டிலுள்ள ஊருக்கு எடுத்துச் செல்லப் போதிய பணம் இல்லாததால், வெற்றுச் சவப்பெட்டி எனப் பொய்கூறி, ஐஸ்கிறீம் வாகனமொன்றில் இன்னொரு நண்பனுடன் எடுத்துச் செல்கிறான். வழியில் சில அசம்பாவிதங்கள் நிகழ்கின்றன. சாரதியுடன் கேலியான உரையாடல்கள் நடக்கின்றன. சந்தன ஜெயசிங்கவின் ஒளிப்பதிவு சிறப்பாக இருக்கிறது; நெறியாளரும் சங்கார என்ற திரைப்படத்தின்மூலம் ஏற்கெனவே புகழ் பெற்றவர்தான். அபயசிறியாக வரும் மகேந்திர பெரேராவின் நடிப்பும் நன்றாகவுள்ளது. ஆயினும், செயற்கைத்தனமான படைப்பு என்ற உணர்வு என்னுள்; வெளிநாட்டவரைக் கவர வித்தியாசமாகச் செய்ய முயல்கிறார்களோ என்னவோ!

முதன்முறையாக உலகத் திரைப்பட விழாவொன்று இலங்கையில் நடத்தப்பட்டிருக்கின்றது. மிக நல்ல படங்கள் பெருமளவில் காட்டப்பட்டன; அவையும் இலவசமாகக் காட்டப்பட்டன. டெய்லி நியூஸ் ஆங்கிலப் பத்திரிகையில் வந்த தனது நேர்காணலில், இந்தியாவைச் சேர்ந்த மீனாக்ஷி ஷெட்டி, கொழும்பு உலகத் திரைப்பட விழா, மிகவும் ஜனநாயகப் பண்புடன் நடத்தப்பட்டது. சமூகத்தின் எல்லாப் பிரிவுகளையும் சேர்ந்த திரைப்பட ஆர்வலருக்கு இலவசமாகப் பார்க்கும் வாய்ப்பை வழங்கியது; பொதுவாகத் திரைப்பட விழாக்களில் இலவசத் திரையிடல் இருப்பதில்லை! எனக் கூறியிருப்பதும் கவனத்துக்குரியது. அண்மைக் காலங்களில் உலகெங்கிலும் வெளிவந்த படங்களே இவை என்பதும் முக்கியமானது. விழா ஒழுங்கமைப்புகள் சிறப்பாக இருந்தன. இளைஞர்களும் இளம் பெண்களும் தொண்டர்களாகச் செயற்பட்டனர். பிரசன்ன விதானகே தலைமையிலான இலங்கைத் திரைப்பட நெறியாளர் கழகத்துக்கு, திரைப்பட ஆர்வலர்கள் எல்லோரும் நன்றி சொல்லக் கடமைப் பட்டவர்கள். நமது மூத்த திரைப்பட விமர்சகரான கே. எஸ். சிவகுமாரன் அவர்கள், இனிமேல் அதிக செலவு செய்து கேரள உலகத் திரைப்பட விழாவுக்குச் செல்லத் தேவையில்லை. இனி இங்கேயே ஆண்டுதோறும் நல்ல திரைப் படங்களைப் பார்க்கலாம் என, என்னிடம் கூறி திருப்திப்பட்டுக் கொண்டார்.

உண்மைதான்....! அடுத்த ஆண்டுக்குரிய உலகத் திரைப்பட விழாவை இப்போதே ஆவலுடன் நான் எதிர் நோக்குகிறேன்! ■

**முற்றும்**

---

(41ஆம் பக்கத் தொடர்ச்சி...

பலஸ்தீனியர்கள் உபயோகிக்கின்றனர். சுரங்கப்பாதைகள், ஆயுதங்கள், வெடி பொருட்கள் என்பனவற்றின் பரிமாற்றத்தால் பேணப்படுகின்றன. ஆதலால் சுரங்கப் பாதைகளை அழிப்பதற்கான சிறந்த உபாயம் பொருளாதாரத் தடையை நீக்குவதாகும். இதனால் காஸாவின் பொருளாதாரம் மீண்டு எழுச்சி பெறும். பலஸ்தீனிய இளைஞர்களுக்கு தீவிரவாத இஸ்லாத்தை விட வேறு வாய்ப்புகள், தேவைகள் கிடைக்கும். இன்று காஸாவின் சனத்தொகையின் அரைப் பங்கினர் வேலையற்றோர் ஆவர். காஸாவை மீளக்கட்டியெழுப்ப வேண்டும். அங்குள்ள பண்ணைகளுக்கும் தொழிற்பட்டறைகளுக்கும் சந்தை வாய்ப்பு வேண்டும். மக்கள் தடையின்றிப் போக்குவரத்தில் ஈடுபட அனுமதிக்க வேண்டும். இவை பற்றிச் சொல்வது எளிது, செய்து காட்டுவது இலகுவான பணியன்று. ஆயினும் காஸாவில் நிலைபேறுடைய சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு வேறு வழிகள் இல்லை.

ஆயினும் இன்றும்கூட இஸ்ரேலும் ஹமாஸும் இராணுவ வெற்றி பற்றிக் கனவு காண்கின்றன. இந்த மாயையினால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் காஸாவின் மக்களே. அங்கு மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த பலஸ்தீனியர்கள் அவல வாழ்க்கையில் சிக்குண்டுள்ளனர். முதலாவது தலைமுறை (1948-67) துக்கம் கொண்டாடியது. இரண்டாவது தலைமுறை (1967-87) அடிமைத்தனத்தை ஏற்றுக்கொண்டது. மூன்றாவது தலைமுறை (1987 முதல் இன்றுவரை) 'இன்டிபதா' கிளர்ச்சியாளர் தலைமுறையாகும். இறங்குமுகமான இந்த வீழ்ச்சிப் பாதையில் இருந்து மீள்வதாயின் ஒஸ்லோ உடன்படிக்கையின் தத்துவங்களில் ஒன்றான 'முதல்படி காஸா' (GAZA FIRST) என்பதில் உறுதியாக இருத்தல் வேண்டும். இஸ்ரேலுக்கும் - பலஸ்தீனத்திற்கும் இடையில் சமாதானம் ஏற்பட வேண்டுமானால் காஸாவில் தான் அதற்கான அத்திபாரம் இடப்படவேண்டும். சமாதானத்தின் திறவுகோல் அதுதான். ■

***JEAN- PIERRE FILIU பிரான்ஸின் இராஜதந்திர தூதுவர் சேவை அதிகாரியாக பணியாற்றியவர். இப்பொழுது SCIENCES PO என்ற சர்வதேச விவகார பாரிஸ் கல்லூரியில் மத்திய கிழக்கு கற்கைகள் துறையில் பல்கலைக்கழகப் பேராசிரியராக உள்ளார். காஸாவின் வரலாறு (GAZA – A HISTORY) என்ற இவரின் நூல் விரைவில் வெளிவரவுள்ளது.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(55ஆம் பக்கம் பார்க்க...)*

பாட்டனார் சுல்பிகார் அலி பூட்டே டாவினதும் தாயார் பெனாசீர் பூட்டே டாவினதும் ஆன்மாக்களுக்கு மறு அவதாரம் கொடுக்க பூட்டோ சர்தாரி முயற்சிக்கின்றார் போலத் தோன்றுகிறது.

மேடையில் ஏறியபோது 'நான் பூட்டோ' என்று அவர் மக்கள் கூட்டத்தில் பார்த்துக் கூறினார். பாட்டனாரினதும் தாயாரினதும் உருவ ஒற்றுமைகளை பெருமளவுக்குக் கொண்ட பூட்டோ சர்தாரி தனது பேச்சில் அவர்கள் இருவரினதும் பேச்சாற்றல் பாணியை பின்பற்றுவதில் நாட்டம் கொண்டிருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. பேரணியில் சுமார் ஒரு இலட்சம் மக்கள் கலந்துகொண்டார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் சிந்து மாகாணத்தின் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்களாகவே இருந்தார்கள். பொலிஸார் தெரிவித்த தகவல்களின்படி சுமார் 22,500 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டார்கள். கராச்சிநகரில் அன்றைய தினம் பொதுவிடுமுறைப் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது. ஆனால், பேரணியின் ஏற்பாட்டாளர்கள் எதிர்பார்த்த அளவுக்கு மக்கள் வெள்ளம் அலைமோதவில்லை. குறிப்பாக கராச்சி நகர மக்கள் பேரணியில் பங்கேற்பதில் அவ்வளவாக ஆர்வம் காட்டியதாகத் தெரியவில்லை. பூட்டோ சர்தாரி உரையாற்றிக்கொண்டிருக்கும் போது இடைநடுவில் பெருமளவு மக்கள் மைதானத்தைவிட்டு வெளியேறியதைக் காணமுடிந்ததாக அவதானிகள் கூறுகிறார்கள்.

தனது கட்சியை மூழ்கடிப்பதற்காகவே அரசியல் எதிரிகள் ஊழல் குற்றச்சாட்டுகளை பயன்படுத்துகிறார்கள் என்று பூட்டோ சர்தாரி தனதுரையில் குறிப்பிட்டார். 'மக்களே, உங்களுக்கு நாம் சேவை செய்வதைத்தடுப்பதற்கே ஊழல் மோசடிகள் பற்றிய சுலோகங்கள் பயன்படுத்தப்படுகின்றன' என்று கூட்டத்தினரைப் பார்த்து அவர் கூறினார். தன்னை ஒரு தலைவராகக் காட்டுவதற்கு அவர் மேற்கொள்கின்ற முயற்சிகளும் 'பூட்டோயிஸம் மாத்திரமே பாகிஸ்தானைக் காப்பாற்றும்' என்று அடிக்கடி அவர் கூறும் கருத்தும் அரசியல் அவதானிகள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை.

## பூட்டோயிஸமும் பாகிஸ்தானும்

'பூட்டோ சர்தாரியின் பேச்சு கடந்த காலத்திலேயே தோய்ந்திருந்தது' என்று பாகிஸ்தானின் முன்னணி ஆங்கிலத் தினசரியான Dawn இன் ஒரு ஆசிரியரான சிறில் அல்மெய்டா கூறினார். 'பூட்டோயிஸத்தைப் பற்றி புதிய தலைமுறைக்கு எந்த அக்கறையுமில்லை. இம்ரான் கானின் ஆர்வமிக்க ஆதரவாளர்களினால் பாகிஸ்தான் மக்கள் கட்சி மங்கவைக் கப்பட்டுக் கொண்டிருக்கிறது' என்று பிரபல அரசியல் அவதானியான நஜாம் சேத்தி கூறினார்.

நவாஸ் ஷெரீப்புக்கும் இம்ரான் கானுக்கும் பிலாவால் விடுக்கும் அச்சுறுத்தல் பெருமளவுக்கு அடையாளபூர்வமானதே, அதை ஒரு உண்மையான அச்சுறுத்தலாக மாற்றவேண்டுமானால், பிலாவால் பாகிஸ்தான் மக்கள் கட்சியை இந்து மாகாணத்தில் மேலும் குறிப்பாக பஞ்சாப் மாகாணத்தில் பலம் பொருந்தியதாகக் கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும் என்று இஸ்லாமாபாத்தைச் சேர்ந்த அரசியல் ஆய்வாளர் முஷாரப் செய்டி தெரிவித்தார்.

பாகிஸ்தான் அரசியலின் அண்மைக்கால நிகழ்வுப் போக்குகள் காரணமாக பெரும் நம்பிக்கை கொண்டவராக மாறியிருக்கும் இம்ரான்கான், பூட்டோக்களின் சொந்த நகரமான (சிந்துமாகாணத்தின்) லர்கானாவில் இம்மாதம் தனது கட்சியின் பேரணியொன்றை நடத்தப்போவதாக அறிவித்திருக்கிறார். கராச்சிப் பேரணியில் பூட்டோ சர்தாரி நிகழ்த்திய உரை குறித்து கருத்துத் தெரிவிக்க மறுத்த இம்ரான் கான் 'பிலாவால் ஒரு குட்டி' என்று ஏளனம் செய்தார்.

தற்போது பெருமளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்த முடியாத ஒரு கட்சியாக பாகிஸ்தான் மக்கள் கட்சி மாறியிருக்கும் நிலையில், இம்ரான் கானே பிரதமர் ஷெரீபுக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடியவராக விளங்குகிறார். அவதானிகளின் அபிப்பிராயப்படி எதிரணியின் செல்வாக்கு அதிகரித்து வருவதைத் தடுப்பதற்கு எதையுமே செய்ய முடியாதவராக ஷெரீப் இருக்கிறார். எதிரணியை 'ஒரு சில ஆயிரம் பேர்' என்று பகிரங்கத்தில் அலட்சியத்தொனியில் கூறும் ஷெரீப் புதிதாக தேர்தலை நடத்த வேண்டுமென்ற கோரிக்கைகளை நிராகரித்திருக்கிறார்.

'இந்த அரசியல் அலை நாளடைவில் தானாகவே தணிந்துபோய்விடுமென்ற நம்பிக்கையில் நவாஸ் ஷெரீப் இன்னமும் இருக்கிறார்' என்று அரசியல் பத்தி எழுத்தாளரும் ARY தொலைக்காட்சி சேவையில் அரசியல் கருத்துமேடை நிகழ்வை நடத்துபவருமான மொயீத் பிர்சாடா தெரிவித்தார். நாட்டு மக்கள் மத்தியில் வளர்ந்து வருகின்ற மனநிலை விரைவாக ஒரு தேர்தலை நடத்துவது குறித்துச் சிந்திக்க நவாஸ் ஷெரீப்பை நிர்ப்பந்திக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால், சேத்தி சற்று வேறுபட்ட விளக்கம் ஒன்றைத் தருகிறார். 'பலம்பொருந்திய பாகிஸ்தான் இராணுவம் அரசியல் எதிரணியை வெளிப்படையாக ஆதரிக்காதபட்சத்தில், அரசாங்கத்துக்கு மெய்யான அச்சுறுத்தல் எதுவும் இல்லை. இம்ரான்கானின் செல்வாக்கு அதிகரித்து வருகின்ற போதிலும்கூட, இராணுவம் வகுக்கக்கூடிய நிலைப்பாடே நிலைவரங்களில் பெரிய மாற்றத்தைக் கொண்டுவரும். இராணுவம் நேரடியாக தலையீடு செய்யாவிட்டால், நவாஸ் ஷெரீபும் பெரிதாகவிட்டுக் கொடுப்புகளைச் செய்யப்போவதில்லை. இன்று இம்ரான் கான் தடுத்துநிறுத்தப்பட முடியாதவராகத் தோன்றுகிறார். ஆனால், நவாஸ் ஷெரீப் தனது பதவிக்காலம் முழுவதும் ஆட்சியில் நீடிப்பாரேயானால், அரசியல் போட்டி மிகவும் கடுமையானதாக இருக்கும்'. ■

*(சல்மான் மசூத் - நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையின் பாகிஸ்தான் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசிப் பக்கம்

# சமூகவிஞ்ஞான ஆய்வுகளின் விரிவாக்கத்தின் அவசியம்

ஈழத்து தமிழ்க்கல்விச் சூழலில் விஞ்ஞானத் துறைகள் வளர்ச்சி பெற்ற அளவிற்கு சமூக விஞ்ஞானத்துறைகள் வளர்ச்சி பெறவில்லை. இந்த விஞ்ஞான துறையினரில் பெரும்பாலானோர் தங்கள் சமூகத்துடன், சமூக விஞ்ஞான துறைகளுடன் ஊடாடக் கூடியவர்கள் ஒரு சிலர் தான். சமூக விஞ்ஞான கற்கைப் புலத்தை ஒரு துறையாக மேற்கொள்பவர்களின் எண்ணிக்கை சமீப காலமாக அதிகரித்து வருகின்றது. சமூக விஞ்ஞான துறைபோன புலமையாளர்கள், சமூக இயங்கியலாளர்கள் நம்மிடையே மிகக்குறைவானவர்களே உள்ளனர். 1980இல் இருந்து இற்றை வரை இது ஒரு தெளிவான விடயமாகவே உள்ளது.



மா.மோகனகிருஷ்ணன்

இவை தொடர்பில் இங்கு சாத்தியமான பல கேள்விகள் எழுகின்றன. வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் உயர்கல்வி நிறுவனங்கள் இருந்த போதிலும் இதனை அடியொற்றி புலமையாளர் மரபொன்று இன்னும் முழுமையாக வீச்சாக வெளிவராமைக்கான காரணங்கள் யாவை? இப்பிராந்தியத்தில் மூன்று தசாப்த காலம் இடம் பெற்ற போர் தான் காரணமா? தேசிய இனவிடு தலைப் போராட்டத்தில் சமூக அக்கறையும் ஆளுமையும் கொண்ட இளைஞர் யுவதிகள் பங்கெடுத்தமை தான் இந்த இடைவெளிக்குக் காரணமா? சிலர் சொல்வதனைப் போன்று பல்கலைக்கழகங்கள் புலமையாளர் மரபை உருவாக்கியுள்ளதென நாம் கருதுவோமாயின் பிராந்திய ரீதியில் உயர்நிலை ஆய்வுகள் அதிகம் வெளிவராமைக்கான காரணம் தான் என்ன? ஒரு தேசிய இனத்தின் சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் வரலாறு சார்ந்த சமூக விஞ்ஞான ஆய்வுகள் வெளிவருவதற்கான தேவைகள் இங்கு இருக்கவில்லையா? போருக்குப் பின்னரான இன்றைய நிலையில் கூட சீரழிந்து போன பொருளாதார கட்டுமானங்கள், அழிந்த சொத்துகள், குடித்தொகை மாற்றங்கள், இயற்கை வளங்கள் பாதிப்பு, சமூக உளவியற் பிரச்சினைகள் முதலியவை சார்ந்த விரிநிலை ஆய்வுகள், ஆய்வு முடிவுகள் ஏன் நம்மத்தியில் வெளிக்கொணரப்படவில்லை?. பல்கலைக்கழகத்தினர் ஓர் இனத்தின்-சமூகத்தின் பிரதிநிதிகள் என்பதனை மறந்து இச்சமூகத்துடன் இணைவு பெற முடியாத முரண்மன நிலையில் உள்ளார்களா? இதுபோன்ற காரணிகள் தொடர்பில் ஆழமான திறந்த உரையாடல் நம்மத்தியில் இடம்பெற வேண்டும்.

தமிழ்ப் பிரதேசங்களில் பிராந்தியப் பல்கலைக் கழகங்கள் உருவான போது சமூக விஞ்ஞானத்திற்கும் சமூகத்திற்குமான இடைவெளி சுருங்கிவருகின்றது. தாய்மொழியில் கிராமிய அபிவிருத்தி சார்ந்த உயர் ஆய்வுகள் வெளிவரவேண்டும். நவீன சமூக விஞ்ஞானத்தை தாய்மொழியில் எடுத்துரைக்கத்தக்க கலைச்சொல்லாக்கங்கள் பெருக வேண்டும். இவைகள் தமிழ்ப்பிராந்திய பல்கலைக் கழகங்களில் முரண்நகையாகவே அமைந்துள்ளன.

சமகாலத்தில் துறைசார்ந்து வெளிப்பட்ட சில விடயங்களை இங்கு கூறுவது பொருத்தமாக இருக்கும். கடந்தமாதம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக புவியியற்துறையினரால் 'பிராந்தியத்திட்டமிடல்' சஞ்சிகை வெளியிடப்பட்டது. இதில் நகரத் திட்டமிடல் தொடர்பான கோட்பாடுகள், எண்ணக் கருக்கள், பிரயோகங்கள் மட்டுமே இடம்பெற்றன. எமது பிரதேசத்துக்குப் பொருத்தமான கிராமிய அபிவிருத்தி அதற்கான திட்டமிடல் தந்திரோபாயங்கள் சார்ந்த ஒரு கட்டுரையேனும் காணப்படவில்லை. இது குறித்த விரிவுரையாளர்களின் பிரதேச அபிவிருத்தி சார்ந்த புரிதல் இன்மைக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு. அடுத்து வன்னி பிரதேசத்தின் ஆவண நூல் ஒன்று 'வன்னி : வரலாறும் பண்பாடும்' எனும் பெயரில் வெளிவந்துள்ளது. இதில் புவியியற் பேராசிரியர்கள் சிலரது துறைசார் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இந்தக்கட்டுரைகள் எவ்வித பிரதேச புவியியல் ரீதியான ஆய்வு நிலையோ நோக்கு நிலையோ இன்றி எழுதப்பட்டுள்ளன. இக் கட்டுரைகளில் இழையோடும் பலவீனம் இவர்களின் புலமை தொடர்பாக மீண்டும் பல கேள்விகளை எழுப்புகிறது.

ஏனைய பகுதிகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் இருக்கும் தமிழ்ப்புலமையாளர்களை புலமைத் துவ நோக்கில் அங்கீகரிக்க முடியாதவர்களாகவும் உள்ளோம். இவர்களுக்கு உரிய களங்களை அமைத்துக் கொடுத்து சமூக விஞ்ஞான துறைகளை வளர்க்க நமது புலமையாளர்கள் தயங்குகின்றனர். இதற்கு இவர்களது 'இருப்பியல்' சார்ந்த

(53ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அபிமான சமகாலம் இப்பொழுது உங்கள்
Tablet மற்றும் Android phone களில்




இப்பொழுதே Download செய்யுங்கள்!

Available on
play.google.com

Available on
www.magzter.com

Feedback and comments : samakalam@expressnewspapers.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Rainbow Stationers (Pvt) Ltd.

*Join the Largest Stationery House...*




- All Models of Computer printer Ribbons
- Electronic Typewriter Ribbons
- Inkjet Cartridges
- Inkjet Refills
- Laser Printer Toners
- Digital Duplicating Inks
- Black & Colour
- Digital Stencil Master Rolls
- Photocopy Papers
- Roneo Papers
- Toner For any copies
- Computer Accessories & Papers
- Fax Papers
- Fax Ink Film Rolls & Cartridges Paper
- Board Packing Materials
- All types of Office Stationery

# Rainbow Stationers (Pvt) Ltd.

**IMPORTERS DEALERS IN PAPER & STATIONERY**

**52, Reclamation Road, (Sea Beach Road), Colombo - 11**

**Voice: +94 11 2433906, 2433907, 2433908**

**Direct: +94 11 2472113 | Fax: +94 11 2433904**

**E-mail: sales@rainbowst.com, acc@rainbowst.com**

**Website: www.rainbowsts.com**


Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd., at No.185, Grandpass Road, Colombo -14, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org